பக்கங்கள்: 20

விலை: 30.00

THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:39 22.01.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

HELP N.G.O.
சமூகத்திற்கு உதவத் தடை விதிக்கும் வரையறைகள்
செல்வின்
பக்கம்
04



முல்லைத்தீவின் தங்க மங்கை
பக்கம்
19

அ.நிக்ஸன்

# இந்தியாவின் புவிசார் அணுகு முறைக்குள் தமிழர்கள்



**அமெரிக்க நட்பு நாடுகளையும் இணைத்துக் கொண்டு ஆசியான் நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தம் மூலம் கொழும்பு போட் சிற்றியில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முதலீட்டாளர்களையும் இலங்கைக்கு வரவழைக்கக் கூடிய சூழல் உருவாகியுள்ளது.**




பாகிஸ்தான் தவிர்ந்த இலங்கை உள்ளிட்ட தெற்காசிய சார்க் (SAARC) நாடுகளின் பிம்ஸ்ரெக் (BIMSTEC) அமைப்பை மாத்திரம் இயக்குவதற்கு இந்தியா அண்மைய வருடங்களில் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் நிலையில் சார்க் அமைப்பைத் தொடர்ந்து செயற்படுத்தும் நோக்கத்துடன் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் பிரிசுடன் இந்திய வெளி விவகார அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துரையாடியதாகத் தெரிகின்றது.


அமெரிக்காவுடன் குவாட் (QUAD) எனும் இந்தோ பசுபிக் இராணுவ வியூகத்தில் இணைந்திருக்கும் இந்தியா, கடந்த ஏப்ரல் இறுதியில் Supply Chain Resilience Initiative (SCRI) என்ற அமைப்பை QUAD உறுப்பு நாடுகளான ஜப்பானுடனும் அவுஸ்திரேலியாவுடனும் உருவாக்கியது. பதிலடியாக இந்தியாவைத் தவிர்த்து பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் அடங்கலாகத் தெற்கு நாடுகளின் வறுமை ஒழிப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு மையத்தை (China-South Asian Countries Poverty Alleviation and Cooperative Development Centre) சீனா கடந்த ஜூலை மாதம் உருவாக்கியது.

ஆசியான் (ASEAN) நாடுகளுக்கான உலகின் பிரமாண்டமான பொருளாதாரக் கூட்டாக Regional Comprehensive Economic Partner ship (RCEP) என்பதை

▶17

# சீன-ரஷ்ய விரிசலைத் தூண்டிவிடும் மேற்குலகத்தின் உபாயங்கள்!

ஐ.வி.மகாசேனன்



கோவிட்-19 இற்குப் பின்னரான நிலைமாறு கால உலக ஒழுங்கைத் தமதாக்கி உலக அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதில் வல்லாதிக்க அரசுகள் கடும்பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகிறன. பிராந்தியரீதியில் அதிகார போட்டிகள் உக்கிரம் பெற்று வருகிறது. குறிப்பாக மத்திய ஆசியா மற்றும் முன்னாள் சோவியத் குடியரசுகளில் ரஷ்யாவின் காலூன்றலுக்கான எத்தனங்களே 2021 இன் இறுதியிலிருந்து சர்வதேச அரசியல் பரப்பை நிறுவி உள்ளது. எனினும் மென்அதிகாரத்தினூடாக உலக அதிகாரப் போட்டியில் முன்னிலையிலுள்ள சீனாவின் செயற்பாடுகளையும் கவனிக்காது செல்ல இயலாது. சீனாவின் இரும்புத்திரை அரசியலுக்கு பின்னாலான நகர்வுகளை நுணுக்கமாகக் கவனிக்கத் தவறியதன் விளைவே அதன் அபரிமித சடுதியான வெளித்தோன்றல் வளர்ச்சியாகும். இந்நிலையில் இக்கட்டுரை சர்வதேச அரசியல் பரப்பில் முதன்மைபெறும் மத்திய ஆசியாவை மையப்படுத்தி இடம்பெறும் அமெரிக்க-ரஷ்ய முரண்பாட்டில் சீனாவின் வகிபாகத்தைத் தேடுவதாக உருவாக் கப்பட்டுள்ளது.

ஆழமான அரசியல் கூட்டாண்மை மூலம் சீனாவும் ரஷ்யாவும் சமீபத்திய ஆண்டுகளில் நெருக்கமாக வளர்ந்து வருகின்றன. உலக அதிகாரத்திற்கான போட்டியில் ரஷ்ய-சீன கூட்டாண்மையும் அமெரிக்காவிற்குப் பெரும் சவாலுக்குரியதாகவும் காணப்படுகிறது. இந்நிலையில், முன்னாள் சோவியத் குடியரசுகள் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு எண்ணங்கள் சார்ந்து இரு நாடுகளின் போட்டியிடும் நலன்கள் சில நேரங்களில் அவற்றின் உறவுகளைத் தடம் புரட்டும் காரணியாகச் சர்வதேச அரசியல் பரப்பில் கருதப்படுகின்றன. குறிப்பாக, உலக அதிகாரத்தை இலக்கு வைத்து நகரும் சீனாவிற்கு ரஷ்யாவின் சோவியத் குடியரசு சார்ந்த எழுச்சி அச்சுறுத்தலாகக்கூடியது என்ற விமர்சனம் காணப்படுகிறது. இருதுருவ உலக ஒழுங்கில் ரஷ்யா சோவியத் ஒன்றியமாகவே உலக அதிகாரத்தில் வல்லாதிக்க சக்தியாக மிளிர்ந்திருந்தது. அத்துடன் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னால் சீனாவில் டெங் சியாவோ பிங்கால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களும் ஒரு காரணமாகக் கொள்ளப்படுவதுண்டு. இந்நிலையில் மீளபுடின் தலைமையிலான சோவியத் ஒன்றிய மீளுருவாக்கச் சிந்தனை சீனாவுக்கு அச்சுறுத்தலானது என்ற பிரச்சாரம் மேற்கு ஊடகங்களில் அதிகம் உரையாடப்படுகின்றது.

இச்சூழலிலேயே, 2021 இன் இறுதியிலிருந்து அதிகரித்துவரும் சோவியத் குடியரசுகள் மீதான ரஷ்யாவின் ஈடுபாடு சீனாவின் நலனுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய சூழல் காணப்படுகின்றதா என்பதை சீன-ரஷ்ய உறவின் சமகால நிலைப்பாடுகளுடாக நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகிறது.

ஒன்று, சோவியத் குடியரசுகள் மீதான ரஷ்யாவின் ஈடுபாடு சீனா மீதான சர்வதேச நெருக்கடியைத் தளர்த்த செய்துள்ளது. சீன-தைவான் நெருக்கடி சர்வதேச பரப்பில் வலுவிழந்து செல்வதற்கு சோவியத் குடியரசுகள் மீதான ரஷ்யாவின் ஈடுபாட்டை முதன்மைப்படுத்திய செய்திகள் காரணமாயுள்ளது. சீனா அதிகம் தனது இரும்புத்திரை அரசியல் நகர்வுகளுடாகவே தன் இருப்பை வலுப்படுத்தி வந்துள்ளது. எனினும் கோவிட்-19 க்கு பின்னர் உலக அரசியல்ப் பார்வை அதிகம் சீனா பக்கம் திரும்பியுள்ளமையால் சீனாவின் அரசியல் செயற்பாடுகளின் இரும்புத்திரை நகர்வுகளில் அதிக இடைவெளிகள் காணப்பட்டது. ஹொங்கொங்கை இலகுவாக தனது ஆளுகைக்குள் வலுப்படுத்திய சீன - தைவான் விவகாரத்தில் நெருக்கடியை எதிர்கொள்வதற்குப் பிரதான காரணம் சீனா மீது குவிந்துள்ள பார்வையேயாகும்.

சோவியத் குடியரசுகள் மீது அதிகரித்து வரும் ரஷ்யாவின் அதிகாரப்பரவலினால் சர்வதேச அரசியல் பார்வை ரஷ்சிய பக்கம் திரும்பியுள்ளது. இதனால் சீனாவின் இரும்புத்திரை அரசியல் நடவடிக்கைகளுக்கான வாய்ப்பு மீள அதிகரித்துள்ளது. நிக்கேய் ஆசியா (Nikkei Asia) எனும் செய்தித் தளத்தில் ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தின் சீனாவின் ஈடுபாடு பற்றி எழுதியுள்ள, ‘உக்ரைன் நெருக்கடி செல்வாக்கு மண்டலங்களில் வல்லரசுகளின் சண்டையை எடுத்துக்காட்டுகிறது’ எனும் தலைப்பிலான கட்டுரைக்கான அறிமுகத்தில் வழங்கப்பட்டுள்ள “ரஷ்யாவும் அமெரிக்காவும் கிழக்கு ஐரோப்பாவில் கவனம் செலுத்துவதால், சீனா தைவானுக்குக் குறிப்புகளை எடுத்து வருகிறது” எனும் கருத்தாடலே நிதர்சனமானதாகும்.

இரண்டு, ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தின் சீனாவின் கரிசணை உயரளவில் காணப்படுகிறது. சீன-தைவான் விவகாரத்தை ஒத்த சூழலே ரஷ்ய-உக்ரைன் விவகாரத்திலும் காணப்படுகிறது. சீன-தைவான் விவகாரத்தில் அமெரிக்கா தைவானுக்கு சார்பான நிலைப்பாட்டில் சீனாவின் தைவான் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்து நின்றது. அவ்வாறே ரஷ்ய-உக்ரைன் விவகாரத்தில் உக்ரைனை ஆக்கிரமிக்கும் எத்தனிப்புக்களை ரஷ்யா முன்னெடுக்கையில் அமெரிக்கா ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு எத்தனத்துக்கு எதிராகச் செயலாற்றுகிறது. பல தைவானியர்கள், சீனா ‘ரஷ்ய-உக்ரைன்’ விவகார முடிவை கவனமாகக் கவனித்து வருவதாக நம்புகிறார்கள். மேலும், இது அவர்களின் தீவுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இது தைவான் நிலப்பரப்பு சீனாவுடன் மீண்டும் ஒன்றிணைக்கும் நிலையான அச்சுறுத்தலுடன் இணைகிறது.

சீன-தைவான் உறவுகளில் நிபுணத்துவம் பெற்ற நியூ தைபே நகரின் தம்காங் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியரான அலெக்சாண்டர் சி. ஹூவாங், நடக்கும் நிகழ்வுகளைப் பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஹூவாங் 2014 இன் ரஷ்யா கிரிமியாவை வலுக்கட்டாயமாக இணைத்து, உக்ரைனின் கிழக்குப் பகுதியை ஆக்கிரமித்தபோது, மேற்கின் வலிமையற்ற பதிலைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகக் கூறுகிறார். “தைவான் மீது படையெடுக்கும் போது ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை சீனா பின்பற்ற விரும்புகிறது என்று நான் நம்பினேன்” என ஹூவாங் குறிப்பிடுகிறார். தைவானின் தேசிய பாதுகாப்புப் பணியகம் 2019 இல் பாராளுமன்றத்திற்கு ஒரு அறிக்கையில் “கிரிமியாவை இணைக்க ரஷ்யா பயன்படுத்தும் முறைகளை தைவானுக்கு எதிராக சீன கம்யூனிஸ்ட் கட்சி நகலெடுக்கிறது” என்று ஒப்புக்கொண்டுள்ளது. எனவே ரஷ்ய-உக்ரைன் முடிவில் சீனாவின் நலனும் ஒருங்கு சேர்ந்து இருப்பதனால் ரஷ்யாவின் வெற்றிக்கான நகர்வுகளில் சீனாவின் ஈடுபாடும் உயரளவில் காணப்படவே வாய்ப்புள்ளது.

மூன்று, மத்திய ஆசிய பிராந்தியத்தில் ரஷ்யா முக்கிய இராணுவ வழங்குனராகக் காணப்பட்டாலும், சமீபத்திய ஆண்டுகளில் மத்திய ஆசியப் பாதுகாப்பில் சீனாவின் மெதுவான முயற்சியும் அவதானிக்கப்படுகிறது. பல பில்லியன் டாலர் மதிப்புள்ள பட்டி மற்றும் சாலை முன்முயற்சி உட்கட்டமைப்பு திட்டத்தின் மூலம் அதிகரித்து வரும் செல்வாக்குடன் மத்திய ஆசியாவில் அதிகரித்து வரும் அதிகாரப்பூர்வமற்ற புறக்காவல் நிலையங்கள் மற்றும் அதிகரித்த பயிற்சி மத்திய ஆசியாவில் சீன-ரஷ்ய நலன்களிடையே மோதலுக்கான வாய்ப்பு தென்படுவதாக அவதானிக்கப்படுகிறது. எனினும், மாஸ்கோ மாநில சர்வதேச உறவுகள் நிறுவனம் மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான நிறுவனம் என்வற்றில் சீனாவின் உயரடுக்கு அரசியல் மற்றும் சீன-ரஷ்ய உறவுகள் தொடர்பில் ஆய்வுகளை முதன்மைப்படுத்தும் மூத்த அரசறிவியல் ஆராய்ச்சி நிபுணர் இகோர் டெனிசோவ் இக்கருத்தை முழுமையாக நிராகரித்துள்ளார்.

மத்திய ஆசியாவில் சீனா மற்றும் ரஷ்யாவின் ஈடுபாட்டை பற்றி இகோர் டெனிசோவ் குறிப்பிடுகையில், “மத்திய ஆசியாவில் மாஸ்கோவிற்கும் பீஜிங்கிற்கும் இடையிலான தொழிலாளர் பிரிவின் நிலையான தர்க்கம் ரஷ்யா பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்றும் சீனா பொருளாதாரத்திற்குப் பொறுப்பாகும் என்றும் கூறுகிறது.” என்கின்றார். இந்த எண்ணங்களுடனேயே ரஷ்யாவின் மத்திய ஆசிய நடவடிக்கைகளை சீனா கருத்தில் கொள்கிறது. மத்திய ஆசியாவில் சீனாவின் பொருளாதாரச் செல்வாக்குக் காணப்படுகின்றபோதி லும், பீஜிங் மாஸ்கோவை விட மிகக் குறைவான அரசியல் செல்வாக்கையே கொண்டுள்ளது.

> உலக அதிகாரத்தை இலக்கு வைத்து நகரும் சீனாவிற்கு ரஷ்யாவின் சோவியத் குடியரசு சார்ந்த எழுச்சி அச்சுறுத்தலாகக்கூடியது என்ற விமர்சனம் காணப்படுகிறது. இருதுருவ உலக ஒழுங்கில் ரஷ்யா சோவியத் ஒன்றியமாகவே உலக அதிகாரத்தில் வல்லாதிக்க சக்தியாக மிளிர்ந்திருந்தது. அத்துடன் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னால் சீனாவில் டெங் சியாவோ பிங்கால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களும் ஒரு காரணமாகக் கொள்ளப்படுவதுண்டு.

நான்கு, மத்திய ஆசியாவில் ரஷ்ய-சீனா கொண்டுள்ள புரிந்துணர்வின் போக்கிலேயே கஜகஸ்தான் விவகாரமும் அணுகப்படுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ரஷ்யா கஜகஸ்தானில் உருவாகிய உள்ளக வன்முறையை சீர்செய்ய கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம்-ஜோமார்ட் டோகாயேவின் அழைப்பில் இராணுவ துருப்புக்களை அனுப்பியமையானது, சீன பொருட்கள் மற்றும் முதலீட்டில் கஜகஸ்தானின் ஆர்வத்தைக் குறைக்காது. வன்முறையாளர்களால் ஏற்பட்ட சேதத்தைச் சரிசெய்வதில் பங்கேற்பது மற்றும் கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கு உதவுவது போன்றவற்றில் பீஜிங் ஒரு நல்ல முதலீட்டாளராக தனது வடிவத்தை கஜகஸ்தானில் மேம்படுத்திக் கொள்ள முடியும். சீனாவும் ரஷ்யாவும் தங்கள் பரஸ்பர அண்டை நாடான கஜகஸ்தானில் வன்முறை அமைதியின்மையைக் கையாண்டுள்ள முறைமையானது, இரு நாடுகளையும் இன்னும் நெருக்கமாக்கியுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



வேகமாக நகரும் மற்றும் அதிக பங்கு நெருக்கடியின் போது இரு சக்திகளும் ஒருவருக்கொருவர் இடமளிக்க விரும்பும் நீளத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது. வார்சாவில் உள்ள கிழக்கு ஆய்வு மையத்தின் மூத்த சக ஜக்குப் ஜகோபோவ்ஸ்கி கஜகஸ்தான் விவகாரத்தில் ரஷ்யா மற்றும் சீனா மேற்கொண்ட நடவடிக்கை பற்றிக் குறிப்பிடுகையில், “மத்திய ஆசியாவில் சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான உறவு மிகவும் நிலையானது என்பதை கஜகஸ்தானில் ஏற்பட்ட நெருக்கடி நிரூபித்துள்ளது” என்று கூறியுள்ளார். எனவே, மேற்கு ஊடகங்கள் சீன-ரஷ்யா விடையே விரிசல்களை ஏற்படுத்தும் உரையாடல்களை பொதுவெளியில் உருவாக்குகின்ற போதிலும் களத்தில் சீனா மற்றும் ரஷ்யா தங்களிடையே பகிரப்பட்டுள்ள இடைவெளியை சீராக கையாண்டு பயணிக்கின்றமையையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனூடாக சீன-ரஷ்யா கூட்டு ஆசிய மற்றும் ஐரோப்பியாவில் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குத் தொடர்ச்சியாக அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய சக்திகளாகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

இலங்கையில் அரசியல் ரீதியாகப் பல பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றி அவற்றுக்கான தீர்வுகள் அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்கு மட்டும் கிடைத்தன. தமிழர் பிரச்சினை மட்டும் புரையோடிப்போய் இன்னமும் தீர்க்கப்பட முடியாத நிலையில் இருக்கிறது. ஒரு சிங்களத் தலைமை பிரச்சினையைத் தீர்க்க முன் வரும்போது இன்னொரு தலைமை அதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து தடுத்து விடுவது கடந்தகால வரலாறு.

தமிழர் பிரச்சினைக்கு அவ்வவ்போது தீர்வு வருவது போன்ற ஒளிக்கீற்று ஒன்று தென்படும். பின்னர், அது மறைந்துவிடும். சமாதானம் செய்ய வந்த வெள்ளைப் புறாவும் இரத்தத்தில் தோய்ந்தது. புதிதாகப் பதவி ஏற்கும் அரசாங்கங்களை சர்வதேசம் தமிழ்த் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வைக்கும். அந்தப் பேச்சு வார்த்தை அநேகமாக முதலில் இருந்தே ஆரம்பமாகும்.

பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்ற கோட்பாட்டுடன் ஆட்சி பீடமேறிய கோட்டபாய ஜனாதிபதியானதும் கடந்த இரண்டு வருடங்களாக எதிர்பார்க்காத பல்வேறு சிக்கல்களுக்குள் சிக்கி இன்று நாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த தமிழர் தரப்பும் சர்வதேசமும் பல்வேறு ராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் தமிழ்த் தலைவர்களில் சிலர் அமெரிக்காவுக்குப் பறந்தனர். சிலர் இந்தியாவின் பக்கம் ஒதுங்கினர். இதில் தமிழ்த்தரப்பு ஆரம்பப் புள்ளியாக 13ஐ ஆவது முதலில் அமுல்ப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவுக்குக் கடிதம் கையளித்துள்ளனர். இந்த நிலையில் தற்போதுள்ள இலங்கைக்கான அழுத்தங்களில் இருந்து தப்பிப்பதற்கு தமிழர்களுக் கான அரசியல் பிரச்சினைக்கான தீர்வை ஜனாதிபதி வெளியிடப் போகிறார் என்ற செய்தியும் ஒன்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கும் உரையில் நாட்டின் எதிர்காலம் பற்றிய முக்கியமான திட்டங்களை வெளியிடுவது வழமை. 9 ஆவது பாரளுமன்ற இரண்டாவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ விடம் இருந்து தமிழர் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய முன் அறிவிப்பு வரும் என தமிழ்த் தலைவர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தமிழ்த் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு வார்த்தை நடத்துவார் என்ற செய்தியும் இறக்கை கட்டிப் பறந்தது. இதனால் சில தமிழ்த் தலைவர்கள் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். ஜனாதிபதியின் உரையில், தான் எதிர்பார்த்த எதுவும் இல்லாமையினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஏமாற்றமடைந்தார். அதன் எதிரொலியாகப் பஸிலுடன் அவர் சீறிப் பாய்ந்தார்.

கடந்த கால சிங்கள அரசியல் தலைவர்கள் எவருமே இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் நேர்மையுடன் செயற்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக முடக்கப்பட்டது. சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை ரணில் எதிர்த்தார், ரணிலின் தீர்வுத் திட்டத்தை சந்திரிகா எதிர்த்தார். சந்திரிகா, ரணில் ஆகிய இருவரும் இணைந்து நல்லாட்சி செய்யப் போகையில் மகிந்த எதிர்த்தார்.

வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் சிலை வைத்தல், புத்த விகாரை கட்டுதல், மற்றும் காணி அபகரிப்புப் போன்ற விடயங்கள் அனைத்தும் 2015 இல் மைத்திரி- ரணில் அரசாங்கத்தில் கொழும்பை மையப் படுத்திய திணைக்களங்களினாலேயே மேற் கொள்ளப்பட்டன.

தமிழ்த்தலைவர்கள் ஜனாதிபதியின் உரையில் உப்புச் சப்பில்லை என்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர்களும் ஜனாதிபதியின் உரையைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். ஆனால், ஆளும் தரப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியின் உரை சிறப்பானதெனக் கூறுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஒருபடி மேலே போய் ஜனாதிபதியின் கையை தமிழ்த் தலைவர்கள் பற்றிப்பிடிக்க வேண்டும் என்கிறார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று அரச தலைவரின் சிம்மாசன உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எவ்வித விடயங்களும் குறிப்பிடப்படவில்லை எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

ஜனாதிபதி கோட்டபாயவின் கொள்கைகள் அனைத்தையும் தெரிந்துகொண்ட சம்பந்தன் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை அவர் தருவார் என எப்படி எதிர்பார்த்தார்.

2009 இல் இறுதிப் போரை நடத்திய இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இனப்பிரச்சினையை வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாகச் சித்தரித்திருக்கும் நிலையில் அவரிடம் இருந்து வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. சிங்கள கடும் போக்களர்களின் வாக்குகள்தான் கோட்டபாயவை ஜனாதிபதியாக்கியது. தமிழ், முஸ்லிம் வாக்குகள் தேவை இல்லை என்பதை அந்தத் தேர்தல் உணர்த்தியது. சிங்கள மக்களும் சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பௌத்த குருமாரும் விரும்புவதையே கோட்டபாய ராஜபக்ஷ தனது கொள்கை விளக்கவுரையில் எடுத்துரைத்திருக்கிறார். இது ஒன்றும் புதிய கொள்கை அல்ல.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வடக்குக் கிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். வடக்குக் கிழக்கு மக்களை அரவ ணைக்காமல் ஒத்துழைக்க வேண்டும் என்று விடுக்கப்படும் வேண்டுகோளை வடக்குக் கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறு பான்மையின மக்களும் காதுகொடுத்துக் கேட்க மாட்டார்கள். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எந்தவொரு காத்திரமான விடயமும் முன் வைக்கப்படவில்லை. சிறுபான்மையின மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்காமல் அரசாங்கத்தின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒத்துழைக்க வேண்டுமென்று வடக்குக் கிழக்குப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுப்பதில் எவ்வித யதார்த்தமும் இல்லை.

■

# அரசியல் தலைவர்களின் சதுரங்க ஆட்டம்

ஊர்மிளா

இலங்கைக்கு எந்தக் காலமும் இல்லாத ஒரு நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தில் இருந்து சுதந்திரக் கட்சி வெளியேறும் என்று மைத்திரி தெரிவித்திருக்கிறார். கட்சியில் இருந்து மைத்திரியை அப்புறப்படுத்தப் போவதாக சந்திரிகா தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் காலை வார சுதந்திரக் கட்சி தயாராக இல்லை என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால தெரிவித்துள்ளார்.

ஒரு கட்சியில் உள்ள மூன்று மூத்த அரசியல்வாதிகள் மூன்று விதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ராஜபக்ஷக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியோடு இணைந்து அந்த அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்தால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினரின் மகளுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் கட்சியின் மூத்த உறுப்பினராகவும் இருக்கும் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவை 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிரதமராக்கி 52 நாட்கள் நடாத்திய அரசியல் நாடகம் பெரும் சாபக்கேடு என்றும் கூறினார்.

பண்டாரநாயக்கவின் கட்சியை மகிந்தவும் மைத்திரியும் சீரழித்துவிட்டனர் எனத் தெரிவித்தார் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைய வேண்டாம் என சந்திரிகா கூறியதை மைத்திரி கேட்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரிய மரியாதையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கொடுக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதிக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கவில்லை. மைத்திரியின் செயற்பாட்டால்



அரசியல் அரங்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காணாமல் போய்விட்டதாக சந்திரிகா கருதுகிறார். அதனை மீட்டெடுக்க வேண்டிய கடப்பாடு அவருக்கு இருக்கிறது. தனது தகப்பன் உருவாக்கிய கட்சியை மீட்டெடுக்க வேண்டும், அல்லது புதிய அணி ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் சந்திரிகா குறியாக இருக்கிறார். அதற்காக கொழும்பில் உள்ள முக்கியஸ்தர்கள் சந்திரிகாவின் முயற்சி வெற்றி பெறுவது எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையில் தங்கி உள்ளது என்றுள்ளனர். ரணிலும் சஜித்தும் ஆளுக்கொரு பக்கம் இருக்கின்றனர். அவர்கள் இருவரும் ஒரு நேர்கோட்டில் வரமாட்டார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரியின் பிடியில் உள்ளது. சந்திரிகா, மைத்திரி, ரணில், சஜித் ஆகிய நால்வரும் ஒன்றிணைந்தால்தான் எதிர்க்கட்சி பலமாக இருக்கும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு முரண்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள மூத்த உறுப்பினர்களையும் ரணில், சஜித் ஆகியோரின் இரு பிரதான எதிர்க்கட்சிகளில் உள்ள மூத்த உறுப்பினர்கள் சிலரையும் இணைத்தே புதிய அரசியல் அணியை உருவாக்க சந்திரிகா முற்படுவதாகக் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளிடையே தற்போது முரண்பாடுகள் உருவாகியுள்ள சூழலில், அரசாங்கத்துக்குள் இருந்து முரண்படும் சிறிய கட்சிகள் வெளியேறி எதிர்க்கட்சிகளோடு இணைய முடியாதவொரு பின்னணியிலேயே, சந்திரிகா புதிய அரசியல் அணியை உருவாக்குவது குறித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகள் உட்பட பல அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து புதிய பொதுக் கூட்டணியை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட்டுள்ளது. இது குறித்த பேச்சுவார்த்தைகள் கடந்த சில மாதங்களாக இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ள அரசியல் வட்டாரங்கள் அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகள் அதிலிருந்து விலகி பொதுக்கூட்டணியில் இணைவதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தக் கூட்டணிக்கு பொதுவேட்பாளராக யார் தலைமை தாங்குவார் என்ற விடயத்திற்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

எதிர்கால தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஏற்ற வகையில் புதிய அரசியல் கூட்டணி தொடர்பான இறுதிமுடிவுகள் இந்த வருடத்திற்குள் எடுக்கப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சந்திரிகா, சஜித், ரணில், மைத்திரி ஆகிய நால்வரும் ஒன்றிணைந்து செயற்பட்டால்தான் உரிய இலக்கினை அடைய முடியும்.

■

# சமூகத்திற்கு உதவத் தடை விதிக்கும் வரையறைகள்

செல்வின்

அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரமும் அதன் பல்வேறு கூறுகளும் பல மட்டங்களில் பல நோக்கங்களைத் தனியாகவும் கூட்டாகவும் அடைவதற்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் என உருவாக்கப்பட்டன. பொருத்தமான ஆளணி வளங்கள், நிதிவளம், பௌதீக வளம் மற்றும் சட்டமுறையான ஆணையும் அதிகாரமும் பொறுப்புக்களும் கொண்டதாக உள்ளன. இத்தகைய அரசாங்க நிறுவனங்கள் தமக்குரிய ஆணைக்குட்பட்டதாகவே தங்களுக்குரிய பணிகளை முன்னெடுக்கும். அதற்கென உள்வாங்கப்படும் ஊழியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடமைப்பட்டியல் சார்ந்தே பணிகளைச் செய்வர். அவர்களது செயற்பாடும் பணிசெய்யும் முறைமையும் அரசாங்கத்தின் அல்லது தாங்கள் சார்ந்த நிறுவனத்தின் விதிகள், வரையறைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

மரபு சார்ந்ததாக நோக்கும் போது அரசாங்க பணியாட்களாக இணைபவர்களில் பெருமளவிலானோர் தங்களுக்கான பாதுகாப்பான வேலைவாய்ப்பு மற்றும் இளைப்பாற்றுச்சம்பள அனுகூலங்கள் ஆகியவற்றைக் கருதியே அரசாங்க உத்தியோகங்களில் இணைகின்றனர். அவர்கள் பணியாற்றும் துறைசார்ந்து சமூகநோக்கோடு தங்களது சேவைப்பரப்பினை விரிவாக்கல் என்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.

அரசாங்கத் துறைசார்ந்த மாகாண மற்றும் மத்திய அமைச்சின் திணைக்களங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவை முன்னெடுக்கும் செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் தேசிய மற்றும் மாகாணம் தழுவிய கொள்கைகள், தகுதிவிதிகள், பிரமாணங்கள், நிதி ஒதுக்கீட்டு சூத்திரங்கள் பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான விதிகள் ஆகியவற்றிற்குள் கட்டுப்பட்டு தயாரிக்கப்படுபவை அதனால் அவை முழுமையாக உள்ளூர் சமூகங்களுக்கும் கிராமங்களுக்கும் பொருத்தமானவையாகவும் ஏற்புடையதானதாகவும் இருக்கும் என முடிவுக்கு வரமுடியாது. இத்தகைய திட்டங்களை மேலிருந்து கீழ் அமுல்படுத்தப்படும் திட்டங்களாகவே குறிப்பிடலாம். இத்தகைய திட்டங்களின் போது குறிப்பிட்ட கிராமத்தின் அல்லது பயனாளிகள் குழுவின் முன்னுரிமைகளும் பிரச்சினைகளும் என்ற அடிப்படையில் நோக்காமல் பரந்த அளவில் திட்டங்கள் செயற்படுத்தவேண்டும் என்ற அளவீடு முன்னிலைப் படுத்தப்படுகின்றது ஆகையினால் அத்திட்டங்களால் எந்தவொரு விடயமும் முழுமையாகத் தீர்க்கப்பட்டதாகவோ நிறைவு செய்யப்பட்டதாகவோ போதிய ஆதாரங்களைக் காணமுடியவில்லை. அத்துடன் அத்திட்டங்களின் நிலைத்துப் பயனளிக்கும் தன்மையும் மிகவும் பலவீனமாகவே அமைகின்றது.

அரசாங்கத் துறைக்கு வெளியே அரசாங்க சார்பற்ற தன்னார்வ அமைப்புக்களும் இலாபநோக்கமற்ற தன்னார்வ அமைப்புகளும் இருக்கின்றன. இந்த அமைப்புக்கள் மனிதநேய அமைப்புக்களாகவும் சமூக வலுவூட்டல்கள் வாழ்வாதார அபிவிருத்தி போன்ற விடயங்களில் அக்கறை கொண்ட நிறுவனங்களாகச் செயற்படுகின்றனர். எனினும் தங்களுக்கு நிதிவழங்கும் நிறுவனங்களின் கோட்பாடுகள், கொள்கைகள் ஆகிய அடிப்படையான கொள்கைகளையும் அவர்களது கால அட்டவணையினையும் நெறிப்படுத்தல்களையும் சார்ந்தவர்களாக இருப்பதனால் அத்தகைய அமைப்புக்களாலும் சமூகத்திற்காகத் தங்களை முழுமையாகச் செயற்படுத்துவதில் வரையறைகள் உள்ளன.

இங்குதான் கிராமங்களும் சமூகங்களும் தங்களுக்கான பிரச்சினைகளையும் முன்னுரிமைகளையும் அடையாளங் கண்டு அவற்றுக்குப் பொருத்தமான தீர்வுகளைத் தங்களது சமூகத்திற்குப் பொருந்தக்கூடிய வகையிலும் ஏற்புடையதான வகையிலும் கண்டறியவும் அவற்றுக் கான சமூகமட்ட வளங்களைத் திரட்டவும் மேலதிக வளங்களை அரசாங்கத்திடமிருந்தும் அரச சார்பற்ற அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கோரவும் பொருத் தமான பொறிமுறையினை உருவாக்க வேண்டியுள் ளது. இத்தகைய திட்டமிடல் அணுகு முறையினைக் கீழிருந்து மேல் நோக்கிய சமூக மட்ட திட்டமிடல் எனக் குறிப்பிடுவர். இத்திட்டமிடல் அணுகுமுறையினை பல தசாப்தங்களாக பல மட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டும் சமூக நிறுவனங்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவிலான பயிற்சிகள் வழங்கப்பட்டும் இருந்தாலும் நடைமுறையில் அதற்கு எதிரான செயற்பாடுகளே முன்னிறுத்தப்படுகின்றன. இதற்குப் பல காரணங்கள் முதன்மையானவைகளாக அடையாளங்காணலாம்.

- அரசியல்வாதிகளின் அளவுக்கு மீறிய அழுத்தமும் இடையீடுகளும்.
- நிர்வாக அதிகாரத்திலுள்ள அதிகாரிகளின் பொறுமையற்றதும் பொறுப்பற்றதுமான தீர்மானமெடுத்தல் செயற்பாடுகள்.
- சமூகமட்ட களநிலை உத்தியோகத்தர்களின் போதிய பயிற்சியின்மை, ஆர்வக் குறைபாடு, பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கும் மனோபாவம் ஆகியவை.
- சமூகமட்ட நிறுவனங்கள் எல்லா சமூகங்களுக்கும் கிராமங்களுக்கும் என உருவாக்கப்படாமை, முழுமையாகச் செயற்படாமை, அவற்றின் தலைமைத்துவப்பதவிகள் ஒரு சிலரின் குழுநிலை ஆதிக்கத்தினுள் தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்தப்பட்டு வருவதனாலும் ஆக்கபூர்வமாகப் பங்களிக்கக் கூடியவர்களைப் புறந்தள்ளி வைப்பது.

இங்கு ஒட்டுமொத்தமாகப் பார்ப்போமானால் சமூகங்களை தங்களது அதிகாரக் கட்டமைப்பின் அடிமைகளாகவும் தங்களது அதிகாரம் அல்லது செல்வாக்கின் கீழ் தங்கிவாழும் மக்களாகவும் தொடர்ச்சியாகத் தங்கவைப்பதினால் ஏற்படக்கூடிய தமக்குச் சாதகமான சூழலினையே அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் விரும்புகின்றனர்.

இந்தக் கையறுநிலை மாற்றப்படவேண்டும். மக்கள் சமூகமாக வலுவூட்டப்படவேண்டும். அவர்களது சமூக மட்ட நிறுவனங்களும் கிராமமட்ட நிறுவனங்களும் பொருத்தமானதும் ஆக்கபூர்வமான முறையிலும் சீரமைக்கப்பட்டு வலுவூட்டப்பட வேண்டும். எங்கள் சமூகத்தில் மிக நீண்ட பாரம்பரியத்தையும் சமூக ஏற்புடைமையினையும் கொண்ட நிறுவனங்கள் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்துள்ளன. இத்தகைய அமைப்புக்களில் கிராமச் சங்கங்கள், கூட்டுறவு இயக்கம், சனசமூக நிலையங்கள் ஆகியன முக்கியமானவை. இவை மூன்றும் சமூக மட்டத்தில் இயங்கினாலும் மூன்று வேறுபட்ட பரிமாணங்களைக்கொண்டதாகும்.




கிராமச் சங்கங்கள் சமூகத்தின் வாழ்புலத்தை மையமாகக் கொண்டு இயற்கை வளங்களையும் மக்களது வாழ்வியல் ஒழுங்கினையும் நெறிப்படுத்துவதற்கும் தலைமைதாங்குவதற்கும் உரிய நிறுவனங்களாக இருக்கின்றன. கூட்டுறவு இயக்கம் மக்களின் வாழ்வாதாரப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவர்களைச் சந்தைச் சுரண்டலிலிருந்து பாதுகாப்பதுடன் சமூகத்தினுள் நிலவக்கூடிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் நலிந்தவர்களின் அடிப்படையான பொருளாதாரத் தேவைகள் புறந்தள்ளப்படாமலிருப்பதனை உறுதி செய்கின்றன. சனசமூக நிறுவனங்கள் சமூகத்தின் அங்கத்தவர்களின் உடல் , உள ஆரோக்கியம், சுற்றுச் சூழல், கூட் டுவாழ்வு, கலை கலாசார மேம்பாடு, சமூக அறிவூட் டலும் ஆரம்ப மற்றும் வளர்ந்தோருக்கான கல்வி, விளையாட்டு எனப் பல வகையில் மக்களுக்கு உதவுகின்றது.

இந்த நாட்டிற்கென ஒரு அரசியலமைப்புச் சட்டம், அரசாங்கத்தின் சட்டங்களும் சுற்றறிக்கைகள் அறிமுகப்படுத்த முன்பே சமூகங்கள் தங்களுக்கென மரபு சார்ந்த நிறுவனங்களைத் தன்னியல்பாக உருவாக்கித் தங்களை வளப்படுத்தி வந்துள்ளன. இவற்றில் முதன்மையான நிறுவனமாக கிராம பஞ்சாயத்து முறை அறியப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்புக்கள் அந்த அந்தச் சமூகங்களின் தொடர்ச்சியான இருப்பினதும் செழுமை மிகு பண்பாட்டு தொடர்ச்சியினதும் அடையாளங்களாக இருக்கின்றன. அவற்றைத் தக்கவைப்பதன் மூலம் தான் அந்தச் சமூகத்தின் வரலாற்றுப் பாரம்பரியத்தையும் தன்னம்பிக்கையினையும் கட்டியெழுப்ப முடியும்.

இத்தகைய சமூக நிறுவனங்களைப் பலமிழக்க வைப்பதும் அவற்றுக்கு மாற்றாக தேசிய மற்றும் மாகாண அமைப்புக்களை பதிலீடு செய்வதும் மிகவும் ஆபத்தான அணுகுமுறை யாகும். மரபுசார்ந்த இத்தகைய நிறுவனங்கள் சிலவேளைகளில் காலமாற்றத்திற்கு ஏற்ப கையாள முடியாத அல்லது பொருத்தப்பாடற்ற மரபுகளைக் கொண்டிருக்கலாம். அவற்றைச் செம்மைப் படுத்துவதற்கான முயற்சிகள் அந்த அந்தச் சமூகங்களின் முழுமையான உடன்பாட்டுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். முற்றாக சமூக நிறுவனங்களின் மூலவேர்களையே தகர்க்கும் முயற்சிகள் அனுமதிக்கப்படக்கூடாது. அத்தகைய முயற்சிகள் மூர்க்கத்தனத்துடன் சமூகங்களின் நலன்கருதியதாக எதிர்க்கப்படவேண்டும்.

தற்போது சீர்திருத்தவாதிகள் எனத் தங்களை அடையாளங்காட்டிக் கொள்பவர்களாலும் ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட "ஒரு நாடு ஒரு சட்டம்" என்ற கருப்பொருளின் ஆணைக் குழுவினராலும் வடக்கின் குடிமக்கள் தம்மீது பிரயோகிக்கும் "தேச வழமைச் சட்டம்" தொடர்பாக வாதம் ஒன்று கட்டமைக்கப் பட்டு வருகின்றது. இவ்விடயம் மிகவும் அறிவு பூர்வமானதாகவும் தர்க்கபூர்வமானதாகவும் மட்டுமன்றி அரசியல்-சமூகவியல் சார்ந்தும் ஆய்வுக்குட்படுத்தப் பட்டு, பரந்த தளத்தில் சமூக மட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டும். சட்டவல்லுனர்களினதும் அரசியல் தலைவர்களினதும் சீர்திருத்த சிந்தனையாளர்களினதும் நோக்கிலிருந்து மட்டும் இதனை அணுகி மாற்றங்களை முன்னெடுக்க அனுமதிப்பது சமூகங்களின் வேர்களை அறுத்து இருப்பின் அடிப்படைகளையே தகர்க்கும் முயற்சியாக மாறிவிடும்.

இலங்கைத் தீவின் மக்கள் எதிர்கொண்டுள்ள பெருந்தொற்றின் தொடர்தாக்கமும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான பற்றாக்குறையும் உணவு உற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சியும் சமூகங்களைப் பல பரிமாணங்களில் சங்கிலித் தொடராகப் பாதிக்கக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக நீண்ட யுத்தம், இடப்பெயர்வு, சமூகவிரோதக் காரணிகளின் அத்துமீறல்கள், வறுமை, ஊதிப்பெருத்துள்ள நுகர்வுப் பொருளாதாரம், பொறுப்புக்கூறல் கடப்பாட்டை ஏற்கமறுக்கும் அரசியல்வாதிகளும் அதிகாரக்கதிரைகளை அலங்கரிப்போரும் எனப் பலகாரணிகளால் மேலும் மேலும் வடக்கு - கிழக்கு பிராந்திய மக்களின் நெருக்கடியினை கூர்மைப்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன.

தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டவேண்டும். சமூகமாகத் தயார்படுத்த வேண்டும். போதியளவு உணவு உற்பத்தியும் பாதுகாப்பும் சமூக மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். பிரமாண்ட இராட்சதனாக எழுந்து நிற்கின்ற சந்தைச்சுரண்டல் பொறிமுறையினை வேரோடு தகர்க்கவேண்டும்.

உடல், உள ஆரோக்கியம், தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்பு, சமூக ஒழுக்கமும் அமைதியும் பேணப்படல், விரிவடைந்து வரும் எரிபொருள் மற்றும் சமையல் வாயுத் தட்டுப்பாடு காரணமாகவும் எதிர்பார்க்கப்படும் மின்வெட்டுக் காரணமாகவும் திடீரென அதிகரிக்கும் விறகுக்கான தேவையினை நிறைவு செய்வதற்காக சமூகத்தின் அங்கத்தவர்களாலும் விறகுத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களாலும் முன்னெடுக்கப்படப் போகும் கட்டுமீறிய மரங்களின் தறிப்பும் விறகு சேகரிப்பும் எங்களது இயற்கைச் சூழலின் சமனிலையினை பாரியளவில் பாதிக்கப்போகின்றது. ■

> **மரபு சார்ந்ததான நோக்கும் போது அரசாங்க பணியாட்களாக இணைபவர்களில் பெருமளவிலானோர் தங்களுக்கான பாதுகாப்பான வேலைவாய்ப்பு மற்றும் இளைப்பாற்றுச்சம்பள அனுகூலங்கள் ஆகியவற்றைக் கருதியே அரசாங்க உத்தியோகங்களில் இணைகின்றனர். அவர்கள் பணியாற்றும் துறைசார்ந்து சமூகநோக்கோடு தங்களது சேவைப்பரப்பினை விரிவாக்கல் என்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.**

# இலங்கைத் தமிழினப்பிரச்சினை

## ஏன் இழுபறியில் தொடருகின்றது..?

அவதானி

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து 74 வருடங்களாகப் போகின்றது. எனினும் இங்கு வாழும் மூவின மக்களும் முழுமையான சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறார்களா..?

தென்னிலங்கையில் வாழும் சிங்கள இளைஞர்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே 1971 ஆம் ஆண்டு சிங்கள இளைஞர்கள் முன்னெடுத்த ஆயுதக்கிளர்ச்சி, அதே ஆண்டு இந்திய அரசின் துணையோடு கொடூரமாக அடக்கி ஒடுக்கப்பட்டது.

அச்சமயம் இந்தியப் பிரதமராக இருந்தவர் இந்திரா காந்தி. அவரது தோழியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பதவிக்காலத்தில், குறிப்பிட்ட ஆயுதக் கிளர்ச்சிக்குப் பின்னர் 1972 இல் புதிய அரசியல் அமைப்பு வந்தது. அத்துடன் பல்கலைக்கழக பிரவேசத்தில் தரப்படுத்தல் வந்தது. அதே ஆட்சிக்காலத்தில் 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழராய்ச்சி மாநாட்டின்போது தமிழர்கள் சிலர் கொல்லப்பட்டனர். இந்தப்பின்னணிகளுடன் வடக்கில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நம்பி களம் புகுந்தனர்.



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பதவிக்குப்பின்னர் 1977 இல் பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்தனா காலத்தில் 1977 - 1981 - 1983 ஆகிய ஆண்டுகளில் கலவரங்கள் வந்தன. இடையில் யாழ். பொது நூலகமும் எரிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித்தலைவராகும் தகுதி ஒரு தமிழருக்கு (அமிர்தலிங்கம்) வந்து விட்டதே என்பதை பொறுக்க முடியாத சிங்கள கடும்போக்காளர்கள், பாராளுமன்றில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வந்து, அவரை காலிமுகத்திடலில் கழுவில் ஏற்றவேண்டும் என்றும் கோஷமிட்டனர்.

இவ்வாறு சிங்கள கடும்போக்காளர்களுக்கு ஜே.ஆரின் அரசு கொம்பு சீவிக்கொண்டிருந்தபோது, வடக்கில் தமிழ் இளைஞர்கள் அரசுக்கும், அரசின் பாதுகாப்பு படையினருக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப்போராடத் தொடங்கினர்.

இவர்களின் இயக்கங்கள் தமிழ் நாட்டிலும் இந்தியாவில் பிற மாநிலங்களிலும் ஆயுதப்பயிற்சி பெற்றன. இந்திய மத்திய அரசினதும் தமிழக அரசினதும் பூரண ஆசீர்வாதத்துடனேயே இந்தப்பயிற்சிகளை தமிழ் விடுதலை இயக்கங்கள் மேற்கொண்டன.

ஈழ அகதிகளும் இந்தியாவில் ஆயிரக்கணக்கில் தஞ்சமடைந்தனர். ஒரு கட்டத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பூட்டான் தலைநகர் திம்புவிலும் பேச்சுவார்த்தை நடந்தது. அதுவும் பயனளிக்காமல், 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தமும் உருவானது. அதிலிருந்து கிடைத்த குறைந்த பட்ச தீர்வுதான் வடக்கு - கிழக்கு மாகாண சபை முறைமை.

இறுதியில் அதனையும் சரியாக இயங்கவிடாமல் தடுத்த பெருமையும் மூவினத்தரப்பையும் சாரும்.

இந்தியாவை முழுமையாக நம்பி, ஆயுதங்களை ஒப்படைப்பதாக மானிப்பாய் சுதுமலைக்கூட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கமாகச் சொன்ன விடுதலைப்புலிகளின் தலைவர் இறுதியில் மோதலுக்கே தயாரானார். அவர் இரண்டு நாடுகளின் பாதுகாப்பு படைகளுக்கும் எதிராகவே தொடர்ந்தும் போராடினார். அவரையும் அவரது இயக்கத்தையும் குறிப்பிட்ட இரண்டு நாடுகளும் இணைந்தே 2009 இல் முறியடித்தன.

இதனைத்தான் 1971 இலும் இந்த இரண்டு நாடுகளும் செய்தன.

இவையெல்லாம் நாம் கடந்துவந்த பாதைகள். இந்தப் பாதைகளை மறக்காமல்தான், பாராளுமன்ற பாதையை நம்பிச் சென்றுகொண்டிருக்கும் எமது தமிழ்த்தேசியம் பேசும் தலைவர்களும் இந்தியாவை தொடர்ந்தும் நம்பிக்கொண்டு, கடிதம் அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு ஒரு குட்டிக்கதையை சொல்லத் தோன்றுகிறது.

ஒரு குடும்பத்தில் கணவன், தனது மனைவியை தொடர்ந்தும் அடித்து துன்புறுத்திக்கொண்டிருந்தான். அவளும் அயல்வீட்டுக்கு கேட்கக்கூடியதாக அழுது கூக்குரலிட்டாள். ஒரு கட்டத்தில் கணவனின் அடக்குமுறை பொறுக்கமுடியாமல் அயல் வீட்டில் தஞ்சமடைந்தாள்.

அந்தவீட்டுக்காரியின் கணவன் இவளுக்காகப் பரிந்து பேசவந்தான். இறுதியில் நானே உனது வீட்டில் வந்திருந்து உனக்கு பாதுகாப்பாக இருப்பேன் என்றான். அவ்வாறே நடந்தது. ஆனால், காலப்போக்கில் அயல்வீட்டானின் சில்மிஷம் அவள் மீது படியவும் அவள் வெகுண்டெழுந்தாள்.

இப்போது, அவள் தனது கணவனுக்கு எதிராகவும் அயல்வீட்டானுக்கு எதிராகவும் போராடவேண்டிய தேவை வந்தது. இதனால், அவளது குழந்தை பெரும் துன்பமடைந்தது. அந்தக் குழந்தைக்காகவாவது தான் உயிர் வாழவேண்டும் என்று அந்த ஊரையும் வெளியூரையும் சேர்ந்தவர்களிடமெல்லாம் முறையிட்டு அழுதாள்.

எனினும் அவளுக்கோ, அவளது குழந்தைக்கோ நிரந்தரமான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. விவாகரத்தின் மூலம் விடுதலை அடையவும் அவள் விரும்பினாள். ஆனால், அயலாரும் ஊரவரும் குடும்பம் பிரியக்கூடாது. தனியே குழந்தையை வளர்க்க சிரமப்படுவாய் என்றனர்.

அவளும் தீவிரமான யோசனைக்குப்பின்னர், தானும் தனது கணவனும்தானே தமது குழந்தையின் நல்வாழ்வுக்குப் பொறுப்புக்கூறல் வேண்டும் என்பதை தனது கணவனிடம் சொல்லி, சமாதானமாக வாழத் தயாராவோம் என்றாள்.

இறுதியில் சாட்சிக்காரரிடம் செல்லாமல் சண்டைக்காரனுடனேயே பேசத்தலைப்பட்டாள்.

இந்தக்கதையை வெறுமனே ஒரு குடும்பத்தில் நேர்ந்த சம்பவங்கள் என்று மாத்திரம் பார்க்காமல், எங்கள் இலங்கை தேசத்தில் தீர்க்கப்படாமலிருக்கும் தேசிய இனப்பிரச்சினையுடனும் சற்று ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். சுதந்திரம் பெற்று 74 வருடங்களாகும் இலங்கை, பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடைந்துள்ளதா..? சுற்றிலும் கடல், எனினும் வெளிநாட்டிலிருந்துதான் டின் மீன் இறக்குமதியாகிறது.

விவசாய மன்னர்களைக் கண்ட தேசம், வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்கிறது. தென்னை செழித்து வாழ்ந்த நாட்டிற்கு தேங்காயும் தேங்காய் எண்ணெயும் வெளியிலிருந்து தருவிக்கவேண்டிய சூழல் உருவாகிவருகிறது.

ஒரு காலத்தில் உலக சந்தையில் உயர்ந்த இடத்திலிருந்த இலங்கைத் தேயிலைக்கு இன்று என்ன நடந்திருக்கிறது.

இந்தப் பொருளாதாரப் பின்னடைவுகளுக்குப் பிரதானமாகவிருந்தது இலங்கையில் நீடித்திருந்த இனப்பிரச்சினைதான் என்பது தெளிவானது.

**“விவசாய மன்னர்களைக் கண்ட தேசம், வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்கிறது. தென்னை செழித்து வாழ்ந்த நாட்டிற்கு தேங்காயும் தேங்காய் எண்ணெயும் வெளியிலிருந்து தருவிக்கவேண்டிய சூழல் உருவாகிவருகிறது. ஒரு காலத்தில் உலக சந்தையில் உயர்ந்த இடத்திலிருந்த இலங்கைத் தேயிலைக்கு இன்று என்ன நடந்திருக்கிறது. இந்தப் பொருளாதார பின்னடைவுகளுக்குப் பிரதானமாகவிருந்தது இலங்கையில் நீடித்திருந்த இனப்பிரச்சினைதான் என்பது தெளிவானது.”**

இந்தப்பின்னணிகளுடன் எமது தமிழ்த்தலைவர்கள் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலும் பாதயாத்திரை மேற்கொண்டு போராட்டம் நடத்தியதோடு நில்லாமல், கடலிலும் படகுச்சவாரி போராட்டம் நடத்தினர். பின்னர் தலைவர்கள் ஒன்றுகூடி இந்தியப்பிரதமருக்கு கடிதம் அனுப்புவதில் இழுபறிப்பட்டு, இறுதியில் சுபநேரம் பார்த்து இந்தியத் தூதுவர் ஊடாக கடிதம் அனுப்ப முயற்சிக்கும் போது அவர் இந்தியாவிற்குச் சென்று விட்டார். கடந்த செவ்வாய்க் கிழமை அக்கடிதம் கையளிக்கப்பட்டது.

இவ்வேளையில், இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்குத் தயாராகியிருப்பதாகச் செய்திகள் கசியத் தொடங்கிவிட்டன.

இதுவரை காலமும் அண்டை நாட்டு சமாதானத் தூதுவர்களும் குத்திக்குத்திப்பார்த்து நெல் அரிசியாகவில்லை. மீண்டும் நெல்லையும் அறுவடை செய்து, குத்தத் தொடங்கியிருக்கும் தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்..? என்பதை வழக்கம்போன்று பொறுத்திருந்து பார்ப்போம்.

■

# சரிந்துகொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 05
## பார்வையில் மாற்றம்

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரை களையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப் புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 04

**பகுதி - 02**

5) வலிகாமத்தின் எல்லா மட்ட மாணவர்களையும் உள்வாங்கும் மகாஜன கல்லூரி, மற்றும் அருணோதய கல்லூரி, ஆகியன, பல யாழ் நகரப் பாடசாலைகளுக்கு இணையான பாடரீதியான அடைவுகளைத் தரமுடிந்திருந்தது அவதானிக்கப்பட்டது. குறிப்பாக, மகாஜனக் கல்லூரி 150 க்கும் மேற்பட்ட கிராமிய மாணவர்களை/ புலமைப்பரீட்சை சித்தியை அடிப்படையாகக் கொள்ளாத மிகப்பெரும்பான்மையான மாணவர்களைக் கொண்டிருந்தும் உச்ச அடைவு மட்டங்களை, நகர்ப்புற பிரபல பாடசாலைகளுக்கு இணையாக பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், விஞ்ஞான பாடத்தில் அருணோதயக் கல்லூரியின் அடைவு 82% மாக இருக்க, மகாஜனக் கல்லூரியின் விஞ்ஞான பாட அடைவு மிக அசாதாரணமாக 62% மாக பின் தங்கி இருப்பதை அவதானிக்க முடிந்தது. 56 மாணவர்கள் விஞ்ஞான பாடத்தில் சித்தியடையவில்லை.

அதேபோல, குடியியல் மற்றும் தொடர்பாடல் & ஊடகம் சார்ந்த பாடத்திலும் மகா ஜன கல்லூரி அடைவு மட்டம் பின் தங்கி இருந்தது. பாடசாலை கள நிலவரத்தை ஆராய்ந்த போது உண்மையில் அங்கே விஞ்ஞான பாட கற்பித்தல் முகாமைத்துவத்தில் சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படக் கூடியதாக இருந்தது. உடனடியாக சீர்ப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரு பாடசாலைகளும் ஆங்கில பாடத்தில் மேலும் முன்னேற முயற்சிப்பது நல்லது.

School:J/Mahajana college
Subject Wise Performance G.C.E. (O/L) - 2019 (All Medium Students) First Attempt

| No | Subject | Subject No | Number of Applied | | | Number of Sat | | | A | | | B | | | C | | | S | | | W | | | Pass | | | Pass % | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total | Male | Female | Total |
| 9 | Mathematics | 32 | 69 | 88 | 157 | 68 | 87 | 155 | 24 | 26 | 50 | 11 | 18 | 29 | 14 | 24 | 38 | 9 | 16 | 25 | 10 | 3 | 13 | 58 | 84 | 142 | 85% | 97% | 92% |
| 10 | History | 33 | 69 | 88 | 157 | 68 | 87 | 155 | 9 | 12 | 21 | 11 | 15 | 26 | 17 | 24 | 41 | 21 | 33 | 54 | 10 | 3 | 13 | 58 | 84 | 142 | 85% | 97% | 92% |
| 11 | Science | 34 | 69 | 88 | 157 | 68 | 87 | 155 | 6 | 7 | 13 | 6 | 6 | 12 | 8 | 17 | 25 | 22 | 27 | 49 | 26 | 30 | 56 | 42 | 57 | 99 | 62% | 66% | 64% |
| 1st Subject Group | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 12 | Business & Acc | 60 | 34 | 34 | 68 | 33 | 34 | 67 | 5 | 6 | 11 | 7 | 8 | 15 | 8 | 8 | 16 | 11 | 11 | 22 | 2 | 1 | 3 | 31 | 33 | 64 | 94% | 97% | 96% |
| 13 | Geography | 61 | 13 | 37 | 50 | 13 | 36 | 49 | 1 | 5 | 6 | 2 | 4 | 6 | 6 | 14 | 20 | 3 | 12 | 15 | 1 | 1 | 2 | 12 | 35 | 47 | 92% | 97% | 96% |
| 14 | Citizenship Education & Governance | 62 | 22 | 17 | 39 | 22 | 17 | 39 | | 2 | 2 | 2 | | 2 | 4 | 5 | 9 | 6 | 9 | 15 | 10 | 1 | 11 | 12 | 16 | 28 | 55% | 94% | 72% |
| 2nd Subject Group | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 27 | Music (Carnatic) | 42 | 5 | 13 | 18 | 5 | 13 | 18 | 2 | 10 | 12 | 2 | | 2 | 1 | 2 | 3 | | 1 | 1 | | | 0 | 5 | 13 | 18 | | 100% | 100% |
| 28 | Art | 43 | 8 | | 8 | 8 | | 8 | 2 | | 2 | | | 0 | 6 | | 6 | | | 0 | | | 0 | 8 | 0 | 8 | 100% | | 100% |
| 30 | Dancing (Bharatha) | 45 | | 15 | 15 | | 14 | 14 | | 3 | 3 | | 4 | 4 | | 5 | 5 | | 2 | 2 | | | 0 | 0 | 14 | 14 | | 100% | 100% |
| 31 | Appreciation Of English Literary texts | 46 | | 6 | 6 | | 6 | 6 | | | 0 | | 1 | 1 | | 2 | 2 | | 3 | 3 | | | 0 | 0 | 6 | 6 | | 100% | 100% |
| 33 | Appreciation Of Tamil Literary texts | 48 | 5 | 32 | 37 | 5 | 32 | 37 | 2 | 9 | 11 | 2 | 7 | 9 | 1 | 12 | 13 | | 3 | 3 | | 1 | 1 | 5 | 31 | 36 | 100% | 97% | 97% |
| 36 | Drama & Theater (Tamil) | 51 | 51 | 22 | 73 | 50 | 22 | 72 | 5 | 1 | 6 | 14 | 8 | 22 | 21 | 12 | 33 | 10 | 1 | 11 | | | 0 | 50 | 22 | 72 | 100% | 100% | 100% |
| 3rd Subject Group | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 38 | Information & Communication Tecnology | 80 | 13 | 19 | 32 | 12 | 19 | 31 | 7 | 8 | 15 | 1 | 4 | 5 | 2 | 6 | 8 | 2 | 1 | 3 | | | 0 | 12 | 19 | 31 | 100% | 100% | 100% |
| 39 | Agriculture & Food Technology | 81 | 8 | | 8 | 8 | | 8 | 1 | | 1 | 2 | | 2 | | | 0 | 3 | | 3 | 2 | | 2 | 6 | 0 | 6 | 75% | | 75% |
| 43 | Home Economics | 85 | | 14 | 14 | | 13 | 13 | | | 0 | | | 0 | | 3 | 3 | | 8 | 8 | | 2 | 2 | 0 | 11 | 11 | | 85% | 85% |
| 44 | Health & Physical Education | 86 | 44 | 55 | 99 | 44 | 55 | 99 | 13 | 14 | 27 | 16 | 19 | 35 | 9 | 19 | 28 | 3 | 3 | 6 | 3 | | 3 | 41 | 55 | 96 | 93% | 100% | 97% |
| 45 | Communication & Media Studies | 87 | 4 | | 4 | 4 | | 4 | | | 0 | | | 0 | | | 0 | 1 | | 1 | 3 | | 3 | 1 | 0 | 1 | 25% | | 25% |

யா/அருணோதயக் கல்லூரி , அளவெட்டி
2019 க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடிவுகள்

| பாடம் | ClassA | | | | | Class B | | | | | Class C | | | | | Class D | | | | | Pass | week | pass % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | A | B | C | S | W | A | B | C | S | W | A | B | C | S | W | A | B | C | S | W | | | |
| சமயம் | 32 | 1 | 0 | 0 | 0 | 18 | 5 | 6 | 1 | 1 | 0 | 6 | 9 | 1 | 0 | 1 | 3 | 8 | 3 | 1 | 94 | 2 | 98% |
| றோ.க | | | | | | | | | | | | | | | | 1 | | | | | 1 | 0 | 100% |
| றோ.க.அல்லா | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| தமிழ் | 10 | 18 | 5 | 0 | 0 | 0 | 7 | 19 | 5 | 0 | 0 | 0 | 10 | 6 | 0 | 0 | 0 | 10 | 7 | 0 | 97 | 0 | 100% |
| ஆங்கிலம் | 10 | 12 | 9 | 1 | 1 | 0 | 2 | 13 | 9 | 7 | 0 | 0 | 0 | 1 | 15 | 0 | 0 | 0 | 3 | 14 | 60 | 37 | 62% |
| கணிதம் | 28 | 2 | 3 | 0 | 0 | 8 | 5 | 16 | 1 | 1 | 0 | 1 | 1 | 10 | 4 | 0 | 2 | 7 | 3 | 5 | 87 | 10 | 90% |
| வரலாறு | 18 | 8 | 6 | 1 | 0 | 1 | 6 | 17 | 5 | 2 | 0 | 0 | 0 | 11 | 5 | 0 | 0 | 7 | 5 | 5 | 85 | 12 | 88% |
| விஞ்ஞானம் | 10 | 12 | 9 | 1 | 0 | 1 | 0 | 16 | 14 | 0 | 0 | 0 | 1 | 4 | 11 | 0 | 0 | 4 | 7 | 6 | 80 | 17 | 82% |
| சித்திரம்<br>சங்கீதம்<br>நடனம்<br>நாடகம்<br>தமிழ் இலக்கியநயம் | 25 | 5 | 2 | 1 | 0 | 9 | 13 | 8 | 0 | 0 | 1 | 1 | 11 | 3 | 0 | 0 | 3 | 10 | 4 | 0 | 97 | 0 | 100% |
| வர்த்தகம்<br>குடியுரிமை<br>புவியியல் | 15 | 9 | 8 | 0 | 1 | 5 | 8 | 11 | 7 | 0 | 0 | 1 | 8 | 6 | 1 | 1 | 5 | 8 | 1 | 2 | 93 | 4 | 96% |
| சுகாதாரம் | 16 | 4 | 2 | 0 | 0 | 9 | 10 | 9 | 0 | 0 | 0 | 0 | 8 | 6 | 2 | 1 | 4 | 8 | 3 | 1 | 80 | 3 | 96% |
| I.C.T | 9 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 2 | 0 | 0 | | | | | | | | | | | 14 | 0 | 100% |

6) வடமராட்சியில் ஹாட்லி கல்லூரி மற்றும் மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலை கள் சில பாடங்களில் யாழ் பிரபல பாடசாலை களை விட அடைவு மட்டங்களில் கலக்கியிருந் தன. இருப்பினும் பொதுவாக விஞ்ஞான பாடத்தில் கவனம் எடுக்கவேண்டிய தேவை உள்ளது. மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை home economics பாடத்தில் சற்று கவனம் எடுக்க வேண்டியதும் தெரிந்தது.

School: J/Hartly College
Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt

| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Saivanery | 125 | 125 | 89 | 71.2% | 15 | 12.0% | 17 | 13.6% | 4 | 3.2% | 0 | 0.0% | 0 | 125 | 100% |
| 14 | Catholiciam | 10 | 10 | 9 | 90.0% | 0 | 0.0% | 1 | 10.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 10 | 100% |
| 15 | Chritianity | 1 | 1 | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 1 | 100.0% | 0 | 0.0% | 0 | 1 | 100% |
| 22 | Tamil Language & Lit | 136 | 136 | 71 | 52.2% | 37 | 27.2% | 27 | 19.9% | 1 | 0.7% | 0 | 0.0% | 0 | 136 | 100% |
| 31 | English | 136 | 136 | 53 | 39.0% | 30 | 22.1% | 35 | 25.7% | 15 | 11.0% | 3 | 2.2% | 0 | 133 | 98% |
| 32 | Mathematics | 136 | 136 | 102 | 75.0% | 16 | 11.8% | 14 | 10.3% | 4 | 2.9% | 0 | 0.0% | 0 | 136 | 100% |
| 33 | History | 136 | 136 | 66 | 48.5% | 25 | 18.4% | 37 | 27.2% | 6 | 4.4% | 2 | 1.5% | 0 | 134 | 99% |
| 34 | Science | 136 | 136 | 36 | 26.5% | 31 | 22.8% | 53 | 39.0% | 14 | 10.3% | 2 | 1.5% | 0 | 134 | 99% |
| 60 | Business & Acc | 113 | 113 | 43 | 38.1% | 33 | 29.2% | 24 | 21.2% | 11 | 9.7% | 2 | 1.8% | 0 | 111 | 98% |
| 61 | Geography | 23 | 23 | 16 | 69.6% | 4 | 17.4% | 3 | 13.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 23 | 100% |
| 42 | Music (Carnatic) | 11 | 11 | 4 | 36.4% | 3 | 27.3% | 2 | 18.2% | 2 | 18.2% | 0 | 0.0% | 0 | 11 | 100% |
| 43 | Art | 17 | 17 | 6 | 35.3% | 8 | 47.1% | 3 | 17.6% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 17 | 100% |
| 46 | Appreciation Of English Literary texts | 23 | 23 | 5 | 21.7% | 5 | 21.7% | 6 | 26.1% | 7 | 30.4% | 0 | 0.0% | 0 | 23 | 100% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 85 | 85 | 44 | 51.8% | 23 | 27.1% | 15 | 17.6% | 3 | 3.5% | 0 | 0.0% | 0 | 85 | 100% |
| 80 | Information & Communication Tecnology | 99 | 99 | 67 | 67.7% | 20 | 20.2% | 8 | 8.1% | 4 | 4.0% | 0 | 0.0% | 0 | 99 | 100% |
| 86 | Health & Physical Education | 37 | 37 | 24 | 64.9% | 10 | 27.0% | 2 | 5.4% | 1 | 2.7% | 0 | 0.0% | 0 | 37 | 100% |

School: J/Methodist Girls high School
Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt

| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Saivanery | 114 | 114 | 89 | 78.1% | 16 | 14.0% | 8 | 7.0% | 1 | 0.9% | 0 | 0.0% | 0 | 114 | 100% |
| 14 | Catholiciam | 9 | 9 | 8 | 88.9% | 1 | 11.1% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 9 | 100% |
| 15 | Chritianity | 6 | 6 | 0 | 0.0% | 5 | 83.3% | 1 | 16.7% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 6 | 100% |
| 22 | Tamil Language & Lit | 129 | 129 | 69 | 53.5% | 39 | 30.2% | 19 | 14.7% | 2 | 1.6% | 0 | 0.0% | 0 | 129 | 100% |
| 31 | English | 129 | 129 | 44 | 34.1% | 15 | 11.6% | 40 | 31.0% | 26 | 20.2% | 4 | 3.1% | 0 | 125 | 97% |
| 32 | Mathematics | 129 | 129 | 91 | 70.5% | 18 | 14.0% | 17 | 13.2% | 3 | 2.3% | 0 | 0.0% | 0 | 129 | 100% |
| 33 | History | 129 | 129 | 48 | 37.2% | 27 | 20.9% | 32 | 24.8% | 21 | 16.3% | 1 | 0.8% | 0 | 128 | 99% |
| 34 | Science | 129 | 129 | 29 | 22.5% | 19 | 14.7% | 43 | 33.3% | 31 | 24.0% | 7 | 5.4% | 0 | 122 | 95% |
| 60 | Business & Acc | 99 | 99 | 44 | 44.4% | 24 | 24.2% | 21 | 21.2% | 9 | 9.1% | 1 | 1.0% | 0 | 98 | 99% |
| 61 | Geography | 27 | 27 | 12 | 44.4% | 4 | 14.8% | 9 | 33.3% | 2 | 7.4% | 0 | 0.0% | 0 | 27 | 100% |
| 62 | Citizenship Education & Governance | 3 | 3 | 1 | 33.3% | 1 | 33.3% | 1 | 33.3% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 3 | 100% |
| 42 | Music (Carnatic) | 12 | 12 | 12 | 100.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 12 | 100% |
| 43 | Art | 4 | 4 | 2 | 50.0% | 1 | 25.0% | 1 | 25.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 4 | 100% |
| 45 | Dancing (Bharatha) | 13 | 13 | 10 | 76.9% | 3 | 23.1% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 13 | 100% |
| 46 | Appreciation Of English Literary texts | 16 | 16 | 6 | 37.5% | 4 | 25.0% | 6 | 37.5% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 16 | 100% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 84 | 84 | 47 | 56.0% | 23 | 27.4% | 12 | 14.3% | 2 | 2.4% | 0 | 0.0% | 0 | 84 | 100% |
| 80 | Information & Communication Tecnology | 90 | 90 | 52 | 57.8% | 13 | 14.4% | 19 | 21.1% | 5 | 5.6% | 1 | 1.1% | 0 | 89 | 99% |
| 85 | Home Economics | 6 | 6 | 0 | 0.0% | 0 | 0.0% | 5 | 83.3% | 0 | 0.0% | 1 | 16.7% | 0 | 5 | 83% |
| 86 | Health & Physical Education | 33 | 33 | 20 | 60.6% | 7 | 21.2% | 6 | 18.2% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 33 | 100% |

7) தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம் மற்றும் உணவுத் தொழின்நுட்பம் ஆகிய பாடங்களில் ஒப்பீட்டளவில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அதேவேளை ஒருகாலத்தில் மிகப் பிரபலம் வாய்ந்த கல்லூரியான றீபேட்ஜ் கல்லூரி மிகப் பெருமளவில் அதிர்ச்சியூட்டும் சரி வில் இருப்பதை அவதானிக்க முடிந்தது. தமிழ், சமயம் ஆகிய அடிப்படைப் பாடங்களில் கூட முறையே 74, 69 வீதமானவர்களே சித்தி பெற முடிந்துள்ளது. விஞ்ஞான பாடத்தில் 76 வீதமான வர்களும் ஆங்கிலத்தில் 78 வீதமான வர்களும் சித்தியடையவில்லை. கணிதத்தில் 44% சித்தியடைய வில்லை. சாவகச்சேரி இந்துக்கல்லூரி போல் அல்லாது இந்தக் கல்லூரி மாணவர்களின் சமூகக் காரணிகள் சற்று பின் தங்கி இருப்பதாகக் கூறப் பட்டாலும், மிகப் பெரிய கல்விப்புலம் வாய்ந்த சாவ கச்சேரி கல்விச் சமூகம் அக் கறை எடுத்து இந்த மாபெ ரும் கல்லூரியினை சரிவிலி ருந்து மீட்டெடுக்கும் வேலைத்திட்டங்களில் இறங்க வேண்டிய அவசியத்தை இந்த முடிவுகள் உணர்த்தி நிற் கின்றன.

8) கிளிநொச்சி கல்வி வலயத்தில் போரின் வடுக்களுடன் மீள் எழுந்து வரும் இரு பிரபல பாடசா லைகளான மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிளி/ இந்துக் கல்லூரி ஆகியவற்றில், கிளி/ மத் திய மகா வித்தியாலயம் குறிப்பிடத்தக்க பெறுபேறு களைப் பெற்றிருந்தாலும், விஞ்ஞானம், மனைப் பொருளியல், குடியியல் பாடங்களில் அடைவு மட்டங்கள் ஒப்பீட்டளவில் சற்று மந்தமாக இருப்பதாகத் தெரிகிறது. மற்ற பாடங்களில் சாதிக்க முடிந்த கல்லூரி, சற்று முயற்சித்தால் மேற்படி பாடங்களிலும் சாதிக்க முடியும் என நம்புகிறேன்.

9) அதே பிரதேசத்தைச் சேர்ந்த, அதே

**வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் ஒவ்வொரு பாடசாலையும் தனித்தனியே வேலைத்திட் டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். வெறுமனே சமூகப் பொருளாதாரக் காரணி களை மட்டும் சுட்டிக் காட்டிக் கொண்டிராமல் கல்வித்துறை சார்ந்த அதிபர்கள், ஆசிரி யர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய் கின்றரா? என உங்கள் மனசாட்சிகளைக் கேட்டுக் கொள்ளுங்கள். நான் மேலே ஒப் பிட்ட பாடசாலை மாணவர்கள் பலர் அந்த அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த ஒரே கல்வி நிலையங்களுக்குச் செல்பவர்கள்தான். ஆனால் முடிவுகள் மாறுபட்டுள்ளதே. அதற்கு முக்கிய காரணம் பாடசாலையும் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளும்தான்.**

சமூக பொருளாதாரக் காரணிகளைக் கொண்ட, கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையான மாணவர்கள் தோற்றிய கிளி/இந்துக் கல்லூரியின் முடிவுகள், கணிதம், விஞ்ஞானம், விவசாயம், ஆங்கிலம் ஆகிய பாடங்க ளில் சற்று அசாதாரணமாக ஒப்பீட்டு அளவில் பின் தங்கி இருந்தனர். அத்தோடு அடிப்படைப் பாடங்களான, தமிழ் மற்றும் சமயம் ஆகிய பாடங்களிலும் சித்தியடையத் தவறுபவர்கள் சற்று அதிகமாகவே காணப்படுகின்றனர். பொருத்தமான களவேலைத்திட்டங்கள் அவசியம்.

10) கிளிநொச்சியின் இந்த இரு பாடசாலைகளில் இன்னுமொரு முக்கிய விடயமும் அவதானிக்கப்பட்டது. சமயபாடத்தில், கிறிஸ்தவம் மற்றும் கத்தோ லிக்கம் ஆகிய பாடங்களை தழுவியோர் விகிதம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் 27% ஆகவும், கிளி/ இந்துக் கல்லூரியில் 15% ஆகவும் காணப்பட்டது. இந்த விகிதங்கள் ஏனைய கல்லூரிகளின் ஒப்பீட்டு அளவிலும், இலங்கையில் மத விகிதாசாரத்திலும் இருந்து அதிக மாக வேறுபட்டு இருக்கிறது. இது தற்செயலானதா? அல்லது போரின்

School: J/CHVACHERI HINDU COLLEGE
Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt

| Subject No | Subject | Number of Applied | Number of set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Saivanery | 184 | 182 | 83 | 46% | 31 | 17% | 44 | 24% | 17 | 9% | 7 | 4% | 2 | 175 | 96% |
| 14 | Catholiciam | 6 | 5 | 1 | 20% | 1 | 20% | 2 | 40% | 1 | 20% | 0 | 0% | 1 | 5 | 100% |
| 15 | Chritianity | 8 | 8 | 0 | 0% | 1 | 13% | 4 | 50% | 2 | 25% | 1 | 13% | 0 | 7 | 88% |
| 22 | Tamil Language & Lit | 198 | 195 | 42 | 22% | 49 | 25% | 81 | 42% | 21 | 11% | 2 | 1% | 3 | 193 | 99% |
| 31 | English | 198 | 195 | 27 | 14% | 18 | 9% | 53 | 27% | 60 | 31% | 37 | 19% | 3 | 158 | 81% |
| 32 | Mathematics | 198 | 195 | 66 | 34% | 33 | 17% | 45 | 23% | 34 | 17% | 17 | 9% | 3 | 178 | 91% |
| 33 | History | 198 | 195 | 54 | 28% | 21 | 11% | 50 | 26% | 50 | 26% | 20 | 10% | 3 | 175 | 90% |
| 34 | Science | 198 | 195 | 19 | 10% | 21 | 11% | 42 | 22% | 71 | 36% | 42 | 22% | 3 | 153 | 78% |
| 60 | Business & Acc | 87 | 86 | 23 | 27% | 22 | 26% | 26 | 30% | 15 | 17% | 0 | 0% | 1 | 86 | 100% |
| 61 | Geography | 47 | 47 | 16 | 34% | 7 | 15% | 20 | 43% | 4 | 9% | 0 | 0% | 0 | 47 | 100% |
| 62 | Citizenship Education & Governance | 64 | 62 | 5 | 8% | 10 | 16% | 21 | 34% | 21 | 34% | 5 | 8% | 2 | 57 | 92% |
| 42 | Music (Carnatic) | 53 | 51 | 19 | 37% | 10 | 20% | 16 | 31% | 6 | 12% | 0 | 0% | 2 | 51 | 100% |
| 43 | Art | 15 | 15 | 1 | 7% | 2 | 13% | 9 | 60% | 3 | 20% | 0 | 0% | 0 | 15 | 100% |
| 45 | Dancing (Bharatha) | 21 | 21 | 9 | 43% | 3 | 14% | 9 | 43% | 0 | 0% | 0 | 0% | 0 | 21 | 100% |
| 46 | Appreciation Of English Literary texts | 17 | 17 | 8 | 47% | 9 | 53% | 0 | 0% | 0 | 0% | 0 | 0% | 0 | 17 | 100% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 31 | 31 | 20 | 65% | 5 | 16% | 5 | 16% | 0 | 0% | 1 | 3% | 0 | 30 | 97% |
| 51 | Drama & Theater (Tamil) | 61 | 59 | 4 | 7% | 17 | 29% | 24 | 41% | 14 | 24% | 0 | 0% | 2 | 59 | 100% |
| 80 | Information & Communication Tecnology | 97 | 96 | 38 | 40% | 18 | 19% | 24 | 25% | 14 | 15% | 2 | 2% | 1 | 94 | 98% |
| 81 | Agriculture & Food Technology | 36 | 35 | 0 | 0% | 1 | 3% | 7 | 20% | 18 | 51% | 9 | 26% | 1 | 26 | 74% |
| 85 | Home Economics | 9 | 9 | 0 | 0% | 0 | 0% | 3 | 33% | 5 | 56% | 1 | 11% | 0 | 8 | 89% |
| 86 | Health & Physical Education | 56 | 55 | 11 | 20% | 15 | 27% | 25 | 45% | 4 | 7% | 0 | 0% | 1 | 55 | 100% |

School: J/Driberg College
Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt

| Subject No | Subject | Number of Applied | Number of set | A | B | C | S | W | + | Pass | Passing Percentage (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Saivanery | 52 | 49 | 11 | 4 | 11 | 8 | 15 | 3 | 34 | 69% |
| 14 | Catholiciam | 7 | 7 | 1 | 2 | 1 | 1 | 2 | 0 | 5 | 71% |
| 15 | Chritianity | 10 | 9 | 0 | 0 | 2 | 3 | 4 | 1 | 5 | 56% |
| 22 | Tamil Language & Litrature | 69 | 65 | 7 | 3 | 21 | 17 | 17 | 4 | 48 | 74% |
| 31 | English | 69 | 65 | 1 | 2 | 4 | 7 | 51 | 4 | 14 | 22% |
| 32 | Mathematics | 69 | 65 | 8 | 3 | 10 | 15 | 29 | 4 | 36 | 55% |
| 33 | History | 69 | 65 | 6 | 2 | 9 | 20 | 28 | 4 | 37 | 57% |
| 34 | Science | 69 | 65 | 1 | 1 | 6 | 9 | 48 | 4 | 17 | 26% |
| 60 | Business & Acc | 20 | 19 | 4 | 2 | 3 | 6 | 4 | 1 | 15 | 79% |
| 61 | Geography | 15 | 15 | 1 | 5 | 8 | 1 | 0 | 0 | 15 | 100% |
| 62 | Citizenship Education & Governance | 34 | 30 | 1 | 0 | 5 | 7 | 17 | 4 | 13 | 43% |
| 42 | Music (Carnatic) | 11 | 11 | 3 | 3 | 4 | 0 | 1 | 0 | 10 | 91% |
| 43 | Art | 18 | 17 | 0 | 1 | 3 | 11 | 2 | 1 | 15 | 88% |
| 45 | Dancing (Bharatha) | 9 | 9 | 2 | 2 | 2 | 3 | 0 | 0 | 9 | 100% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 3 | 3 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 | 3 | 100% |
| 51 | Drama & Theater (Tamil) | 28 | 21 | 2 | 2 | 7 | 10 | 0 | 7 | 21 | 100% |
| 80 | Information & Communication Tecnology | 10 | 10 | 4 | 1 | 1 | 3 | 1 | 0 | 9 | 90% |
| 81 | Agriculture & Food Technology | 33 | 29 | 0 | 0 | 3 | 10 | 16 | 4 | 13 | 45% |
| 85 | Home Economics | 9 | 9 | 0 | 0 | 0 | 5 | 4 | 0 | 5 | 56% |
| 86 | Health & Physical Education | 17 | 16 | 4 | 3 | 7 | 1 | 1 | 1 | 15 | 94% |

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# பெண்களுக்கு எதிரான வன்முறை

ச.சஜீபன்
உளவியல்துறை
யாழ் பல்கலைக்கழகம்.

இன்றைய சமூகத்தில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை பாரிய பிரச்சினையாக உள்ளது. நாகரீக வளர்ச்சியில் மனிதனது கண்டுபிடிப்புக்களும் அறிவுத்தேடல்களும் வளர்ச்சியடைகின்ற போதிலும் பண்டைய காலத்திலிருந்து தற்காலம் வரை பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது தொடர்ந்த வண்ணமே இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஆராய்ந்த உலக சுகாதார அமைப்பு (WHO)வன்முறையானது பெண்களின் வாழ்நாளில் பிறப்புக்கு முன்னர், மழலைப் பருவம், சிறுவர், வயதுவந்தோர்,முதியோர் ஆகிய ஐந்து நிலைகளில் நடைபெறுவதாக வகைப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 25 ஆம் திகதி பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டு வருமளவுக்கு வன்முறைகள் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது எனலாம்.



முதலில் ஆண் பெண் எனப்படும் பால் அம்சமே வன்முறைக்குக் காரணமாக அமைந்துள்ளது. அதாவது ஒருவர் ஆணாகவோ பெண்ணாகவோ பிறப்பது என்பது அவரவர் உயிரியல் அச்சத்திற்கு ஏற்றதாகும். உயிரியல் ரீதியாக ஆண், பெண் இணைந்த தன்மையில்தான் பால் எனும் அடையாளமே கிடைக்கின்றது. ஆனால் நம்மவர்களோ இந்நிலைப்பாடு தெரிந்தும், சிலர் தெரியாமல் கூட பெண்களைச் சித்திரவதைக்கு உட்படுத்துகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது சில ஆண்களினாலே அதிகம் நடத்தப்படுகிறது. ஆண் என்பவன் பாலின அடிப்படையில்தான் உயர்ந்தவன் என்று கருதுகிறான். அப்போது, பெண்கள் துன்பப்படும் வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. ஒரு பெண்ணானவள் மனைவியாக இருந்தாலும் சரி தாயாக இருந்தாலும் சரி தனக்கு அடிபணிய வேண்டும் என்ற ஆதிக்க எண்ணமே பல வன்முறைகளுக்குக் காரணமாக அமைகிறது எனலாம்.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது பல்வேறு வகைகளிலும் இடம்பெறுகின்றது. அதாவது பெண்ணானவள் எங்கெல்லாம் தன் தேவைகளையும், திறமைகளையும் வெளிப்படுத்த முனைகின்றாளோ அங்கெல்லாம் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறாள்.

குறிப்பாக உணர்வு ரீதியான வன்முறை, உடல் ரீதியான வன்முறை, உளவியல் ரீதியான வன்முறை, அரசியல் ரீதியான வன்முறை, பாலியல் ரீதியான வன்முறை எனலாம். உடலியல் ரீதியான வன்முறை எனும் போது பெண்களுக்கு அடித்தல், பாலுறுப்பு சேதப்படுத்தல், சிகரெட்டால் சுடுதல், நீண்டகால வலியினை ஏற்படுத்தும் துன்புறுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

> **பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பல்வேறு காரணிகள் தூண்டுதலாக அமைகின்றன. காலங்காலமாகப் பெண் என்பவள் அடிமை என்ற எண்ணமானது பரம்பரை ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் கடத்தப்படுகின்றமை அடிப்படைக் காரணமாகும். மேலும், பெண் என்பவள் பாலியல் இச்சைகளைத் தீர்ப்பவள், இன்பத்தை தருபவள் மாத்திரமே என ஆண்களின் சில எண்ணங்களும் ஒரு பெண்ணின் உணர்வுகளைப் பார்க்காது உடல் தோற்றத்தைப் பார்க்கும் தன்மைகளும் வன்முறைகளைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைகின்றன எனலாம்.**

உணர்வு மற்றும் உளவியல் ரீதியான வன்முறை எனும் போது ஏசுதல், அவமானப் படுத்துதல், வார்த்தைப் பிரயோகங்கள், பிடிக்காதவற்றைச் செய்ய நிர்ப்பந்தித்தல் போன்றன அடங்கும். இவற்றினை விட மிகவும் கொடுமையான வன்முறையான பாலியல் வன்முறை, பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் துன்புறுத்தல், பாலியல் சுரண்டல், கூட்டு வன்புணர்வு போன்றவற்றைக் குறிப்பிடலாம் மற்றும்

இவை தவிர பொதுவாகப் பெண்கள் பல வன்முறைகளை அனுபவித்து வருகின்றனர் அதாவது வீட்டு வன்முறை, கட்டாயத்திருமணம், கருணைக்கொலை, சிசுக்கொலைப் புறக்கணிப்பு, பொருளாதார அரசியல் நடவடிக்கைகளில் புறம் தள்ளல், சொத்துப் பிரிவினை, திருமணத்துக்குப் பின்னான வல்லுறவு, இளவயதுத் திருமணம், கட்டாயக் கருக்கலைப்பு, கட்டாயத்தாய்மை, சீதனக் கொடுமை எனப் பல்வேறு வன்முறைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பல்வேறு காரணிகள் தூண்டுதலாக அமைகின்றன. காலங்காலமாக பெண் என்பவள் அடிமை என்ற எண்ணமானது பரம்பரை ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் கடத்தப்படுகின்றமை அடிப்படைக் காரணமாகும். மேலும், பெண் என்பவள் பாலியல் இச்சைகளை தீர்ப்பவள் இன்பத்தைத் தருபவள் என ஆண்களின் சில எண்ணங்களும், ஒரு பெண்ணின் உணர்வுகளைப் பார்க்காது உடல் தோற்றத்தைப் பார்க்கும் தன்மைகளும் வன்முறைகளைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைகின்றன எனலாம். தாய்மை என்பது பெண்களுக்கு இயற்கையாகக் கொடுக்கப்பட்ட ஓர் வரப்பிரசாதமாகும். ஒரு பெண் தாய்மை அடைந்த பின் அவள் முன்னைய நிலையை விட பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆனால், சில ஆண்கள் பிள்ளைகளைப் பெற்றுத் தரும் இயந்திரமாகப் பெண்களை எண்ணி அவர்களை வற்புறுத்துகின்றமை கவலைக்குரிய விடயமாகும். பெண்ணானவள் அதிகளவு சகிப்புத்தன்மை கூடியவளாகவும் அனைத்தையும் பொறுத்துப் போகும் தன்மை உடையவளாகவும் காணப்படுவதனை சில ஆண்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதும் வன்முறைக்குக் காரணமாக அமைகின்றன.




பெண்கள் வன்முறைக்கு உட்படும்போது உடல், உள, சமூக ரீதியாக பல்வேறு தாக்கங்களுக்கு ஆளாகின்றனர். அதாவது உடலியல் ரீதியாக உடலியல் நோய் தொற்றுக்கள், உடல் வலி அங்கவீனம், தோற்றத்தில் மாற்றம், உடற் காயங்கள் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. உளவியல் ரீதியாக மன அழுத்தம், மனச்சோர்வு, கோபம், பயம், விரக்தி, தனிமை நாட்டம், சித்திரவதை அனுபவம், பயங்கரக்கனவு போன்ற பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

சமூக ரீதியாக உறவுகளால் கைவிடப்படும், சமூக அவமானத்துக்கு உட்பட ஏற்றத்தாழ்வுகள், சமூக இடைவினை தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். அத்துடன் இனப்பெருக்கச் சுகாதார அடிப்படையில் கருக்கலைப்பு, தேவையற்ற விதத்தில் கர்ப்பம் தரித்து பாலியல் ரீதியான நோய்கள், பால் உறுப்புக்களில் கிருமித் தொற்று ஏற்படுதல், எயிட்ஸ் மற்றும் ஏனைய பாலியல் நோய்க்கு உட்படல் போன்ற விளைவுகளை அனுபவிக்கின்றனர். இவை தவிர பொருளாதார ரீதியில் சுரண்டல், தற்கொலை முயற்சி, உடல் காயங்களினால் மரணம் எய்தல் போன்ற பல்வேறுபட்ட விளைவுகளையும் வன்முறையினால் பெண்கள் அனுபவித்து வருகின்றமை பரிதாபத்திற்குரிய ஒன்றாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு விதத்திலும் இடம்பெறுகின்றது. பெண் என்பவள் ஒரு சந்ததியை உருவாக்கும் வல்லமை கொண்டவள். அவள் மீதான வன்முறைகள் நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பெண்கள் மீதான வன்முறைகளாவன பின்வரும் முறைகளுக்கு ஊடாகத் தடுக்கப்படலாம். பெண்களை சமூக ரீதியில் பலமானவர்களாக மாற்றுதல், வன்முறை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், உடல் ரீதியான வன்முறைக்கு சிகிச்சை வழங்குதல் (வன்முறையின் பின்னர் இடம்பெறும்), பிரச்சினைக்கான முறையீடுகளை மேற்கொள்ள உதவுதல், பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் என்ற மனப்பாங்கை உருவாக்கல், வன்முறைகளை ஏற்படுத்துபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சரியான முறையில் உளவளத்திணை வழங்கல் (வன்முறைக்கு பின்), பொருளாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் அல்லது தீர்வினை வழங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவாகும். எனவே மேற்கண்டவற்றின் அடிப்படையில் ஒரு பெண் என்பவள் சந்ததியை உருவாக்கும் ஒரு அற்புத இயல்புடையவள் அவளைப் போற்றி வணங்காவிடினும் ஏறி மிதிக்காமால் இருப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும் ஒவ்வொரு ஆணும் பெண்களைத் தம் அடக்கு முறைகளுக்கு உட்படுத்தாமல் சுதந்திரமாக விடும் போது வன்முறைகள் தலை தூக்க மாட்டாது. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் கட்டாயமாக இருப்பாள் என்பார்கள் ஆனால் அநேகப் பெண்களின் சீரழிவுக்கு சில ஆண்களே காரணமாக அமைகின்றனர்.

இன்று ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் ஏதோ ஒரு இடத்தில் பெண் வன்முறைக்கு உட்படுவதனை நாம் அறிந்த வண்ணமே உள்ளோம். ஆனால் நம்மைப் பொறுத்தவரை அது வெறும் செய்தியாகவே காணப்படுகின்றது. ஒரு பெண் மனதளவில் அல்லது உடலளவில் பாதிப்படையும் போது முழு குடும்பமே பாதிப்படையும் என்பது அனேகமானவர்களுக்கு புரியாது. பெண்களை வன்முறைக்கு உட்படுத்துபவர்கள் அவளது தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் ஒரு கணம் எண்ணிப் பார்த்தால் போதும் வன்முறை என்பது ஒழிந்துவிடும். எனவே ஒரு நாட்டின் பிரஜை என்ற வகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதில் நாமும் ஒருவராக இணைவோம். ■

# இரண்டு தடவைகள் திறப்புவிழா கண்ட மலையக வீடமைப்புத் திட்டம்...!

பிதாமகன்

**நல்லாட்சிக் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பெருந் தோட்டப்பகுதி வீடமைப்புத் திட்டங்களில், குடியிருப்புகள் முழுமை பெற்றாலும் வீதி, நீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவு பெற முன்பதாக ஆட்சி முடி வுக்கு வந்தது. திடீரென ஜனாதிபதி மைத்ரி, மஹிந்தவை பிரதமராக்கியதிலிருந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளால் பல அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப்பட்டன. அதில் மலையகமும் பாதிக்கப்பட்டது. இந்திய நிதியுதவியுடனான வீட்டுத்திட்டங்கள் மாத்திரமின்றி, மத்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டங்களும் அரைகுறையாகக் கைவிடப்பட்டன. எனினும், பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் வழமையான சம்பவங்களே இடம் பெற்றன. நல்லாட்சி அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிக் கண்டு கொள்ளவில்லை.**

வேறு எங்கும் இடம் பெறாத ஆச்சரியமூட்டும் சம்பவங்கள் மலையகப் பிரதேசங்களில் இடம்பெற்றாலும் இங்கு வாழ்ந்து வரும் மக்களுக்கு அது பழகிப்போனதொன்று. அப்படியானதொரு சம்பவம் கடந்த வாரம் மாட்டுப்பொங்கல் தினத்தன்று இடம்பெற்றது. பூரணப்படுத்தாத வீடுளில் தாமாகவே வந்து குடியேறி மக்களிடம் வீட்டுத் திறப்புகளைப் பெற்று மீண்டும் அவர்களிடமே அதை வழங்கி, போய் குடியேறுங்கள் என்று கூறி அனுப்பிய கேலிக் கூத்து சம்பவத்தை இன்று முழு மலையகமுமே கைகொட்டி சிரிக்கின்றது. இவ்வாறு மக்களிடம் இரண்டாவது முறையாக உங்கள் வீடுகளில் சென்று குடியேறுங்கள் என்று கூறுவதற்கு தலைநகரிலி



ருந்து ஹெலிகொப்டரில் பறந்து வந்தார் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ. அவருடன் தலைவிதியை நொந்து கொண்டு வந்து கலந்து கொண்டிருக்கின்றார்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் கண்டி உதவி இந்தியத் தூதுவர் ஸ்ரீமதி ஆதிராவும். முழுக்க முழுக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வைப் பலர் புறக்கணித்திருந்தனர். அதாவது வீட்டுத்திட்டத்தின் பயனாளிகளில் முக்கால்வாசிப் பேர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. இதன் காரணமாக இ.தொ.கா தனது ஆதரவாளர்களை வைத்து மீசையில் மண் ஒட்டாத கதையாக நிகழ்வை நடத்தி முடித்துள்ளது.

நல்லாட்சிக் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பெருந்தோட்டப் பகுதி வீடமைப்புத் திட்டங்களில், குடியிருப்புகள் முழுமை பெற்றாலும் வீதி, நீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவு பெற முன்பதாக ஆட்சி முடிவுக்கு வந்தது. திடீரென ஜனாதிபதி மைத்ரி, மஹிந்தவை பிரதமராக்கியதிலிருந்து ஏற்பட்ட அரசியல் நெருக்க டிகளால் பல அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப் பட்டன.

அதில் மலையகமும் பாதிக்கப்பட்டது. இந்திய நிதியுதவியுடனான வீட்டுத் திட்டங்கள் மாத்திரமின்றி, மத்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப் பட்ட வீடமைப்புத்திட்டங்களும் அரைகுறையாகக் கைவிடப்பட்டன. எனினும், பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் வழமை யான சம்பவங்களே இடம்பெற்றன. நல்லாட்சி அர சாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிக் கண்டு கொள்ளவில்லை.

மிக முக்கியமாக மலையகப் பிரதேசங்கள் மிக மோசமான புறக்கணிப்புக்குள்ளாகின. ஏனென்றால் பதுளை, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை, ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மலையகப் பிரதேசங்களில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து மட்டுமே ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு இரண்டு தமிழர்கள் வெற்றி பெற்றிருந்தனர். இவர் இல்லாமலேயே பொதுஜன பெரமுன ஆட்சியமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மையைப் பெற்றிருந்தது. அதனால் வெற்றி பெற்ற இரண்டு உறுப்பினர்களை ஏனோ தானோ என தம்பக்கம் சேர்த்து கொண்ட பொதுஜன பெரமுன, ஆறுமுகன் தொண்டமானின் மகன் ஜீவன் தொண்டமானுக்கு மாத்திரம் இராஜாங்க அமைச்சுப் பதவி ஒன்றை பெயருக்கு வழங்கி விட்டு, அந்த அமைச்சின் சகல அதிகாரங்களையும் பிரதமர் வசம் ஒப்படைத்தது. நல்லாட்சிக் காலத்தில் புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு என்ற கபினட் அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவி இருந்தமை முக்கிய விடயம். இப்போது அது இல்லை.

இதன் காரணமாக ஜீவன் தொண்டமானால் மலையக அபிவிருத்தி பற்றி ஒன்றுமே வாய் திறக்க முடியவில்லை. நல்லாட்சி காலத்து வீடுகளை பூரணப்படுத்த முடியாத காரணத்தினால், பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் மீது நம்பிக்கையிழந்த பயனாளிகள், தாமாகவே முன்வந்து சில அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கடந்த இரண்டு வருடங்களாக வீடுகளில் வசிக்க ஆரம்பித்தனர்.

**பொங்கல் விழா**

இந்நிலையில் தமிழ் முற்போக்குக்கூட்டணியானது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை அதிதியாக வரவழைத்துப் பொங்கல் விழாவை நுவரெலியாவில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அதற்கு முதல் நாள் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அவசர அவசரமாக இந்திய வீடமைப்புத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட ஆயிரம் வீடுகளைத் தெரிவு செய்து பூரணப் படுத்துவது போன்று படம் காட்டி இந்தியத் தூதுவரை அழைத்து பிரமாண்டமான திறப்பு ஒன்றை காட்போட் மட்டையில் செய்து பயனாளிகள் சிலரை மேடைக்கு அழைத்து அதை அவர்களிடம் கையளித்து நிகழ்வை நடத்தி முடித்து விட்டது.



பாவம் இந்தியத் தூதுவர், குறித்த வீட்டுத் திட்டத்துக்குச் சென்றிருந்தால் கண்ணீர் விட்டு அழுதிருப்பார். நிகழ்வை கொட்டகலையில் அமைந்துள்ள இ.தொ.காவின் பணிமனையிலேயே நடத்தி முடித்து விட்டனர். இந்த நிகழ்வுக்கு முன்பதாக, காலை இடம்பெற்ற மாட்டுப்பொங்கல் நிகழ்வில், அமைச்சர் நாமல் மாடுகளுக்குப் பொங்கல் ஊட்டியதெல்லாம் ஒரு சிறப்பு நிகழ்வாகிப் போனது.

**கூட்டணியின் பொங்கல் விழா**

இ.தொ.காவின் பொங்கல் விழாவும் வீட்டுத்திட்டம் கையளிப்பு நிகழ்வும் இடம்பெற்ற மறுநாள் தமிழ் முற்போக்குக்கூட்டணி நுவரெலியாவில் பிரமாண்டமாகத் தனது பொங்கல் விழாவை நடத்தியது. கூட்டணித் தலைவர் மனோ கணேசன், இணைத் தலைவர்களான பி.திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் மற்றும் வேலுகுமார் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்நிகழ்வில் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டிருந்தார். மிகவும் சுவாரஸ்யமாக இந்திய தூதுவர் கோபால் பாக்லேவும் இதில் கலந்து கொண்டார். நல்லாட்சிக் காலத்தில் இந்திய வீட்டுத்திட்டங்களை மிகவும் சிறப்பாக மலையகப் பகுதிகளுக்குள் கொண்டு செல்வதற்குத் தமிழ் முற்போக்குக்கூட்டணியே செயற்பட்டிருந்தது என்பது அவருக்குத் தெரியும். இருந்தாலும் என்ன செய்வது? தமிழ் முற்போக்குக்கூட்டணி தற்போது இ.தொ.காவை விட அதிகமாக இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக உள்ளது. என்னதான் எதிர்க்கட்சியில் அவர்கள் இருந்தாலும் அழைத்தால் செல்ல வேண்டிய கட்டாயம் அவருக்கு. இதற்கு இந்தியாவும் கூட தனது சம்மதத்தைத் தெரிவித்திருக்கும் என்பதில் சந்தேகங்களில்லை.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் திகாம்பரம் தனது உரையைச் சற்றுக் காட்டமாகவே ஆரம்பித்திருந்தார். ‘மலையக மக்களை தாத்தா, மகன் ஆகியோர் ஏமாற்றியது போன்று இப்போது பேரனும் ஏமாற்ற ஆரம்பித்திருக்கிறார். நான் அமைச்சராக இருந்தபோது நிர்மாணித்த வீடுகளின் சாவிகளைப் பலவந்தமாகப் பெற்று அதனை மக்களுக்கு மீள வழங்கும் அரசியலே முன்னெடுக்கப்படுகின்றது’ என அவர் உரையாற்றியிருந்தார். அதே போன்று கூட்டணித்தலைவர் மனோ கணேசனும் இந்திய அரசாங்கத்தின் 10 ஆயிரம் வீட்டுத் திட்டங்களை நாமே பெற்றோம். இன்று இ.தொ.காவும் இந்த அரசாங்கமும் பெயர் போட்டுக்கொள்ளப் பார்க்கின்றன என்று பேசியிருந்தார்.

உண்மையில் இ.தொ.காவின் இந்த செயற்பாடு மலையகத்தில் அக்கட்சியைச் சேர்ந்தவர்களையே முகஞ்சுழிக்க வைத்துள்ளது. இ.தொ.காவின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் கூட இந் நிகழ்வை புறக்கணித்திருந்தனர். கட்சியின் பல சிரேஷ்ட பிரமுகர்களைக் காணக்கிடைக்கவில்லை. யாரோ செய்ததை தாம் செய்ததாக பெயர் போட்டுக் கொள்ளும் அரசியலை இ.தொ.கா விட்டொழிக்க வேண்டும். மலையக மக்களுக்கு எல்லாமே நாம்தான் செய்தோம் என்று கூறும் இவர்களால் இன்னும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் வேதனத்தை முழுமையாக வாங்கிக் கொடுக்க முடியாதுள்ளமை, மலையகத்தில் அவர்களின் வங்குரோத்து நிலைமையை நன்றாகச் சுட்டிக்காட்டுகின்றது. ■

# திருப்பாவைப் பாடல்களில் அங்கதச் சுவையூடாய் அறிவுரை கூறும் பாங்கு

த. அபிநாத்

திருத்துழாய் பாத்தியின் கீழ் திரளொளியாய் அவதரித்து ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி அவன் தனிற்கே மாலைதனை சூடிக்கொடுத்த சுடர்க் கொடியான ஆண்டாள் நாச்சியால் அருளிச் செய்யப்பட்ட திருப்பாவைப்பாடல்கள் நயமும் இனிமையும் செறிந்து விளங்குபவையாகும். மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன் நாளில் பையத்துயின்ற பரமனடி பாடி நெய்யுண்ணாது பாலுண்ணாது நற்காலை நீராடி மையிட்டெழுதாது மாலனை மணவாளனாக வேண்டியும் மும்மாரி பொழிந்து நாடும் வாழ்வும் சுபீட்சமுறவும் ஆண்டாள் தோழியர் குழாத்துடன் பாவை நோன்பு தோற்றது அகிலம் அறிந்ததே. நவரசம் ததும்பும் திருப்பாவையின் முப்பது பாடல்களில் தோழியர்களை நோன்புக்காக அழைக்கும் விதமாய் அமையும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் அங்கதச்சுவை பயக்கவல்லதோடு அதனூடாய் நம் அறிவையும் துலங்கச் செய்வதாய் அமைவுறுகின்றன.

ஒவ்வொரு வீடாகச் சென்று தூங்கிக் கொண்டிருப்பவர்களை துயில் நீக்கும் வண்ணம் அவர்கள் வீட்டு வாயிலில் நின்று அவர்களை விளித்து வீட்டிற்கு வெளியில் நிற்கும் ஆண்டாள் தலைமையிலான நங்கையர் குழுவினர் பாடுவார்கள். அவ்வாறு நல்ல சயனத்தில் இருக்கின்ற நோன்பு நோற்கும் பெண்களை எழுப்புவதற்காய் ஆண்டாள் விளித்துப்பாடும் விதமே அலாதிச்சுவை தரவல்லது.

“நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதா
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியரால்
பண்டொரு நாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான்
தந்தானே
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தோற்றமாய் வந்து திறவேலோ எப்பாவாய்”
(10)

இப் பாடல் மூலம் விளிக்கப்படுபவள் தன் தோழியாரின் நாள் கடுந்தவங்கள் ஆற்றி நாராயணன் வீற்றிருக்கும் வைகுண்டத்துக்குச் செல்லுவேன் எனச் சொல்லியிருக்கிறாள். அதை அறிந்த கோதிலாத கோதை வேண்டுமென்றே

“நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்”

அயர்ந்த நித்திரைபுரியும் நீயா தவயற்றப் போகிறாய், நோன்பிற்காக உன்னை வந்து அழைத்தும் வீட்டு வாசல் திறந்து எம்மோடு நோன்பிற்கு வராத உனக்கு எப்படி வைகுண்ட வாசல் திறக்கும் என சற்று கோபத்துடன் நகைபடக் கூறி நீ முன்பு நாராயணர் ராமனாய் அவதரித்திருந்த போது அவரால் கொல்லப் பட்ட நித்திரை வரத் பெற்ற கும்பகர்ணனையே நித்திரையில் தோற்கடிக்க வல்லவள் என அங்கதச் சுவை பட அறிவுரை கூறி ஆண்டாள் தோழியை எழுப்பும் வண்ணத்தைக் காணமுடியுமாயுள்ளது.

பாவைநோன்பு நோற்கின்ற பெண்களிடம் ஒருத்தி நாளை நான் உங்கள் அனைவருக்கும் முன்னதாய் துயில் நீங்கி உங்கள் இல்லாந்தோறும் வந்து உங்களை எழுப்புகிறேன் எனச் சொல்லி விட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாள். இவ்வாறு சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக இருப்பவளை விளித்து

“ உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பலவாய்
கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்மை எழுப்புவான் வாய் பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நா உடையாய்
சங்கொடு சுக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணணைப் பாடேலோ
ரெம்பாவாய்”
(14)

இப்பாவிலே ஆண்டாள் நாச்சியார் உள்ளிருப்பவள் தான் மெய் மறந்து தூங்கியதை ஒப்புக்கொள்ளாது



இன்னும் விடியவில்லை என ஜம்பமிட கூடாது என்பதற்காக அவள் வீட்டின் பின்புறம் உள்ள குளத்தில் செங்கழுநீர் மலர்ந்ததையும் அல்லி வாடியமையும் காவியுடுத்த வெண்ணிறபற்களுடைய துறவிகள் கோயில்கட்குச் சங்கூத செல்வதையும் விடிந்ததற்கான அடையாளங்களாகக் கூறுகிறாள் இப் பாடலில் ஆண்டாள் காவியுடை தரித்து வெண்ணிற பற்களுடையவர்களே வைதீகர் என்பதை ஊர்ஜித் படுத்தி சமணர்கள் தங்கள் கோட்பாடுகட்கிணங்க பல்துலக்காத தன்மையும் கேலி பேசுவதும் குறிப்பிடத்தக்கது. இவ் விதம் விடிந்ததை வெளிப்படுத்தி விட்டு சொன்னதையே செய்யாத நீ நாணாமல் தூங்குகிறாயே, உனக்கு நாக்கு உள்ளதோ என நகைபட பேசினாலும் நாக்கு இருப்பது நாராயணன் புகழ் பாடவே அன்றி இனிக்க இனிக்க பொய்பேசுவதற்கு அல்ல என அங்கதமூடாய் அறிவுரை கூறும் பாங்கினைக் காணமுடிகிறது.

உரையாடற்பாங்கிலே வாய்த்துடுக்குடைய பெண்ணை துயில் எழுப்பும் விதமான பாடலாக திருப்பாவையில் 15 ஆம் பாடல் அமைகிறது.

“எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?
சில்லென்று அடியேன்மின் நங்கையீர்
போதரகின்றேன்
வல்லை, உன் கட்டுரைகள் பண்டே உள் வாய்
அறிதும்
வல்லீர்கள் நீங்களே, நாளேதான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறு உடைய
எல்லோரும் போந்தாரோ? போந்தார்,
போந்து எண்ணிக் கொள்
வல் ஆனை கொன்றானை மாற்றாரை மாற்று
அழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ
ரெம்பாவாய்”

இப் பாடலில் விளிக்கப்படும் நங்கையானவள் முதலில் இடம்பெறாத உங்கள் புழைக்கடை எனும் பாடலைக் கேட்டு நாராயணனை நினைத்து கிளி போல திரும்ப திரும்ப கூற பொய்யுறக்க கொள் இன்தகையை அறிந்தே நாச்சியார் நையாண்டியாக “எல்லே இளங் கிளியே” எனக் குறிப்பிட்டு “இன்னும் உறங்குறியோ” எனக் கேலியாகக் கேட்கிறாள்.

அப்போது உள்ளிருப்பவள். பனி உடலை துளைப்பது போல் சிலுசிலுவென அழையாதீர்கள் எனக் கூறுகிறார். இதன் உள் குறிப்பான நாராயணனை அவள் மனதில் நினைக்கும் போது இவர்கள் அவர் புகழ்பாட அழைப்பது இடையூறாய் அமையும் என்பதை அந்த நாச்சியார் நீ பொய்யுரைப்பதையும் உன் வாய்த்துடுக்கும் நாமறிவோம் என அவளைச் சீண்டும் விதம் கேலி பேச சோகமுற்ற அவள் நானே தான் வாயடியென ஸ்ரீவைணவ லட்சணத்திற்கேற்ப பதிலுறுத்தாலும் நாச்சியார் விடாமல் உனக்கு மட்டும் தனியே அதிசயமா இடம் பெறகின்றது எனும் பொருளில் இறைவனை அவள் தனியாக நினைத்து திளைத்ததையும் கேலியாக கூறுவதிலும் அங்கதச்சுவையும் அறிவுரைகூறும் பாங்கினைக் காணமுடிகிறது.

இவ்விதமாக திருப்பாவையில் இடம்பெறுகின்ற திருப்பள்ளியெச்சிப் பாடல்களில் நோன்பு நோற்றுச் சுவர்க்கம் செல்வதாகக் கூறிய நங்கையையும் அனைவருக்கும் முன்னதாக துயில் நீங்குவேன் எனக் கூறியவளையும் வாய்துடுக்குடைய நங்கையையும் நோன்பிறகாய் அழைக்கும் விதமாய் அமைவுறும் பாடல்கள் அங்கதச்சுவையோடு அறிவுரை பயக்கின்ற விதத்தையும் கண்கூடாய் அறியமுடிகின்றது.

“அன்ன வயல் புதுவை ஆண்டாள் ஆங்கற்கும்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்- இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்”

■

# டெஸ்மன் டூட்டுவும் சர்வதேச அரசியலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உரை

தென் ஆபிரிக்க இன ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்பட்ட பேராயர் டெஸ்மன் டூட்டுவும் சர்வதேச அரசியலும் என்ற கருப்பொருளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உரை ஒன்று இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், பத்திரிகையாளர் அ.நிக்ஸன் மேற்படி தலைப்பில் உரையாற்றவுள்ளார். சங்கத்தின் பேரவை உறுப்பினர் பேராசிரியர் தை. தனராஜ் நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார்.


எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை ஆறு மணிக்கு சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் உரை நிகழ்த்தப்படும். வெள்ளவத்தை உருத்துரா மாவத்தை ஊடான சங்கம் மாவத்தையில் உள்ள கொழும்புத் தமிழச் சங்கம் மாதாந்தம் நடத்தும் அறிவோர் ஒன்று கூடல் நிகழ்விலேயே மேற்படி தலைப்பில் உரை இடம்பெறவுள்ளது.

சமகால புவிசார் அரசியல் மற்றும் பேராயர் டெஸ்மன் டூட்டுவின் ஈழத்தமிழ் மக்கள் மீதான அக்கறை குறித்த விடயங்கள் உரையின் பிரதான கருப்பொருளாகும்.

உரையின் பின்னர் கேள்வி பதில் இடம்பெறும். மாணவர்கள், ஆர்வலர்கள், அரசியல் பிரதிநிதிகள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் கல்விக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

■





முருகபூபதி


# தமிழ் சினிமாவும் இலக்கியமும் ரசனையும்

அனைவரிடமும் ஏதோ ஒரு கதையோ அல்லது பல கதைகளோ இருக்கும். ஆனால், அவர்களில் சிலர்தான் அதனை எழுத்தில் தருகிறார்கள். மற்றவர்கள் உரையாடலின் பொழுது சொல்கிறார்கள். உரையாடல்களில் ஒருவர் சொன்ன கதை கேட்கப்பட்ட மற்றும் ஒருவரினால் வேறு ஒரு இடத்துக்கு காவிச்செல்லப்படும் பொழுது அதன் வடிவம் மாறிவிடும். கண் வைத்து காது வைத்து மெருகூட்டி வதந்தியாகவே அது பரவிவிடும். கேட்கப்பட்ட வதந்தியின் அடிப்படையிலும் ஒரு புதிய கதை உருவாகிவிடும்.

சினிமாவுக்கு கதை கிடைப்பதும் இப்படித்தான். முன்னர் இந்தியாவில் பல திரைப்பட தயாரிப்பாளர்கள் தத்தமக்கென ஒரு கதை இலாகாவே வைத்திருந்தார்கள். உதாரணமாக மனிதர்களை - மிருகங்களை நாயகராக்கியதுடன் மட்டும் நின்றுவிடாது தெய்வங்களின் அதிசயங்களையும் தனது படங்களில் சொன்ன சின்னப்பாதேவர் - சந்திரலேகா - ஔவையார் - வஞ்சிக்கோட்டை வாலிபன் திரைப்படங்களை எடுத்த ஜெமினி வாசன் முதலானோர் ஒரு கதை இலாகாவை வைத்திருந்தனர்.

ஆனால், சுஜாதா சினி ஆர்ட்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனத்தை வைத்திருந்த நடிகர் பாலாஜி அவ்வாறெல்லாம் இலாகாவைத் திராமல் வடக்கே சென்று ஹிந்திப்படங்களைப் பார்த்துவிட்டு வந்து, அந்தப்படங்களின் அடிப்படையில் ஏ.எல். நாராயணன் என்பவரிடம் கதை சொல்லி வசனம் எழுதவைத்து படம் எடுத்துவிடுவார்.

சினிமா உருவான நூற்றாண்டு முதலே வலிமையான ஊடகமாகத்தான் வளர்ந்து வந்திருக்கிறது. தொடக்க காலத்தில் சினிமா



பேசவில்லை.

தமிழ் சினிமா என்னும் பொழுது இந்தியாவைத்தான் முன்னோடியாக சுட்டிக்காட்டும் நிலையிலிருக்கின்றோம். இந்திய மொழிகளில் தமிழும் ஒன்றென்பதனால் இந்திய சினிமா 1931 இல் பேசத் தொடங்கியதனால் நாம் இந்தியாவைத் தவிர்த்து தமிழ் சினிமா பற்றி பேச முடியாது.

வால்மீகி ஒரு வேடன். மான் - மரை பறவைகளை வேட்டையாடி வாழ்ந்த அவர் ஒரு வழிப்பறித்திருடனாகவும் வாழ்ந்திருக்கிறார்.

எப்பொழுதும் ஒரு மிருகத்தை வேட்டையாடுவதற்காக அதனைத் துரத்திக்கொண்டு ஓடும்பொழுதும் மரா மரா என்றுதான் சத்தம் எழுப்பிக்கொண்டு ஓடுவாராம். மரா என்றால் கொல். கொலை செய். என்று அர்த்தம்.

ஒருநாள் வால்மீகி, அந்தக் காட்டுவழியாக மரா மரா எனச்சொல்லிக் கொண்டு ஓடியபொழுது அவரை குறுக்கிட்டு மறித்த ஒரு முனிவர் - இங்கே வா. மரா மரா என்று சொல்லிக்கொண்டு ஒரு உயிரைக் கொல்ல ஓடுகிறாயே, தொடர்ந்து மரா மரா என்று சொல் என்றாராம். வால்மீகியும் மரா மரா மரா மரா என்றாராம். எங்கே சொல்லிப்பாருங்கள். ராம ராம ராம என்று அந்தத்தொனி உங்களை அறியாமலேயே மாறும் ராமனின் கதையை எழுதப்பா? என்று சொல்லி ராமனின் கதையை வால்மீகிக்குச்சொல்லி, வேட்டையாடும் - கொள்ளையடிக்கும் பழக்கத்தையே மாற்றினாராம் அந்த முனிவர். அதனால் பிறந்தது வால்மீகி இராமாயணம்.

அதற்கு, இலக்கியச்சுவை ஏற்றினார கம்பர் எமக்கு கம்பராமாயணம் கிடைத்தது. காலப்போக்கில் நாம் இந்த இலக்கிய காவியத்திலிருந்து சம்பூர்ண ராமாயணம் - லவ குசா முதலான சினிமாக்களைப் பார்த்தோம். தற்காலத்தில் இராமாயணம் பல அங்கங்களில் தொலைக்காட்சி சீரியலாகவும் வந்துள்ளது.

**“ வியாசர் படைத்த மகாபாரதத்திலிருந்து நாம் வீர அபிமன்யு-கர்ணன் முதலான சினிமாக்களைப் பார்த்தோம். வீர அபிமன்யு என்ற பெயரில் இரண்டுக்கும் மேற்பட்ட படங்கள் வந்துள்ளன. ஒன்றில் எம்.ஜி.ஆர் சிறிய தோற்றத்தில் நடித்தார். பின்னர் ஏவி.எம் ராஜன் நடித்த வீர அபிமன்யு வந்தது. கர்ணன் படம் சிவாஜியின் உணர்ச்சிகரமான நடிப்பில் பந்துலுவின் இயக்கத்தில் சக்தி கிருஷ்ண சாமியின் வசனத்தில் வந்தது. தற்காலத்தில் அதனை டிஜிட்டலில் நவீன தொழின் நுட்பங்களுடன் பதிவுசெய்து திரையரங்கு நிரம்பிய காட்சியாககாண்பித்திருக்கிறார்கள். ”**

ஹிந்தியில் எடுக்கப்பட்டு ஏனைய இந்திய மொழிகளில் மாற்றம் செய்யப்படுகிறது.

வியாசர் படைத்த மகாபாரதத்திலிருந்து நாம் வீர அபிமன்யு - கர்ணன் முதலான சினிமாக்களைப்பார்த்தோம். வீர அபிமன்யு என்ற பெயரில் இரண்டுக்கும் மேற்பட்ட படங்கள் வந்துள்ளன. ஒன்றில் எம்.ஜி.ஆர் சிறிய தோற்றத்தில் நடித்தார். பின்னர் ஏவி.எம் ராஜன் நடித்த வீர அபிமன்யு வந்தது. கர்ணன் படம் சிவாஜியின் உணர்ச்சிகரமான நடிப்பில் பந்துலுவின் இயக்கத்தில் சக்தி கிருஷ்ணசாமியின் வசனத்தில் வந்தது. தற்காலத்தில் அதனை டிஜிட்டலில் நவீன தொழின் நுட்பங்களுடன் பதிவுசெய்து திரையரங்கு நிரம்பிய காட்சியாக காண்பித்திருக்கிறார்கள்.

ஒரு காவியம் - வால்மீகி - கம்பரிலிருந்து - ராஜாஜி - சோமு வரைக்கும் செய்யுளாக கவிதையாக உரைநடையாக திரையில் வசனமாகியிருக்கிறது.

வியாசர் விருந்தும் ராஜாஜியின் உரைநடைக்கு வந்து சக்திகிருஷ்ணசாமியின் வசனத்துக்கு வந்தது.

பத்துக்கட்டளைகள் - பென்ஹர் முதலான சினிமாக்களை எடுத்த சிசில் பீடி மெல்லிடம் ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டார்களாம், “ நீங்கள் உங்கள் திரைப்படங்களுக்கு எங்கேயிருந்து கதைகளை எடுக்கிறீர்கள்?”

தான் கதைகளுக்காக எங்கேயும் செல்வதில்லை தனக்குத் தேவையான கதைகள தாராளமாக பரிசுத்த வேதாகமத்தில் இருக்கிறது என்று சொன்னார் சிசில் பீடி மெல்.

ஏராளமான மேற்கத்தைய சினிமாக்கள் முதலில் இலக்கியமாக வாசிக்கப்பட்டவையாகத்தான் இருக்கின்றன.

போரும் சமாதானமும் - கடவுளும் கிழவனும் - குற்றமும் தண்டனையும் -ரோமியோ ஜூலியட் - கிளியோபாட்ரா- அன்னா கரினா - டொக்டர் ஷிவாகோ, - லேடி சார்ட்டர்லீஸ லவ் என்பன இவற்றில் முக்கியமானவை.

ஆங்கில நாடக இலக்கிய மேதை ஷேக்ஸ்பியரின் பெரும்பாலான நாடகங்கள் திரைப்படமாகியிருக்கின்றன. இலங்கையிலும் ஒரு தமிழ்ப்படம் கடமையின் எல்லை என்ற பெயரில் வந்தது.

வங்காளத்திரைப்பட மேதை சத்தியஜித்ரேயின் முதல் படம் பதேர்பாஞ்சலி. 1955 இல் வெளியானது. பிபிதிபூஷண பணர்ஜியின் நாவல். ரேயின் பல படங்கள் இலக்கியப்படைப்புகளிலிருந்து வந்தவைதான்.

அரேபிய இரவுகள் கதைகளில் ஒன்றுதான் நாம் பார்த்த எம்.ஜி.ஆர் - பானுமதி - வீரப்பா நடித்த அலிபாபாவும் நாற்பது திருடர்களும். இதே பெயரில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்த கறுப்பு - வெள்ளைப்படமும் முன்னர் வந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் நடித்த அலிபாபா கேவா கலரில் எடுக்கப்பட்டது.

நவீன தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரையில் கல்கி கிருஷ்ணமூர்த்தி - அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி - அகிலன்- மு.வரதராசன் - புதுமைப்பித்தன் - உமாசந்திரன், ஜெயகாந்தன் - மகரிஷி - இதயம்பேசுகிறது மணியன் - சிவசங்கரி - தி.ஜானகிராமன் - சுஜாதா - கி.ராஜநாராயணன்- பொன்னீலன் - கந்தர்வன் - சுஜாதா - ஜெயமோகன் ஆகியோரின் நாவல்கள் - சிறுகதைகள் திரைப்படங்களாகியிருக்கின்றன. இலங்கையில் செங்கை ஆழியானின் வாடைக்காற்று - காவலூர் ராசதுரையின் பொன்மணி ஆகிய நாவல்களும் திரைப்படமாகின.

குறும்படங்கள் தொலைக்காட்சி தொடர்களின் வருகையினால் அவற்றுக்கும் பலரது படைப்புகள் தீனி போட்டுள்ளன என்பதையும் மறப்பதற்கில்லை.

அகிலனின் சித்திரப்பாவை - தீபம் நா.பார்த்தசாரதியின் குறிஞ்சி மலர் ஜெயகாந்தனின் பாரிசுக்குப்போ - ராஜம் கிருஷ்ணனின் கரிப்புமணிகள் என்பன தொலைக்காட்சி தொடராக தயாரிக்கப்பட்டன.

பாலுமகேந்திரா மீடியாட்ரீம்ஸ் தயாரிப்பில் பல சிறந்த சிறுகதைகளை தெரிவு செய்து கதை நேரம் என்ற வரிசையில் பல தரமான குறும்படங்களைத் தந்தார்.

சுந்தரராமசாமி - திலகவதி - சமுத்திரம் - பிரபஞ்சன் உட்பட பலரது சிறுகதைளை கலைநேர்த்தியுடன் குறும்படங்களாக காண்பித்தார்.

எழுத்தாளரும் பத்திரிகையாளருமான முள்ளும் மலரும் மகேந்திரன் தான் படித்த இலக்கியப்படைப்பை நெடுங்காலம் உள்வாங்கியிருந்துவிட்டு அதற்கு திரைக்கதை வடிவம் கொடுப்பவர். புதுமைப்பித்தனின் சிற்றன்னையை உதிரிப்பூக்கள் என எடுத்தார்.

முதல் பரிசுபெற்ற முள்ளும் மலரும் நாவலுக்கு திரைக்கதை வசனம் எழுதி இயக்கினார் மகேந்திரன்

மகேந்திரன், எழுத்தாளர் கந்தர்வனின் சாசனம் என்ற சிறுகதையையும் அதே பெயரில் படமாக்கினார்.

சிவசங்கரியின் நண்டு பொன்னீலனின் உறவுகள் (பூட்டாத பூட்டுக்கள்) தென்னரசுவின் வாழ்ந்து காட்டுகிறேன் முதலான கதைகளுக்கும் திரைப்பட வடிவம் கொடுத்த மகேந்திரன், அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் விலங்கு மருத்துவர் நடேசன் எழுதிய வண்ணாத்திக்குளம் - முழு நாவலுக்கும் (இது தொடர்கதையல்ல) திரைக்கதை வசனம் எழுதினார்.

காட்சிக்கோணங்கள் என்பனவற்றை பதிவுசெய்து முடிக்கப்பட்ட அந்தத் திரைப்படச் சுவடியை பார்த்திருக்கின்றேன். இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளினால் தயாரிப்பு முயற்சி வெறும் எண்ணத்துடன் முற்றுப்பெற்றது.

இலக்கியத்திலிருந்தவாறு சினிமாத்துறையில் ஈடுபட்டவர்களின் வரிசையில் ஜெயகாந்தன்

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# கல்யாணக்கனவு

யாழ் சத்யா

வைஷாலி வேலை முடித்து வீட்டிற்குத் திரும்பிய போது அதுல்யா வீட்டில் இருந்தாள். தாயாரோடு தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தவள், வைஷாலியைக் கண்டதும் பேச்சை முடித்துக் கொண்டு சமையலறைக்குச் சென்று இருவருக்கும் தேநீர் தயாரித்து எடுத்து வந்தாள். அதற்குள் வைஷாலியும் முகம் கழுவி உடை மாற்றி விட்டு வரவேற்பறையில் வந்து அமர்ந்திருந்தாள்.

"என்னாச்சு வைஷூ...? நாலைஞ்சு நாளாக முகத்தில ஒரு பல்ப் எரிஞ்சுது. இன்றைக்கு என்ன பியூஸ் போய்ட்டுதா?"

அதுல்யாவின் கேள்வியில் தன்னை நினைத்தே சற்று மனம் சுணங்கினாள் வைஷாலி. 'இவ்வளவு பட்டதற்குப் பிறகும் இப்படியா அனைத்து




உணர்ச்சிகளையும் முகத்தில் காட்டுவோம்' என்று சிந்தித்தவாறே தேநீரை அருந்தலானாள். இவளது சிந்தனை வயப்பட்ட முகத்தைப் பார்த்து அதுல்யாவும் அதற்கு மேல் தூண்டித் துருவாது தொலைக்காட்சியைப் போட்டு விட்டு தேநீரை அருந்த ஆரம்பித்தாள்.

தேநீரைக் குடித்து முடித்த வைஷாலி ஏதோ முடிவெடுத்தவளாய் அதுல்யாவிடம் அனைத்தையும் சொல்ல ஆரம்பித்தாள். சஞ்சயனை வங்கியில் சந்தித்தது, பின்னர் கோயிலில் தானாகவே சென்று பேசியது, இப்போது சஞ்சயன் முரளியோடு கதைக்க வேண்டும் என்றது, டினருக்கு வருகிறேன் என்றது அனைத்தையும் சொல்லி விட்டு அதுல்யாவின் முகத்தையே பார்த்தாள்.

"வைஷூ...! இன்னும் எவ்வளவு நாளைக்கு நீ இப்படி பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒளிந்து கொண்டே இருக்கப் போறாய்? முரளிக்கு ஒளிச்சு இங்க வந்து இருக்கிறாய். ப்ரெண்ட்ஸ், சொந்த பந்தம் என்று யாரோடயுமே கதைக்காமல் இப்பிடித் தனிமையில் வாடுறாய். நீ என்னதான் ஸ்ரோங்காக இருக்கிறது போல காட்டிக் கொண்டாலும் நீ அன்புக்கும் பாசத்துக்கும் ரொம்ப ஏங்கிப் போயிருக்கிறாய்.

அதனாலதான் சஞ்சயனை உன் ஊர்க்காரனாக, சின்ன வயசு ப்ரெண்டாகக் கண்டதும் நீ போய்க் கதைச்சு இருக்கிறாய். நீயே யோசிச்சுப் பார். இவ்வளவு காலத்தில நீ உனக்கென்று போட்டு வைச்சிருக்கிற இந்த வட்டத்தை விட்டு வெளியே வந்ததே கிடையாது. முதல் தடவையாக சஞ்சுவோட தான் இவ்வளவு இயல்பாகக் கதைச்சிருக்கிறாய்.

உண்மையை சொல்லி அவனோட நீ ப்ரெண்டாகப் பழகுறதில என்ன தப்பு வைஷூ... நீ இப்பவும் ஒன்றும் டீன்ஏஜ்ல இல்லை. மனிசரை புரிஞ்சு நடக்கிற பக்குவம் வந்தாச்சு. நீதான் யோசிச்சு முடிவெடுக்க வேணும்.

முரளி பற்றிக் கேட்டிட்டான் என்றதுக்காக மொபைலை எல்லாம் ஓஃப் பண்ணி வைச்சிருக்கிறது எல்லாம் உனக்கே சின்னப்பிள்ளைத் தனமாகத் தெரியேல்லையா? உன்ர ஃபோன் வேலை செய்யேல்ல, உன்னைச் சந்திக்க வேணும் என்றால் சஞ்சயன் இனி பாஃங்கில வந்து பார்க்கலாமே. அவனுக்குத்தான் நீ வேலை செய்யும் இடம் தெரியுமே.

அவன் எப்படிப் பட்டவன் என்றெல்லாம் எனக்குத் தெரியாது வைஷூ. அது உனக்குத்தான் தெரியும். நான் உனக்கு ஒன்று மட்டும்தான் சொல்லுவன். ஒரு மனுசர் வாழுறதுக்கு வேலையும் கதைப் புத்தகங்களும் மட்டும் போதாது. அன்பு செலுத்த நாலு மனுசரும் தேவை. இனியாவது இப்படி ஓடி ஒளியாமல் நல்ல உறவுகளாகப் பார்த்துப் பேசிப் பழகு.

சஞ்சயன் எப்படியென்று நீயே முடிவு செய்து, அவன் நல்லவன் என்றால் நாளைக்கு லஞ்சுக்கு வீட்டுக்கு வரச் சொல்லு. லஞ்சுக்கென்றால் நானும் நிப்பன். இப்போ எனக்கு நைட் டியூட்டிக்கு நேரம் ஆகுது. நான் வெளிக்கிடுறன். நீ பொறுமையாக யோசிச்சு முடிவெடு..."

கூறி விட்டு வேலைக்குச் செல்லத் தயாராகுவதற்கு எழுந்து சென்றாள் அதுல்யா. தோழியின் வார்த்தைகளைக் கேட்டவள் பழைய ஞாபகங்களில் ஆழ்ந்தவளாய் சோபாவில் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

நீண்ட நாட்களின் பின்னர் கேட்ட முரளியின் பெயர் அவளைப் பழைய ஞாபகங்களிற்கு அழைத்துச் சென்றது. அவள் இறக்கும் வரை அவன் ஞாபகங்கள் அவளை விட்டு அழியப் போவதில்லை. புகை படிந்த ஓவியமாய் அவளின் இதயத்தின் அடி ஆழத்தில் வீற்றிருக்கத்தான் போகிறது. காரணம், அவள் முரளி மீது கொண்ட காதல் அத்தகையது.

காதல் என்ற சொல்லின் அர்த்தம் புரிந்து கொள்ள முன்னரே முரளி என்றால் அவளுக்கு அவ்வளவு பிடிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக ஹார்மோன்கள் தங்கள் வேலையைக் காட்ட ஆரம்பித்த நேரத்தில் முரளிதான் தனது உலகமென ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருந்தவளால் எப்படி அவனை அடியோடு மறந்து விட முடியும்?

**"நீண்ட நாட்களின் பின்னர் கேட்ட முரளியின் பெயர் அவளைப் பழைய ஞாபகங்களிற்கு அழைத்துச் சென்றது. அவள் இறக்கும் வரை அவன் ஞாபகங்கள் அவளை விட்டு அழியப் போவதில்லை. புகை படிந்த ஓவியமாய் அவளின் இதயத்தின் அடி ஆழத்தில் வீற்றிருக்கத்தான் போகிறது. காரணம், அவள் முரளி மீது கொண்ட காதல் அத்தகையது. காதல் என்ற சொல்லின் அர்த்தம் புரிந்து கொள்ள முன்னரே முரளி என்றால் அவளுக்கு அவ்வளவு பிடிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக ஹார்மோன்கள் தங்கள் வேலையைக் காட்ட ஆரம்பித்த நேரத்தில் முரளிதான் தனது உலகமென ஒரு மாயையில் வாழ்ந்து கொண்டிருந்தவளால் எப்படி அவனை அடியோடு மறந்து விட முடியும்?"**

இப்போதெல்லாம் தினம் தினம் முரளியை எண்ணி வருந்துவதில்லை. இருந்தாலும் ஏதாவது கதைகளில் அவன் பெயரைப் பார்த்தாலோ, அல்லது யாராவது அவன் பெயர் சொன்னாலோ, அவள் அவன் ஞாபக அடுக்குகளை ஒரு தடவை தூசு தட்டிப் பார்க்காமல் விடுவதில்லை. அது தரும் வலி உயிரை உலுக்கக் கூடியதாக இருந்தாலும் இவள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் முரளி பற்றிய எண்ணங்களை ஒரு தடவை மீட்டிப் பார்ப்பாள்.

இந்த வலியும் வேதனையும் மனதில் இருக்கும் வரையில் அவள் இந்த ஜென்மத்தில் இது போன்றதொரு தப்பை மறுபடியும் செய்ய மாட்டோம் தானே என்று அவளாகவே முடிவெடுத்து நினைவு வரும் போதெல்லாம் நினைத்துப் பார்ப்பாள் கடந்து வந்த காலங்களை. வழக்கமாக முரளியை உருகி உருகிக் காதலிக்க ஆரம்பித்த நாட்களிலிருந்துதான் இவள் எண்ணங்கள் அசை போடப்படும். இன்று முரளி பற்றிக் கேட்டது சஞ்சயன் என்றதாலோ என்னவோ சிறு வயதுக்கே சென்று விட்டாள்.

முரளி என்று அழைக்கப்படும் முரளிதரன், சஞ்சயன், வைஷாலி எல்லோரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள்தான். யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் அரசடி எனும் ஊரைச் சேர்ந்தவர்கள். முதலாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரைக்கும் ஒரே பாடசாலையில்தான் படித்தார்கள். அந்த பாலர் வகுப்புகளில் இவளது நெருங்கிய தோழமையாக சஞ்சயன் இருந்தது நினைவுக்கு வந்தது. சஞ்சயன் சிறு வயதிலிருந்தே அமைதியானவன். மலர்ந்த முகத்துடன் இருக்கும் அவனை எல்லோருக்கும் பார்த்த உடனே பிடித்து விடும்.

பாடசாலைக்கு முதல் நாள் சென்ற போது வைஷாலிக்கு அந்தப் பெரிய கட்டடங்களும், சீருடை அணிந்த மாணவர்களும், ஆசியர்களின் கண்டிப்பு நிறைந்த முகங்களும் வைஷாலி வயிற்றுக்குள் பயப் பந்தை உருள வைக்க, கண்களில் மிரட்சியோடு இருந்தவளை நெருங்கினான் சஞ்சயன்.

**(இவள் கனவு நனவாகுமா?)**



வேதநாயகம் தபேந்திரன்

# பிறசர்.....

“மனதை வைரமாக்கிக் கொண்டு 6 ஆம் வகுப்பு முதல் கருத்தூன்றிப் படித்தாள். க.பொ.த.சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளை அடைந்து பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்குத் தெரிவானாள். பொறியியல் படித்துப் பெரியதொரு நிர்மாணக் கம்பனியில் கைநிறையச் சம்பளம் எடுக்கின்றாள். அவளுடன் ஒன்றாகப் படித்துத் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்று வெற்றி விழாக் கொண்டாடியோர் சிலர் சாதாரண நிலையில் வாழ்வதைக் கண்டாள். தனது தோல்வி கற்றுத் தந்த மன வைராக்கியத்தை நினைத்துப் பார்த்தாள்.”

**1976** ஜனவரி மாத நடுப்பகுதி.காலை 8 மணி. அந்தப் பிரபல கல்லூரியின் வாசலில் தகப்பனும் ஏழு வயது மகனும் சைக்கிளிலிருந்து இறங்கினார்கள். பாடசாலைச் சீருடையில் மகன். தந்தை உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருந்தார். மதியம் தாண்டி நம்பிக்கை ஒளி இழந்து இருண்ட முகத்துடன் வெளியே வந்தார்.

மகனைச் சைக்கிளில் ஏற்றி வீட்டிற்கு அழைத்துச் சென்றார். போகும் போது மகன் கேட்டார் “அப்பா, ஏனப்பா பள்ளிக்கூட அனுமதி தரேல்லையோ?” இல்லைத் தம்பி “ ஏனப்பா” செல்வமும் செல்வாக்கும் இருந்தால்தான் பெரிய பள்ளிக்கூடங்களில் இடம் கிடைக்கும். அயலில் உள்ள எமக்கு அனுமதி தர மாட்டார்கள். எங்கேயோ தூரத்தில் உள்ளவர்கள் எல்லாம் வந்து படிப்பார்கள்.”

“அப்ப அப்பா நான் ஒரு நாளும் பெரிய பள்ளிக்கூடத்தில படிக்க ஏலாதோ?”

தந்தை சற்று யோசித்தார். “பிரபல கல்லூரி ஒன்றின் பெயரைச் சொல்லி அங்கு அனுமதிப் பரீட்சை வைத்துத் திறமையை மட்டும் வைத்து நூறு பேரை எடுப்பார்கள். அங்கு பலநூறு பேர் எழுதுவார்கள். அதில் ஒருவராக தம்பி நீங்கள் எடுபட்டால் பெரிய பள்ளிக் கூடத்தில் படிக்கலாம்” அப்படியோ அப்பா, அப்ப நீங்கள் என்னைப் பக்கத்தில் உள்ள சின்னப் பள்ளிக்கூடத்தில் படிக்க நாளைக்குச் சேருங்கள். இந்தச் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை என்னைக் கூட்டிக் கொண்டு போய் அந்தப் பெரிய பள்ளிக் கூடத்தைக் காட்டுங்கள்.

அந்தச் சனிக்கிழமை அந்தத் தந்தை தனது சின்னம் சிறு மகனுக்குப் புகழ்பூத்த அந்தப் பெரிய கல்லூரியைக் காட்டினார்.

அந்தப் பிஞ்சு மனதில் அந்தப் பெரிய கல்லூரியின் கட்டிடமே மனதில் நின்றது. நாளும் பொழுதும் ஊக்கத்துடன் படித்தான். 1980 இல் அனுமதிப் பரீட்சை எழுதினான். பாடசாலை அனுமதி வெட்டுப் புள்ளியை விட 14 புள்ளிகள் அதிகம் பெற்றான். பெருமகிழ்வுடன் அந்தப் பிரபல கல்லூரியில் அனுமதி பெற்றான். ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் படித்தான். பின்னாளில் பெரியதொரு அரச பதவியில் அமர்ந்து நிறைந்த சேவைகள் செய்தான்.

**2006...**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதியோரின் புள்ளிகளும் மாவட்டங்களின் வெட்டுப் புள்ளிகளும் வெளிவந்தன. அந்த மாணவிக்கு வெட்டுப் புள்ளியை விட 20 புள்ளிகள் குறைவாக வந்தது. தான் நன்றாகப் பரீட்சை எழுதியும் பெயில் பண்ணிவிட்டேனெனக் கீரிட்டுக் கதறினாள். தாய், தந்தை உற்றோரெல்லாம் சமாதானம் கூறினார்கள். தன்னுடன் படித்த பலர் பாஸ் பண்ணிய நடப்புக் காட்டப் போகின்றனரே என ஏங்கி அழுதாள்.

மனதை வைரமாக்கிக் கொண்டு 6 ஆம் வகுப்பு முதல் கருத்தூன்றிப் படித்தாள். க.பொ.த.சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளை அடைந்து பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்திற்குத் தெரிவானாள். பொறியியல் படித்துப் பெரியதொரு நிர்மாணக் கம்பனியில் கைநிறையச் சம்பளம் எடுக்கின்றாள்.



அவளுடன் ஒன்றாகப் படித்துத் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்று வெற்றி விழாக் கொண்டாடியோர் சிலர் சாதாரண நிலையில் வாழ்வதைக் கண்டாள். தனது தோல்வி கற்றுத் தந்த மன வைராக்கியத்தை நினைத்துப் பார்த்தாள்.

**1990 , 1991...**

அவனது இளமைப் பருவத்தில் வாழ்க்கைப் பாதையில் பெரும் பள்ளத்தினுள் விழுந்து போனான். ஆள் இனி மீள எழும்ப முடியாது என்றார்கள் பலர். மாண்டவன் மீண்டெழுந்து வந்தான். இந்த உலகம் தன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென மனதில் ஓர்மம் கொண்டான். தனக்குள் என்னென்ன திறமைகள் இருக்கிறதென தன்னைத் தானே தோண்டி ஞானம் கண்டான்.

திறமைகளை நாளும் பொழுதும் வளர்த்துத் தன்னை மெருகேற்றிக் கொண்டான். முதலில் அவனை அவனது ஊர் திரும்பிப் பார்த்தது. பின்னர், அந்தப் பிரதேசம் ஊன்றிக் கவனித்தது. அடுத்து மாவட்டம் வியப்புடன் பார்த்தது. தனது ஆளுமைகளின் எல்லைகளை மேன்மேலும் வளர்த்து வந்தான். பின்பு நாடு,சர்வதேசம் என யாவரும் திரும்பிப் பார்த்தனர். இப்போது அவன் உலகம் அறிந்த மனிதன்.

அவன் தனக்குள் அடிக்கடி சொல்லிக் கொள்வான் “விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பது தான் பெருமை”

**1983...**

வீட்டில் கஸ்டம். படிக்கக் காசில்லை. என்ன செய்வது? யோசித்தான். தனது சின்னச் சைக்கிளில் 5 லீற்றர் பிளாஸ்ரிக் கானைக் கட்டிக் கொண்டு மண்ணெண்ணைக் குதம் சென்றான். பால் சொக்கும் வற்றாத அந்தப் பதினொரு வயதுப் பாலகனைக் கண்டவுடன் மண்ணெண்ணைக் குத முதலாளிக்கு மனம் இரங்கி விட்டது. ஆளுக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணை கொடுத்த அவர் அந்தச் சிறுவனுக்கு 5 லீற்றர் கொடுத்தார். அவன் அதை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தான். பக்கத்து ரவுணிலுள்ள கடைக்குச் சென்று கால் போத்தல் அரைப் போத்தல் என அளக்கும் பேணிகளை வாங்கி வந்தான். பாடசாலை இல்லாத நேரங்களில் சனப்புழக்கமுள்ள ஓர் இடத்தில் வைத்து விற்றான். இலாபத்தில் ஒரு பங்கை மீண்டும் முதலிட்டான். ஒரு பங்கைத் தாயிடம் கொடுத்து வீட்டுக் கஸ்டம் பார்த்தான்.

1989 ஆம் ஆண்டில் மேற்கு ஐரோப்பிய நாட்டிற்குப் புலம் பெயரும் வாய்ப்புக் கிடைத்தது. அவனது ஆளுமை தெரிந்து நகை நட்டுக் காணியை ஈடு வைத்து அனுப்பினார்கள். பனிசூழ்ந்த நிலத்தில் தன்னை மெல்ல மெல்ல வளர்த்துக் கொண்டான். அவன் அங்கு இப்போது முதல் வரிசைத் தொழிலதிபர்.

மனிதர்களின் உடலில் பிறசர். அதாவது, இரத்த அழுத்தம் வருவது ஆரோக்கியத்திற்குக் கூடாது. ஆனால் வாழ்க்கைப் பாதையில் வரும் பிறசர் அதாவது அழுத்தம் மனிதர்களுக்குப் போராடிப் புதிய திசைகளில் வெல்லும் மனவலிமையைக் கொடுக்கும். முயற்சி என்ற ஒன்றை மட்டும் மூச்சுப் போலே சுவாசிப்போம். ■

# கிழக்கு மாகாண அபிவிருத்தியில் சுற்றாடல் பாதுகாக்கப்பட வேண்டும்

## -ஆளுநர் அனுராதா யஹம்பத்

பைஷல் இஸ்மாயில்

இயற்கை வளம் நிறைந்த கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்து செழிப்பான மாகாணமாக்கும் திட்டம்பற்றிய தெளிவான கருத்துக்களை ஆளுநர் அனுராதா யஹம்பத் கொண்டுள்ளார். மண், விவசாயம், சுகாதாரம், தூய்மை, கல்வி, கலாசாரம், மருத்துவம், இயற்கை மூலிகை என்பனவற்றை உரிய முறையில் அபிவிருத்தி செய்வது போன்ற பல திட்டங் கள் பற்றி விரிவாகத் தெரிவித்துள்ளார்.

**கிழக்கு மாகாணத்தின் தூரநோக்கு பற்றி குறிப்பிட முடியுமா?**

கிழக்கு மாகாணத்தின் சூழலியல் அமைப்பினது ஏந்து திறனை தாங்கிச் செல்வதுதான் முதல் பணி. உள்ளூர் சமுதாயத்தினது விருப்பின்படி பொருளாதாரச் சுழற்சி மிக்க சுபீட்சமானதொரு மாகாணமாக விருத்தி செய்வது சுற்றுச்சூழல் பொறுப்புடைத் தன்மையின் வாயிலாக சமுதாய முன்னேற்ற பொருளாதார சுபீட்சத்தின் விருத்திக்கான சுதேச அபிவிருத்தி மாதிரிகளை உள்வாங்கிய அபிவிருத்தியை நோக்கிய மாகாணமாக்குவதே நோக்கமாகும்.

**கிழக்கு மாகாணத்தின் சுபீட்சத்தின் நோக்கு என்ன?**

எமது இல்லம், எமது சுவாசத்திற்கான காற்று, வாழ்வதற்கும் குடிப்பதற்கும் நீர், உணவு, பயிரிட மண், எமது சுற்றாடலை ஒழுங்குபடுத்தும் வளம் போன்றவற்றுக்கு முன்னுரிமை. கிழக்கு மாகாணத்தை எதிர்கால சந்ததியினருக்கான சுபீட்சத்தை உறுதிப்படுத்தும் அனைத்து செயற்பாடுகளிலும் எமது சுற்றாடலை பாதுகாத்து வழங்குவதாகும்.

எமது நாடு பரந்துபட்டதும், தனித்துவமான இயற்கைச் சுற்றாடலுடன் பெறுமதிமிக்க இயற்கை வளங்களின் செழிப்பானது. அவற்றின் வாயிலாக சுபீட்சத்திற்கான இயற்கைச் சுற்றாடலை உறுதிப்படுத்தி செயலாற்றல் மிக்க உயிரியற் சுழற்சி முறைப் பொருளாதாரமொன்றை விருத்தி செய்து உலகம் பின்பற்றக் கூடியதொரு அபிவிருத்தியை செயற்படுத்துவதற்கு இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்வதாகும்.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்தின் சுபீட்சத்தின் நோக்கு என்ற கொள்கையின் இலக்குளை அடையாளங் கண்டுகொள்வதற்காக அனைத்துத் துறைகளையும் இணைத்து நிலைபேறான வாழ்வியற் சுழற்சி வழியாக மக்களின் நலனை உறுதிப்படுத்தி இயற்கைச் சுற்றாடலை வளப்படுத்தி அனைத்துச் செயற்பாடுகளிலும் பூரணத்துவமான இலக்குகளை அடைவதாகும்.

**கிழக்கு மாகாணத்தில் நிலைபேறான அபிவிருத்தியை செயற்படுத்துவதற்கு எவ்வாறான வழிமுறைகளை கையாள்வீர்கள்?**

வாழ்வியல் பாதுகாப்பு, வாழும் இடத்தினை மீள் அமைத்தல், சுற்றுச்சூழல், நட்பு முறையிலமைந்த போக்குவரத்து வலையமைப்பு, சுற்றுச்சூழல் நட்புமுறைக் கட்டுமானங்கள், கழிவு முகாமைத்துவம், தொல்பொருளியல், சுற்றுலாத்துறை, நீர்ப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, விதைகள், மீன் பிடி, கால்நடை, இறைச்சி, முட்டை, பால் உணவு, சக்திப் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, ஆளுகை போன்ற வழிமுறைகள் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வோம்.

**நீங்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் மூலம் எவ்வாறான அபிவிருத்தியை அடைந்து கொள்வீர்கள்?**



கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்திலும் சுற்றாடல் பாதுகாக்கப்பட்டே மேற்கொள்ளப்படுகின்றது. எமது அரசின் கொள்கைக்கு அமைவாக எமது நாட்டில் அருகிவரும் சுற்றாடல் அமைப்பை மீட்டெடுத்து புனர்நிர்மாணம் செய்து சுற்றாடலைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் முன்னெடுத்து பொருளாதார ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்களை பாதுகாப்பதாகும்.

விவசாயம், சுகாதார பராமரிப்பு, சுற்றுலாத் துறை, கல்வி மற்றும் தொழின்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த வகையில் விவசாய சூழலியல் கைத்தொழில் அணுகுமுறையினூடான சுழற்சிமுறைப் பொருளாதார நிலையை ஈட்டிக் கொள்வதற்காக முறையான திட்டத்தை வகுத்து அதனடிப்படையில் முன்னெடுக்கப்படும்.

> **கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்திலும் சுற்றாடல் பாதுகாப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எமது அரசின் கொள்கைக்கு அமைவாக எமது நாட்டில் அருகிவரும் சுற்றாடல் அமைப்பை மீட்டெடுத்து புனர்நிர்மானம் செய்து சுற்றாடலைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் முன்னெடுத்து பொருளாதார ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்களை பாதுகாப்பது. விவசாயம், சுகாதார பராமரிப்பு, சுற்றுலாத்துறை, கல்வி மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த வகையில் விவசாய சூழலியல் கைத்தொழில் அணுகுமுறையினூடான சுழற்சிமுறைப் பொருளாதார நிலையை ஈட்டிக்கொள்வதற்காக முறையான திட்டத்தை வகுத்து அதனடிப்படையில் திட்டங்கள் எடுக்கப்படுகின்றன.**

இதற்காக எனது அலுவலக அதிகாரிகள் முறையான திட்டமிடலை செயற்படுத்தி வருகின்றனர். அதாவது, மக்களின் நலன்கள், சுகாதாரம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றுடன் உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்புடன் ஒருங்கிணைந்து செயற்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் கழிவு முகாமைத்துவத்தில் நேர்த்தியான கழிவு முகாமைத்துவ முறைமையை ஆரம்பித்து அந்தக் கழிவுகள் கிராம, நகர மற்றும் மாநகர மட்டத்தில் திரட்டி அதை மாகாண மட்டத்தில் மீள் நோக்கத்திற்கு உட்படுத்தி சேதனப் பசளை, உருவாக்கத்திற்கும், சக்தி உற்பத்திக்கும், மீள் பாவனைக்கான மீள் சுழற்சி மற்றும் மீள் உருவாக்கம் என்பவற்றிற்காக அவற்றை பயன்படுத்துதலாகும்.

மீன்பிடித்துறைசார் தயாரிப்பதற்கான தேவைகளை ஆய்வு செய்து உள்ளூர் நீர் நிலைகளைப் பாதுகாத்து அதை வளப்படுத்துகின்ற அதேவேளை கரையோர நீர் நிலைகளில் பாரம்பரிய மற்றும் நவீன தொழின் நுட்பங்களைப் பயன்படுத்தி மீன்பிடி வளங்களை விரிவாக்கம் செய்வதாகும்.

சுதேச, அலோபதி மற்றும் பூரண சுகாதார பராமரிப்பு வழங்குநர் மற்றும் உற்பத்தியாளர்களை பதிவு செய்து அவர்களை ஒருங்கிணைப்பதற்கு ஒரு புதிய முறைமை ஒன்றை மாகாணத்தில் அறிமுகப்படுத்துவது அனைத்து சுகாதார சேவை வழங்கும் நிலையங்களை வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்புக்கும், முகாமைத்துவத்திற்கும் உள்வாங்கி செயற்படுத்துவதாகும்.

தேசிய சுதேச வைத்திய சங்கம், இலங்கை ஆயுள் வேத வைத்திய சங்கம் போன்றவற்றின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அனைத்து நிபுணர்களின் ஒத்துழைப்புடன், கிழக்கு மாகாணத்தில் தேவைப்படும் மூலப் பொருட்கள் சம்பந்தமான பொதுத் தரவுத்தளம் ஒன்றை ஸ்தாபிப்பது. மருத்துவ தேவைகளுக்காகவும், சர்வதேசத்தில் நிலவும் மூலிகை அழகு சாதனப் பொருட்களுக்கான கேள்வியை ஈடு செய்யத்தக்க வகையிலும், மூலிகைகளை உற்பத்தி செய்வதற்காக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது.

சுகாதார அமைச்சு சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஆயுள்வேத, சித்த, யுனானி, ஏனைய சுதேச பாரம்பரிய வைத்தியம், ஹோமியோபதி போன்ற வைத்திய முறைகளை சுற்றுலாத்துறையின் கேள்விக்கும், உள்ளூர் தேவைப்பாடுகளை ஈடு செய்யத்தக்க வகையில் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தி வைத்தல்.

முன்பள்ளி முதல் மூன்றாம் நிலைக் கல்வி வரையில் தொழின்நுட்பக் கல்வி உள்ளிட்ட செயற்பாட்டுத்திட்டம் ஒன்றினை வடிவமைத்து அத்திட்டத்தை அமுல்படுத்துவதே எமது குறிக்கோளாகும். கிராமியப் பாடசாலைகளில் இழக்கப்பட்ட தரங்களை மேம்படுத்துவதற்கும், அத்தகைய பாடசாலைகள் மூடப்படுவதிலிருந்து தடுப்பதற்கும், உட்கட்ட வசதிகள் மற்றும் நவீன தொழின்நுட்ப வசதிகளை வழங்குவதற்கும், மிகவும் பின்தங்கிய கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் புதிய முறை ஒன்றினை உருவாக்குதல் போன்ற பல திட்டங்களை உள்வாங்கி கிழக்கு மாகாணத்தை எல்லா மாகாணங்களை விடவும் ஒரு எடுத்துக்காட்டான மாகாணமாக மாற்றியமைப்பதே எனது நோக்கமாகும். ■



# அளப்பரிய பணிகளை ஆற்றிவரும் அன்பே சிவ நிறுவனம்

பானு

ஈழத்து தமிழ் மக்களின் இன்று ஓரளவு பொருளாதாரத்தோடு வாழ்வதற்குப் புலம் பெயர் நாடுகளில் உள்ள உறவுகளும், சமூக அமைப்புக்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுவிஸ் சூரிச் சிவன் கோயில் சைவத்தமிழ்ச் சங்கம் 25 ஆண்டுகளிற்கு மேலாக பரந்துபட்ட அமைப்பாக சைவத்துக்கும் தமிழுக்கும் மனிதாபிமானத்துக்குமான பணிகளை அதன் உப அமைப்புக்கள் மூலம் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகின்றது. ஈழத்தில் யுத்தம் முடிந்த பின் தமிழ் மக்களின் தேவையை அறிந்து “அன்பே சிவம்” என்னும் அமைப்பை உருவாக்கி அதன் மூலம் தாயகத்தில் உள்ள உறவுகளுக்கு நீண்ட காலம் அன்புக்கரம் கொடுத்து வருகிறது. இவ் அமைப்பின் செயற்பாடுகளாக

கல்வி
வாழ்வாதாரம்
மனிதாபிமானம்
நிவாரணப் பணிகள்
வரப்புயர மரநடுகைத்திட்டம்
தமிழர் கலாசார நிகழ்வுகள்
சிவபுர வளாகம்.

போன்ற பல பணிகளை செய்து வருகிறது. இவ் அமைப்பானது யுத்தம் முடிந்த பின் உயிர் இழப்புக்கள், பொருளாதாரரீதியான கஸ்டங்கள், உடல் அவயங்களை இழந்தும், காணாமல் ஆக்கப்பட்டும் என தமிழ் மக்கள் பல துயரங்களை சந்தித்து நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டு யாருமற்ற ஏதிலிகளாக வறுமையில்வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் எம் தாயக மக்களுக்கு அன்புக்கரம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடு “மண் சுமந்த மேனியர்” என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு 21.03.2010இல் மணற்காடு இடைத்தங்கல் முகாமில் தற்காலிகமாக வசித்துக் கொண்டிருந்த மக்களிற்கான உணவு, சத்துணவு, கல்வி போன்றவற்றிற்கான உதவித் திட்டத்தின் ஊடாக தனது முதல் திட்டத்தினை ஆரம்பித்து தாயகத்தின் பல பகுதிகளிலும் உதவி செய்வது மட்டுமல்லாமல் மலையகப் பகுதிகள் என நாட்டின் பல பகுதிகளிலும் பல பணிகளைச் செய்துவருகிறது.

அன்பே சிவ அமைப்பானது ஆரம்ப காலத்தில் ஜேர்மன் நாட்டின் நேசக்கரம் எனும் அமைப்போடு இணைந்து செயற்பட்டது. குறுகிய காலத்தில் 28.08.2010 இல் திக்கம் கலாசார மண்டபத்தில் உத்தியோக பூர்வமாக தனி அமைப்பாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் போரால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்களிற்குப் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டன. உதவித் திட்டங்களில் மாணவர்களிற்கான மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், துவிச்சக்கர வண்டிகள், வறிய குடும்பங்களுக்கான மாதாந்த உதவித் தொகைகள், ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவித் தொகை வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு வைக்கப்பட்டது. இவ் நிகழ்வில் சமயப் பெரியோர்கள், கல்விமான்கள், பெரியோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். தாயகப் பகுதி மக்கள் சுதந்திரமாக நடமாடவோ, ஒன்று சேரவோ முடியாத ஒரு காலப்பகுதியில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. புலம் பெயர் வாழ் உறவுகள் எம்மை திரும்பிப் பார்த்து உதவுகிறார்கள் என மக்களுக்கு ஒரு புத்துணர்வையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

சுவிஸ் சொலத்தூண் தமிழர் நலன்புரிச் சங்கம் அன்பே சிவ அமைப்போடு இணைந்து மனித நேயப் பணிகளைச் செய்து வருகிறது. பின்னர் இதன் பலாபலனாக சுவிஸ் தமிழ் கல்விச் சோலை நூற்றுக் கணக்கான மாணவர்களிற்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவையும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை, சுய தொழில் முயற்சிகள், வாழ்வாதார உதவிகள், மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், கற்றல் உபகரணம் போன்ற உதவிகளை வழங்குகின்றன. தொடர்ந்தும் எம் மக்களிற்கான தேவைகளை வழங்கும் நேர்கோடு 2011 இல் அன்பே சிவம் என்னும் பெயரோடு பணிகளைச் செய்து வருகிறது.

**கல்வி**

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்களில் கல்வியாலும் வறுமையாலும் பின் தங்கிய இடங்களை இனம் கண்டு அங்கு கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்க மாணவர்களிற்கு கற்றல் உக்குவிப்புக்காக மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள், மாலைநேர கல்வி நிலையங்கள், கணினி பயிற்சி நிலையங்கள், மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள், காலணிகள், ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள், கல்வி நிலையங்களிற்குக் கொட்டகைகள், தளபாடங்கள், முன்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் எனப் பல்வேறு வகையான செயற்பாட்டை செய்து வருகிறது. இதில் குறிப்பிடத்தக்க விடயமாக பார்வையற்றோருக்கான கணினி நிலையம் ஒன்றை கிளிநொச்சி பிரதேசத்தில் உருவாக்கி அதனூடாகப் பார்வையற்றோருக்கான தொழில் வாய்ப்பையும் கற்றல் செயற்பாட்டையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

வன்னிப் பிரதேசங்களில் மீள் குடியேற்றப்பட்ட காலத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமல் பாடசாலை செயற்படத் தொடங்கிய காலத்தில் கிளி/முருகானந்த கல்லூரியில் T.வரதன் தலைமையில் கணனிக் கூடம் அமைக்கப்பட்டு கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், அரச ஊழியர்கள் எனப் பலர் கல்வி கற்று சான்றிதழ்களையும் பெற்று நல்ல நிலைக்கு அவர்கள் செல்ல இவ் அமைப்பு வழிகாட்டியது.

**வாழ்வாதாரம்**

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக கிளி/முருகானந்த கல்லூரியில் இன்னொரு அங்கமாக தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பல யுவதிகளுக்குப் பயிற்சிகளை கொடுத்து சுயமாகத் தொழிலில் ஈடுபட வழியமைத்தது இவ் நிறுவனம். அத்தோடு தொடர்ந்தும் அக்கரைப்பற்று, வவுணதீவு பிரதேசங்களிலும் யுவதிகளுக்குத் தையல் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

அன்றாட வாழ்வாரத்திற்கு மிகவும் வறுமைப்படும் மக்களை இனம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் விதமாகப் பல சுய தொழில் முயற்சிகளுக்கான நிதிக் கொடுப்பனவுகள், கால் நடைகளான ஆடுகள், மாடுகள் மற்றும் கோழிகள் என்பவற்றை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழியமைத்து வருகிறது. தையல் மிசின் என்பவற்றையும் வழங்கி சுயமாகத் தொழில் செய்து முன்னேறவும் உதவி புரிகிறது.

**மனிதாபிமானம்**

அன்பே சிவ அமைப்பானது சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், பாடசாலை, முன்பள்ளிகள், கல்வி நிலையங்கள் என்பவற்றுக்கு உணவு, உடைகள் வழங்கி மாணவர்கள் நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி பயணிக்க வழியமைத்துக் கொடுக்கிறது.

**நிவாரணப் பணிகள்**

இந்த அமைப்பு கற்றல் செயற்பாட்டிக்கும் வாழ்வாதாரத்திற்கு மட்டுமல்லாமல் தாயகத்திலும் மலையகத்திலும் இயற்கை அனர்த்தம் ஏற்படும் போது உடனடியாக அந்தந்த பிரதேசங்களில் நேரடியாக அன்பே சிவ தொண்டர்கள் மூலம் உலர் உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள், உடைகள் என்பவற்றை இனம், மதம், மொழி பாராமல் மனித நேயத்தோடு உறவுகளுக்கு அன்புக்கரம் செய்து வருகிறது.

> அன்பே சிவ அமைப்பானது ஆரம்ப காலத்தில் ஜேர்மன் நாட்டின் நேசக்கரம் எனும் அமைப்போடு இணைந்து செயற்பட்டது. குறுகிய காலத்தில் 28.08.2010 இல் திக்கம் கலாசார மண்டபத்தில் உத்தியோக பூர்வ மாகத் தனி அமைப்பாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் போரால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்களிற்கு பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டன.




**வரப்புயர மரநடுகைத் திட்டம்**

தமிழர்களின் புனித மாதமாகப் போற்றப்படும் கார்த்திகை மாதத்தில் “வரப்புயர” மர நடுகைத் திட்டத்தை ஆரம்பித்து தாயகப் பகுதிகளில் யுத்தம், இயற்கை அனர்த்தம் போன்ற காரணங்களால் ஏராளமான மரங்கள் அழிக்கப்பட்டன. இதைக் கருத்தில் கொண்டு கிராமங்கள், பாடசாலைகள், வீதியோரங்கள் என அனைத்து இடங்களிலும் மர நடுகை செய்வதோடு இலவசமாக மக்களிற்கு மரக்கன்றுகளை வழங்கி வருகிறது. இன்று நாட்டில் அதிகரித்த வெப்பநிலை சூழல் ரீதியான மாறுபாடுகளைச் சமாளிக்க பயன் தரு மரங்கள் அவசியம். அதனால் இவ் வரப்புயர திட்டத்தை ஒவ்வொரு வருடத்தின் கார்த்திகை மாதத்தின் தாயகப் பகுதியில் செயற்படுத்தி வருகின்றது.

**சிவபுர வளாகம்**

முக்கிய செயற்பாடாக சிவபுர வளாகம் அமையப் பெற்று வருகிறது. இவ் வளாகமானது இது வரை காலமும் தாயகப் பகுதியில் பல்வேறு வேலைத் திட்டங்களை செய்தாலும் நிரந்தரமானதும் நீடித்து நின்று மக்களிற்குப் பயன்தரக் கூடிய வேலைத்திட்டங்களாகும். இவ்வளாகத்தில் முதியோர் இல்லம், வணக்கஸ்தலம், தொழிற் பயிற்சி நிலையங்கள், பொழுது போக்கு பூங்காக்கள், விவசாயப் பண்ணைகள் என அனைத்து மக்கள் நலம் சார்ந்த திட்டங்களை உருவாக்கி துன்பப்படும் மக்களுக்கும் பயன்பெறும் ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

**தமிழர் கலாசார நிகழ்வுகள்**

வருடத்தின் தமிழர் பொங்கலாம் தைப்பொங்கல் தினத்தில் உழவுத் தொழிலையும் அதற்குரிய பயனை உருவாக்கிய சூரியதேவனையும் நன்றி செலுத்தும் விதமாக தைப்பொங்கல் பொங்கி தமிழர் கலாசார ஆடையும் அணிந்து தொண்டர்கள், பொதுமக்கள் காணப்படுவர். அத்தோடு பொங்கல் பாடல், பறை அடித்தல், கவி அரங்கம், சங்கீத பஜனை, வில்லிசை, நடனம் போன்ற தமிழர் கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெறும். அவ் நிகழ்விலும் வாழ்வாதாரத்திற்கு கஷ்டப்படும் பல உறவுகளுக்கு அன்றைய தினம் உதவிகளும் வழங்கப்படுவதுண்டு.



# இதற்குப் பெயர்தான் காதலா?

அமுதயாழினி

“சந்தியா.. கம்பஸூம் முடியுது. உனக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கிடுவினம்.. இனியும் ஒண்டும் சொல்லாம இருந்தால் நான் என்ன செய்ய?”

“என்னது..? நான் ஒண்டுமே சொல்லேலையோ.. கொஞ்சமாவது மனச்சாட்சியைத் தொட்டுக் கதையும் சுகந்தன். இப்ப நாலு வருசமாக நானும் எனக்கு உம்மைப் பிடிக்கேல்ல என்றதைத்தானே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறன்..”

“நீ இல்லாத ஒரு வாழ்க்கைய என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியேல்ல சந்தியா.. எனக்கு என்ன குறையென்று மாட்டன் சொல்லிறாய்?”

“சுகந்தன்... எனக்கு இந்த காதல், கலியாணத்தில விருப்பம் இல்லை. எனக்கு மேல படிக்க வேணும். மாஸ்டர், பிறகு பிஎச்டி முடிக்க வேணும். அதெல்லாம் முடியத்தான் என்னால கல்யாணம், குடும்பம் எதைப் பற்றியாவது கொஞ்சமாவது யோசிக்க முடியும்.. அதால தயவுசெய்து என்னை விட்டிடுங்கோ..”

“அப்படியெல்லாம் லேசில விடுறதுக்கே நான் இத்தினை வருசமாகப் பின்னாலயும் முன்னாலயும் திரிஞ்சனான். நீ உங்க மாஸ்டர் ஒண்டும் படிச்சுக் கிழிக்கத் தேவையில்ல. டிகிரிய எடுத்துப் போட்டு ஒரு டீச்சர் உத்தியோகம் பாத்தால் போதும்”

“உங்களோட கதைச்சு வேலையில்ல. இனி பொலிஸ்லதான் கொம்பிளைன் பண்ணப் போறன்..”

சொல்லிவிட்டு வேகமாகத் தனது விரிவுரை நடக்கும் வளாகத்தை அடைந்தாள் சந்தியா. மனதோ கொதித்தது. கூடப் படிக்கின்ற பொடியனாச்சே என்று அவளும் முடிந்தவரை தன்மையாகவே தனது மறுப்பைத் தெரிவித்துக் கொண்டேதான் வருகிறாள். ஆனால், அவன்தான் எதையும் காதில் விழுத்துவதாகவே இல்லையே.

அன்று வகுப்புகள் முடிவடைய துவிச்சக்கர வண்டியில் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் சந்தியா. அப்போது அங்கே வந்த ஒரு ஹயஸ்வான் அவளை இழுத்து உள்ளே போட்டபடி சிட்டாகப் பறந்தது. மூக்கின் அருகே கொண்டு வந்த கைக்குட்டையின் நெடியில் மயக்கமானவள், கண் விழிக்கப் பலமணி நேரம் ஆகியது.

எழுந்து பார்த்த போது யாரோ ஒருவரின் வீட்டின் படுக்கையறை என்பது புரிந்தது. உடலில் ஏற்பட்ட வலி மனதுக்குள் எதையோ உணர்த்த தன்னை ஆராய்ந்தவளுக்கு நெஞ்சுக்கூடு காலியாகியது. அரைகுறை ஆடையும் படுக்கையில் இருந்த உதிரமும் அடிவயிற்றில் ஏற்பட்ட பயங்கர வலியும் நடந்ததை உணர்த்த, தன்னை இந்நிலைக்கு ஆளாக்கியது யாராக இருக்கும் என்ற எண்ணத்தோடு எழக் கூட முடியாமல் விட்டத்தை வெறித்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவளை காக்க வைக்காது அறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. கோபத்தோடும் வெறுப்போடும் கதவை நோக்கினாள் சந்தியா. அவள் எதிர்பார்த்தது போலவே வந்தது சுகந்தன்தான்.

“எழும்பிட்டியா சந்தியா?”

“ஏன்டா நான் உனக்கு என்ன பாவம் செஞ்சனான் என்று எனக்கு இந்தப் பெரிய தண்டனை தந்து இருக்கிறாய்?”

கோபத்தோடு தொடங்கியவளால் முடிக்க முடியாமல் அழுகை வெடித்துக் கிளம்பியது.

“எனக்கு நீ என்றால் உயிர் சந்தியா. எந்தக் காரணத்திற்காகவும் என்னால உன்னை இழக்க முடியாது. நான் உன்னை வீடியோ எடுத்து வைச்சிருக்கிறன். இனிமேல் உன்னால யாரையும் கலியாணம் செய்ய முடியாதுதானே. உன்ர கற்பே போன பிறகு யார் உன்னை கட்டுவாங்க?”

“இதுக்கெல்லாம் நான் பயப்பிடுவன் என்று மட்டும் நினைக்காதை. என்னை சும்மா விட்டிருந்தாலாவது பிஎச்டி முடிய உன்னை கட்ட யோசிச்சிருப்பனோ என்னவோ.. இனி அது கனவில கூட நடக்காது. கட்டாமலே இருந்தாலும் இருப்பனே தவிர உன்னைக் கட்டவே மாட்டன்டா..”

கூறியவள் தடுமாறியபடியே எழுந்து உடைகளை அணிந்து கொண்டு பேருந்தைப் பிடித்து வீட்டிற்குப் புறப்பட்டாள்.

அங்கே அவளுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. வரவேற்பறையில் பெற்றோர், தமையனோடு சுகந்தனும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான். உள்ளே கணன்ற கோபத்தை அடக்கி தாயின் அருகே சென்று அமர்ந்தாள்.

“சந்தியாவே வந்திட்டா. நாலு வருசமாக நான் அவளை காதலிக்கிறன். எங்களுக்குள்ள சாதி, மதம், பொருளாதாரப் பிரச்சினை எதுவும் இல்லை. கம்பஸ் முடிய வேலை கிடைச்சதும் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுறன். நீங்கதான் உங்கட முடிவைச் சொல்ல வேணும்..”

தாயும் தந்தையும் யோசனையோடு ஒருவரை ஒருவர் பார்க்க சந்தியா குறுக்கிட்டாள்.

“அப்பா.. அம்மா இங்க பாருங்கோ.. நான் இப்ப கல்யாணம் செய்யிறதாக இல்லை. எனக்கு மாஸ்டர் முடிச்சு பிஎச்டி செய்ய வேணும்.. இதை நான் சுகந்தனிட்டயும் சொல்லிட்டன்..”

“அதை கல்யாணத்திற்குப் பிறகும் படிக்கலாம் தானே..”

அண்ணன் தன் கருத்தைச் சொன்னான்.

“சுகந்தனுக்கு நான் மேல படிக்கிறது விருப்பம் இல்லை. அப்படிப்பட்ட ஆளை என்னால கல்யாணம் பண்ண முடியாது. அதை விட என்னை மயக்கிக் கடத்தி ரேப் பண்ணினவனை எந்த ஜென்மத்திலயும் நான் கட்ட மாட்டன்..”

“என்னடி சொல்லுறாய்?”

வெகுண்டெழுந்த அண்ணன் சுகந்தனின் சேர்ட் கொலரை கொத்தாகப் பிடித்து அவனை அடி வெளுத்தான். பெற்றோரோ காதில் கேட்ட செய்தியை ஜீரணிக்க முடியாமல் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தார்கள்.

“நான் என்ன கட்ட மாட்டன் என்று ஓடிப் போய்ட்டனா? என்னை கட்டச் சொல்லித்தானே கேட்கிறன். இப்பிடி குடும்பமாகச் சேர்ந்து என்னை அவமானப்படுத்திறியள்.. உங்களை எல்லாம் சும்மா விட மாட்டன். நீங்கள் இனி எப்பிடி மானத்தோட வெளில தலை காட்டுறியள் என்றதையும் பாக்கிறன்.”

சத்தமாகவே கூறியவன் அங்கிருந்து வெளியேறினான். குடும்பமே தலையில் கை வைத்தவாறு அமர்ந்தது.

“அப்பா.. இவனை இப்பிடி சும்மா விடக் கூடாது. பொலிஸ்ல சொல்லுவமா?”

அண்ணன் கொதித்தான்.

“லூசாடா நீ...? பொலிஸுக்குப் போனால் உள்ள நியூஸ் சைட்ல எல்லாம் இதைப் போட்டு அவன் விரும்பின போலவே எங்கள் குடும்ப மானம்தான்டா போகும்..”

அன்னை புலம்பினார்.

அந்த நிமிடம் அண்ணனின் கைபேசி ஒலிக்க எடுத்தவன் ருத்ரமூர்த்தியானான்.

“அந்தப் பரதேசி ரேப் வீடியோவை கண்ட கண்ட சைட்ல எல்லாம் போட்டு விட்டிருக்கிறான். பேஸ்புக்ல அவனவன் லிங்க் கேட்டு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலையுறாங்களாம்..”

“இவ்வளவு காலமும் வாத்தியார் குடும்பம் என்று மானம் மரியாதையோடு வாழ்ந்தது எல்லாம் இதைப் பார்க்கத்தானோ? என்ர கடவுளே இதுக்கு மேல என்னால உயிரோட இருக்க முடியாது. தம்பி.. பூச்சி மருந்தை எடுத்து வாடா.. எல்லாருமாகக் குடிச்சிட்டு செத்துப் போவம்..”

தாய் ஒரேயடியாக ஒப்பாரி வைக்க ஆரம்பித்தார்.

“என்னில ஒரு பிழையும் இல்லையம்மா. அப்பிடியிருக்க நாங்கள் ஏன் சாக வேணும்?”

இறுகிய முகத்தோடு கூறினாள் சந்தியா. அதுவரை அமைதியாக இருந்த தந்தை வாய் திறந்தார்.

“முதலில எல்லாரும் வாங்கோ.. சந்தும்மா.. நீ நடந்தை அப்பிடியே சொல்லு. நாங்கள் பொலிஸ்ல புகார் செய்வம். அவங்களே மெடிகல் செக்கப்புக்கு அனுப்புவாங்கள் என்று நினைக்கிறன்..”

“போன மானம் போதாது என்று நீங்கள் வேற ஏங்க பொலிஸ் அது இதென்று...”

“எங்கட பிள்ளைக்கு நடந்தது ஒரு குற்றம். அதைக் கேட்கத்தான்பொலிஸ், கோர்ட் இருக்கு. விளங்குதா..?”

அனைவரும் காவல் துறை சென்று உரியவாறு முறைப்பாடு செய்து விட்டு வீட்டை அடைந்தார்கள்.

சந்தியாவின் தந்தை தனது நண்பரான நிருபர் ஒருவரை அழைத்து விஷயத்தைக் கூறி அவரை வீட்டுக்கு வரவழைத்தார். தன்னை வீடியோ எடுக்குமாறு பணித்து விட்டுப் பேச ஆரம்பித்தார் அந்தப் பெற்றவர்.

“அனைவருக்கும் வணக்கம். நான் ஒரு பெண் குழந்தைக்கு தகப்பன். என்னுடைய பெண்ணை நான்கு வருடங்களாக ஒருவன் காதலிப்பதாகத் தொல்லை கொடுத்து வந்திருக்கிறான். அவளும் கூடப் படிப்பவனை பகைக்க விரும்பாது தன்மையாகவே தனது மறுப்பைச் சொல்லி வந்திருக்கிறாள்.

இந்த நான்கு வருடங்களாக கம்பஸில் அவள்தான் முதன்மை மாணவியாக விளங்குகிறாள். அவள் வாழ்க்கையின் இலட்சியம் பிஎச்டி முடித்து ஆராய்ச்சியாளராகுவது. காதல், கலியாணத்தில் அவளுக்கு விருப்பம் இல்லை. நாங்களும் அவள் விருப்பத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துத்தான் வளர்த்து வருகிறோம்.

இன்று அந்த சக மாணவன் அவளை மயக்கி ரேப் பண்ணிவிட்டு அதை வீடியோ எடுத்து சமூக வலைத் தளங்களில் பதிவிட்டு இருக்கிறான். நாங்கள் பொலிஸில் முறைப்படி புகார் கொடுத்துள்ளோம். சட்டம் தன் கடமையைச் செய்யட்டும்.

அந்த வீடியோவை பகிர்பவர்கள் செய்பவர்கள், லிங்க் கேட்பவர்கள் ஒரு நொடி உங்கள் வீட்டுப் பெண்களை பற்றியும் எண்ணிப் பார்ப்பீர்களாக இருந்தால் அந்த வீடியோவை பார்க்கும் துணிவு உங்களுக்கு வராது.

ரேப் பண்ணியதுக்கு அவன் சொன்ன காரணம், அப்போதுதான் என் மகள் வேறு யாரையும் கல்யாணம் செய்ய மாட்டாளாம். இதே பையன் என் மகளை திருமணத்திற்கு பிறகும் மேலே படிக்க அனுமதி அளித்திருந்தால் நாங்களே முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்திருப்போம்.

ஆனால், காதலெனும் பெயரில் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்தவனிடமிருந்து கடவுள்தான் எங்கள் பெண்ணை காப்பாற்றி இருக்கிறார்.

என் மகள் இப்போதும் எங்களுக்கு அதே பத்தரை மாற்றுத் தங்கமாகத்தான் இருக்கிறாள். விபத்தில் கை, கால் போவது போலதான் இந்த பலாத்காரமும் அவளுக்கு ஏற்பட்ட ஒரு விபத்து. இந்த விபத்தை மறந்து அவள்தன் கனவை நிறைவேற்ற நாங்கள் எப்போதும் துணை நிற்போம்.

காதல் என்பது தன் துணையின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பதேயன்றி, எப்பாடுபட்டாவது அடைந்து கொள்வது அல்ல.. என் மகளுக்கு நடந்த கொடுமைக்குப் பெயர் காதலா? இதற்குப் பெயர் தான் காதலா? நீங்களே சொல்லுங்கள் மக்களே?”

■

# இரவைத் தேடும் நிழல் கவிதைத் தொகுதி

இக்பால் அலி

கவிஞர் ரா. நித்தியானந்தன் விளிம்பிலுள்ள மலையக மக்களின் யதார்த்த பூர்வமான வாழ்வியல் அம்சங்களை முதல் கவிதை நூலில் ஒவியமாகத் தீட்டி இயன்றளவு பல்வேறு வடிவங்களில் வெளிக்கொணர்ந்த ஒருவர். அவர் 'இரவைத் தேடும் நிழல்' என்னும் இரண்டாவது கவிதை நூலையும் வெளிக்கொணர்ந்து கவிதைப் பரப்பில் விசாலமான அடையாளத்தைப் பதிவு செய்துள்ளார் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டுள்ளார். ரா. நித்தியானந்தனிடமுள்ள மிகப் பெரிய பலம் கொள்கைத் தளம்பலின்றி ஆரம்ப காலம் முதல் தற்போது வரை சமவுடமைப் போக்கு எழுத்தாளராக இருந்து வருவது மிக முக்கிய அம்சமாகும்.

இவரது கவிதைகளை நோக்கும் போது மலையகக் கவிதைகளில் 90க்கு முந்தியவை 90 முதல் 2020 வரை, அதற்கு இடைப்பட்ட இரு கால கட்டங்களாகப் பிரிக்கலாம். அவரது கவிதைப் போக்கில் மலையக மக்களது அவலங்களையும் சோகங்களையும் மக்கள் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற போராட்ட ரீதியிலான அவரது முன்னைய கவிதைகள் மதிப்பீடாக அமைந்துள்ளன. ஆனாலும் இப்புதிய கவிதைத் தொகுதியில் அது முற்றிலும் மாறியே வந்திருக்கிறது.

மின் விளக்கை முத்தமிட்டு
இன்பம் கழிய முன்
மரணம் தழுவிய ஈசலுக்கு
சமர்ப்பணம் என்ற தலைப்பில்

எழுதிய கவிதையின் ஆரம்ப வரிகளின் படிமம் மிக அற்புதம். மழைக் காலத்தில் புற்றீசல்கள் வெளிக்கிளம்பி வந்து மின் விளக்கைச் சுற்றியவுடன் சற்று நேரத்தில் தன் இறக்கைகளையும் கழட்டி விட்டு இறந்து போய் விடும். மலையக மக்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமை, ஆள் அடையாள அட்டை, காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வீடு, கல்வி வசதிகளைப் பெற்றுள்ளனர். இரண்டாம் மூன்றாம் நான்காம் தலைமுறையினர்கள் தம் இலக்கை அடைந்து கொள்ள முடியாமல் கல்வியைத் துறந்து வீட்டு வேலைகளுக்கும் பாடசாலையை விட்டு விலகி கூலி வேலைகளுக்குச் செல்லும் நிலைமையை தம் கவிதையில் உருவமாகப்படுத்திச் சொல்லி இருக்கும் விதம் மதிநுட்பமான காலத்திலும் மலையகத்தில் இப்படியும் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதை மனவருத்தத்துடன் சித்தரித்துள்ளார்.

அநேகமான நூல்களில் முற்பகுதியில் சமர்ப்பணமாக நூலாசிரியரின் குடும்பத்திலோ சரி அல்லது தான் நேசித்த வேறு ஒருவருவரின் பெயரிலோ பதிவு செய்வார்கள். கவிஞர் ரா. நித்தியானந்தன் மலையக மக்களின் பிரச்சினைகளை வெளியே சொல்வதற்காக பூச்சிகளையும் பறவைகளையும் குறியீடாகப் பயன்படுத்தி அதற்கும் ஓர் உயர்ந்த உயிர்வடிவம் கொடுத்துள்ளமை ஒரு வித்தியாசமான முறையினைக் கையாண்டுள்ளார் என்றே கூற முடியும்.

எனக்கு கருத்து சொல்லி வெளிச்சம் காட்ட
எவருமில்லை
அனுபவமே எனது தோழன்
வாசிப்பு தவிர எனக்கு என்ன காதல்
இருக்க முடியும்.?
நண்பனாய் தோழனாய் அதுவே நானாய்
பயணிக்கின்றது என் பயணம்- ஏதோ
ஒன்றுக்காய் எதையோ நோக்கி...

மலையகத்தில் 90 க்கும் பின்னரான கால கட்டத்திலிருந்து கவிதை இலக்கிய செல்நெறியிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. மாற்றம், கல்வி, எழுச்சி சார்ந்தததாக அமைந்தது. இக்கால கட்டம் மலையகம் மாறுதலுக்கான கால கட்டமாகக் கொள்ளப்படுகிறது. மலையக மக்களது எழுச்சிகளையும் இக்காலப் படைப்புக்கள் பிரதிபலிப்பதோடு அக்கால கட்டத்தில் வாழ்ந்த கவிஞருடைய வாசிப்பு பழக்கவழக்கம் இயல்பாவே உளப்பக்குவத்தை வளர்க்க உதவும் வகையில் அவரது கவிதைகள் அமைந்துள்ளன.

1900-2000 ஆம் ஆண்டு மலையகத்தில் இலக்கிய எழுச்சி உச்சத்தில் இருந்த கால கட்டத்தில் கவிஞர் ரா. நித்தியானந்தனும் அதிகளவு வாசிப்பில் ஈடுபாடுடையவராகக் காணப்படுகின்றார். தமிழ் இலக்கிய திறனாய்வுக் கலையில் உலகில் தலைசிறந்த திறனாய்வாளர்களின் நூல்களை சோர்வின்றி வாசித்து தொடர்ந்து முறையாக எழுதிவருவதோடு காலமாற்றத்தையும் புரிந்துகொண்டு எழுதி வருபவர்.

கவிஞனின் உருவாக்கத்திற்கு வாசிப்பு பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. கவிஞன் தன்னிடமுள்ள திறமையை வெளிக்கொணர வாசிப்பு பக்கபலமாக உள்ளது. எனினும் தற்காலத்தில் சமூக வலைத்தளத்தில் எல்லோரும் முகிழ்ந்துள்ளமையால் வாசிப்பு பழக்க வழக்கம் முற்றாக அழிந்து கொண்டிருக்கின்ற நிலைமையில் கவிஞர் ரா. நித்தியானந்தன் 'கவிதைகளின் சுவடு' என்ற தலைப்பில் கவிஞருக்குள்ளிருக்கும் வாசிப்பு அனுபவங்களை உணர்வோடு வெளிப்படுத்தியிருக்கிறார். கவிஞரின் வாசிப்பு ஆற்றல்களை அறிந்து கொள்வதற்கு இக்கவி வரிகள் போதுமானதாகும்.

அம்மா இருக்கும் போது

உன்
அர்த்தம் எனக்கு தெரிவதில்லை.

இது நெஞ்சை ஈர்க்கும் மிக அருமையான வரிகள். அம்மாவைப் பற்றி பாடாத கவிஞர்கள் இல்லை எனலாம். இதற்கு கவிஞர் ரா. நித்தியானந்தனும் விதிவிலக்கல்ல. அம்மா இருக்கும் போதுள்ள மதிப்பையும் இறந்த பின்னர் உள்ள மதிப்பையும் தம் உணர்வுக்குள் வைத்து கணிக்கிற அளவுக்கு 'அம்மா' எனும் தலைப்பின் கீழ் எழுதிய இக்கவி வரிகள் மிக ஆழ, அகலமாக கலை அழகுடனும் உயிர்த்துடிப்புடனும் கால் பதித்து நிற்பதைக் காணலாம்.

வானம் தவிர
எதுவும் சாட்சியில்லாமல்
மூழ்கி சரிகிறது
அந்த
பூச்சியின் விதி

அதிகாரம் ஆட்சி செலுத்தும் போது ஈன இரக்கம், கருணை, பிரியம் .ஆகியவை சமுதாயத்திலிருந்து அந்நியமாகும் போதெல்லாம் மிருக வேட்டை அதிகரித்து விடும்.

சமுதாயத்தில் கொடூரங்கள் மலிந்து காணப்படும் நேரங்களில் அதைக் கண்டு கொதித்தெழுந்து கண்ணீர் வடிப்பது கவிஞனிடம் காணப்படும் இயல்பான விடயம். மானிட உறவுகள் மிருகத்தமான முறையில் சாட்சியின்றி சிதைக்கப்படுவதை பூச்சியின் ஊடாக மனித சமூக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டக் கூடியதாக அவரது கவிதையின் பாடு பொருள்கள் அமைந்திருப்பதினைக் குறிப்பிடலாம். இன்றைய சமூகத்தின் உண்மை நிலவரங்களையும் மறைவிட ரகசியங்களையும் கவிஞர் வெளிக்காட்ட தயங்கவில்லை.

நிராகரிக்கப்பட்டவன் தானே
இன்று ராச்சியத்தின்
தலைவன்
நீயும் அப்படித்தான்.

ஒரு நாட்டில் தேர்தல் நடப்பது நாட்டின் சுபீட்சத்தையும் அமைதியாக வாழக் கூடிய பாதுகாப்பையும் அந்நாட்டு மக்களின் வாழ்வியல் தரத்தையும் உயர்த்திக்கொள்ளும் நோக்கங்களுக்காகவே அரசாட்சியாளர்களை மக்கள் தெரிவு செய்கின்றனர். ஆனால், இன்று தேர்தலின் போது தெரிவு செய்யப்படுபவர்கள் அரசியலுக்குத் தகுதியற்றவர்களும் சிக்கலான அம்மணமான பார்வையைக் கொண்டவர்கள்தான் அரசியல் தலைமைத்துவத்திற்குச் சாத்தியமானர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். இதனைக் கண்டு கவிஞர் ஜீரணித்துக் கொள்ளவில்லை.

'அம்மணமான கோமாளி' என்ற தலைப்பில் கோமாளித்தனமான ஒரு அரசியல் சூழலை கவிதைகளில் சித்தரித்துள்ளார். அரசியல் கள நிலவரத்திற்குள் ஊடுருவி நோக்கும் ஆழ்ந்த புலமையுடைவர். ஒரு காலம் பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக அரசியல் விஞ்ஞானத்துறையில் கற்பித்தவர் என்ற காரணமாக இருக்கலாம் என தோன்றுகிறது.

மலையகம் மாறுதலைப் பெற்ற கால கட்டத்தில் தமது அன்றாட வாழ்க்கையில் மலையகச் சமூகம் அனுபவிக்கும் துயரங்களையும் வெற்றிகளையும், சவால்களையும் அப்பாவித்தனங்களையும் ஒரு தத்துவார்த்தமான சமூக சீர்திருத்தக் கொள்கையிலான ஒரு உறுதிப்பாட்டோடு தம் கவிதை நூலை வாசகர்களுக்காக கவிஞர் வெளிக்கொணர்ந்துள்ளார். இது படித்துப் பயன்பெற வேண்டிய கவிதை நூலாகும். இதன் நூலுக்கான வெளியிட்டு விழா ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் கொரோனாத் தொற்றுக் காலம் இன்னும் இடம்கொடுக்கவில்லை. எனினும் இந்தப் புதிய நூலின் வெளியிட்டு விழாவை விரைவில் நடத்தவுள்ளதாகவும் அறிகின்றோம்.

இந்நூலில் 29 நவீன கவிதைகள் உள்ளன. 104 பக்கங்களைக் கொண்டன.

பின் அட்டையின் பக்கத்தில் இது இராண்டாவது கவிதை நூலாகும். ரா. நித்தியானந்தன் இலங்கையில் குறிப்பிட்டுப் பேசக் கூடிய எழுத்தாளர்களுள் ஒருவர். முகவரியைத் தொலைத்தவர் என்ற கவிதைத் தொகுதி மூன்றாம் பரிணாமம் என்ற சிறுகதைத் தொகுதி இந்திய தமிழர் ஒரு சமூகவியல் ஆய்வு நோக்கு என்ற ஆய்வுக் கட்டுரைகள் போன்ற பல நூல்களின் ஆசிரியர். பேராதனை பல்கலைக்கழகத்தில் முதுகலை மெய்மானிப் பட்டம் பெற்றவர். இவரது எழுத்துப் பணி மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்.

■



# இந்தியாவின்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

2020 நவம்பரில் ஆரம்பித்துள்ள சீனாவின் நகர்வுக்குள் ஜப்பான் பங்குபெறும்போதும் இந்தியா அதில் பங் கேற்காது விலகி இருந்து கொண்ட சூழலில், அடுத்த நகர்வாக தென்னாசியாவை சீனாவின் பொருளாதார வியூகம் அணுக ஆரம்பித்திருக்கிறது.

ஆசிய நாடுகளுக்கான வறுமை நிவாரணம் உள்ளிட்ட நிதியுதவிகளை இந்தியா மூலமா கச் செய்வதற்குக் கடந்த மாதம் பிரித்தானியா வில் இடம்பெற்ற ஜி 7 மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தவொரு நிலையில், சீனா இந்தப் புதிய China-South Asian Countries எனும் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவின் குவாட் வியூகம் கடலைக் கருவாய்க் கொண்டிருக்க, சீனாவின் பதில் வியூகம் இந்தியாவின் வட எல்லையின் தரையில் மிகவும் பலமானதாக மாறிவிட்டது.

பூட்டான் என்ற ஒரு சிறிய நாட்டை விட வட புலத்து நில எல்லையில் தனது வியூகத்துக்குள் வேறு நாடுகளைக் கொண்டுவர இயலாது திணறும் நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலேயே சார்க் அமைப்பின் செயற்பாடு குறித்து இந்தியா ஆலோசிக்கின்றது. பாகிஸ்தான் சார்க் அமைப்பில் அங்கம் வகிப்பதாலேயே தற்காலிகமாக இந்தியா அதனைக் கைவிட்டிருந்தது.

தெற்கில், இந்து சமுத்திரத்தில் கடல் வியூகத்தைப் பொறுத்தவரை அமெரிக்க-இந்திய மற்றும் குவாட்டின் கையே தற்போதைக்கு ஓங்கியிருக்கிறது.

ஆனால், குறிப்பாக தென்னிந்தியக் கடல் எல்லையில் இலங்கைத் தீவின் ஒற்றையாட்சி அரசும் அதன் தற்போதைய ஆட்சியாளர்களுமே சீனாவுக்கு இருக்கும் ஒரே ஒரு பலமான பிடி.

ஒரு தீவாக இந்தியாவின் தென்கோடிப் புறத்தில் அமைந்திருக்கும் இலங்கைத் தீவின் ஒற்றையாட்சி அரசு மட்டுமே சீனாவுக்கு இருக்கக் கூடிய நட்பு நாடாக இருப்பதான ஒரு தோற்றப்பாடு நிலவுகிறது.

ஆயினும், தற்போதைக்கு அது பொருளாதார ரீதியிலானது மட்டுமே.

அதேவேளை, இராணுவ ரீதியிலான ஓர் வியூகத்துக்குள்ளும் இலங்கைத் தீவைக் கொண்டுவரும் நோக்கம் சீனாவுக்கு நிச்சயமாக இருக்கும். ஆனால், அது இன்னும் நடந்தேறவில்லை என்பதைக் குறிப்பாக இங்கு நாம் அவதானிக்க வேண்டும்.

அப்படியிருந்தபோதும் சீனாவின் நகர்வுகளில் இலங்கை ஒற்றையாட்சி அரசு இந்தியாவைச் சீண்டும் வகையில் நேரடியாகப் பங்கெடுக்கிறது. இதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

ஆனால், பெருத்த சவால்களை எதிர்கொண்டு இலங்கை ஒற்றையாட்சி அரசு மேற்கொள்ளும் இந்தத் தெரிவுகள் குறித்து தமிழர் தரப்பில் பலர் மீண்டும் மீண்டும் மேலெழுந்தவாரியாகத் தப்புக் கணக்குப் போடுகிறார்கள்.

இந்தியா ஈழத்தமிழர்களை நட்புச் சக்தியாக அங்கீகரித்து, தனது அணுகுமுறையை மாற்றியமைத்து, இலங்கை அரசைக் கட்டுக்குள் கொண்டு வந்து, ஈழத் தமிழர்களுக்குச் சார்பான ஒரு மெய்நடப்பு நிலையை மீண்டும் தோற்றுவிக்கும் என்றும் அதுவே இந்தியாவுக்கு இருக்கும் ஒரே ஒரு தெரிவு என்பதுமே அந்தத் தப்பான கணக்கு.

ஆனால், இலங்கை ஒற்றையாட்சி அரசு வைத்திருப்பது தமிழ்த் தரப்புகளிடம் காணப்படுவது போன்ற மேலெழுந்தவாரியான சாதாரண ஒரு கணக்கில் கணிப்பும் அல்ல.

அது ஒரு சமன்பாடு!

மாலைதீவு சீன சார்பு நிலையைக் கைக்கொண்டு எந்தவகையான சிக்கல்களை எதிர் நோக்கியது என்பதையும் சிங்கள ஆட்சியாளர்கள் நன்கு அறிவர்.

இலங்கைத் தீவு விவகாரத்தில், இந்தியாவை ஈழத் தமிழர்கள் அல்ல, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகு மாத்திரமே காப்பாற்ற முடியும் என்பதை இந்தியாவுக்கே உணர்த்துவதாக உருவாக்கப் பட்டிருக்கிறது இலங்கைத் தரப்பின் அந்தச் சமன்பாடு.

இதனால், அமெரிக்கா தன்னுடன் பேரம் பேசி, அமெரிக்காவினூடான இராணுவ வியூகத்துக்கு உட்பட்டதாக இலங்கை தொடர்பான இந்தியத் தெரிவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை அமெரிக்காவிடமே தற்போதைய இலங்கை அரசாங்கம் கையளிக்க விரும்புகிறது. இதுவே இலங்கை வகுத்திருக்கும் சமன்பாட்டின் சூத்திரம்.



தன்னோடு இந்தியா ஊடாக அன்றி அமெரிக்கா நேரடியாக இணக்கத்துக்கு வரவேண்டும் என்பதே அந்தச் சமன்பாடு.

இந்தியா குறித்த அணுகுமுறை பற்றிய தெளிவு இலங்கை அரச தரப்பிடம் ஈழத்தமிழர் தரப்பை விடவும் கூடுதலாக இருப்பதாகவே தெரிகிறது.

தென்வியூகத்தில் தனது கோடிக்குள் மீண்டும் இந்தியா தோல்வியடைந்துவிடும் என்ற அவசர எடுகோள்களை ஈழத் தமிழர்கள் மேற்கொள்வது நல்லதல்ல. இம்முறை இந்தியாவை அமெரிக்காவே காப்பற்றப்போகிறது.

அமெரிக்காவும் இந்தியாவும் அமெரிக்க ஜனாதிபதி பைடனின் நிர்வாகத்தில் எவ்வாறான வியூகங்களைச் சீனா குறித்து அமெரிக்கத் தலைமையின் கீழ் இணைந்து வகுக்க உள்ளன என்பது பற்றிய அவதானிப்பில் தமிழர்கள் கூர்மையாக இருக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள ஈழத்தமிழர்களுக்குச் சொந்தமான கடற் பிரதேசங்கள், வளங்கள் போன்றவற்றை அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுக்குக் குத்தகைக்குக் கையளிக்கச் சிங்கள ஆட்சியாளர்கள் முற்படுவதைத் தென்னிலங்கையில் சிங்களக் கடும்போக்குத் ‘தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்’ கண்டிக்க முற்படுகின்றமை சிங்கள பௌத்த தேசிய நலன் சார்ந்தது.

வடமாகாணக் கடற் பிரதேசங்களையும் திருகோணமலைத் துறைமுகத்தையும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிடம் கையளித்து, வேண்டுமானால் சீனாவுக்கும் அங்கு சலுகைகளை வழங்குவதன் மூலம், ஈழத்தமிழர்களின் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை உடைப்பதே கோட்டாபய, ரணில் விக்கிரமசிங்க போன்ற சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கம்.

ஆகவே சிங்கள ஆட்சியாளர்களின் இந்த நோக்கமும் ‘தேசப்பற்றுள்ள’ தேசிய இயக்கம் போன்ற சிங்கள அமைப்புகளின் எதிர்ப்பும் வெவ்வேறு கோணத்தில் இருந்தாலும், ஈழத்தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை சிதைப்பது என்ற அடிப்படைச் சிந்தனை ஒன்றுதான்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை போன்ற சிங்களப் பிரதேசங்களில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளுக்குக் குத்தகைக்கு வழங்குவதும். இலங்கைத் தீவின் முதலீட்டுக்கு இந்தியா போன்ற நாடுகளுக்கு இடமளிப்பதும் இலங்கைத் தீவின் இறைமைக்கு உட்பட்டது என்பது இலங்கை ஒற்றையாட்சி அரசின் வாதம். சிங்களவர்களின் பொருளாதார நலன்களுக்கும் வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற முறையிலும் அது அமைந்திருக்கும்.

ஆனால் தமிழர் பிரதேசங்களை இவ்வாறான நோக்கில் சிங்கள ஆட்சியாளர்கள் அணுகவில்லை. நிலத் தொடர்பைப் பிரித்துத் தாயகக் கோட்பாட்டை உடைத்தல் என்ற இலங்கை ஒற்றையாட்சியின் சிந்தனைகளை உள்வாங்கியே அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளும் வடக்குக் கிழக்கில் தங்கள் புவிசார் நலன்களை நிறைவேற்றுகின்றன. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

அமெரிக்க நட்பு நாடுகளையும் இணைத்துக் கொண்டு ஆசியான் நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தம் மூலம் கொழும்பு போட் சிற்றியில் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முதலீட்டாளர்களையும் இலங்கை வரவழைக்கக் கூடிய சூழல் நிறையவே இருக்கிறது.

ஆகவே, புவிசார் மற்றும் பூகோள அரசியல் நிலைமைகள் தற்போதும் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களைச் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாகவே நீக்கம் செய்யும் வகையில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வசதியாக அமைந்துள்ளன.

இதை எதிர்கொள்வதற்கான மாற்றுத் திட்டமிடலே ஈழத்தமிழர்களுக்கான இன்றைய தேவை. அதற்காக 13 ஐ நடைமுறைப்படுத்துங்கள் அல்லது இந்தியாவைத் தலையிடுமாறு கோருவதற்கு 13 வசதியாக இருக்கும் என்ற கோணத்தில் செயற்படுகின்றமை என்பது புவிசார் அரசியல் விளக்கமற்ற தன்மை என்றே கூறலாம்.

■






முருகாமலை ஸ்ரீ முருகாமலை ஸ்ரீமுருகன் தேவஸ்தானத்தில் தைப்பூசத் திருவிழா ஆலயப் பரிபாலன சபையின் தலைவர் எஸ். முத்தையா தலைமையில் இடம்பெற்றது. காயத்திரி பூஜை, அபிஷேக அலங்கார பூஜை, திருவிளக்கு பூஜை, அலங்கார பூஜை, வசந்த மண்டப பூஜை, தீபாராதனை, சுவாமி உள்வீதி வலம் வருதல், மகேஸ்வர பூஜை ஆகியன ஆலய பிரதம குரு சண்முகசுந்தர குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. முன்னாள் மத்திய மாகாண சபை முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக, உல சைவ ஒன்றியத்தின் தலைவர் இளங்கோ, ஆலயத்தின் செயலாளர் பெ. பழனியப்பன், பொருளாளர் பெரியையா செல்லையா கண்டி தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் அன்பழகன், தமிழ் வர்த்தக சங்கப் பிரமுகர்கள், கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சிவபாலன் உள்ளிட்ட கண்டி தமிழ் வர்த்தக சங்கப் பிரமுகர்கள், கண்டி முத்தமிழ் சங்கப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சிவன் கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

# தமிழ் சினிமாவும்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- தங்கர்பச்சான் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

ஜெயகாந்தனின் தொடர்கதைகளான உன்னைப் போல் ஒருவன் - யாருக்காக அழுதான் - காவல் தெய்வம் - சில நேரங்களில் சில மனிதர்கள் - ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் - ஊருக்கு நூறுபேர் - புதுச்செருப்பு கடிக்கும் என்பன திரைப்படங்களாகின. (முக்கிய குறிப்பு: புதுச்செருப்பு கடிக்கும் திரைக்கு வரவேயில்லை)

எஸ்.வி.சுப்பையா ஜெயகாந்தனின் பிரம்மோபதேசம் கதையை வாங்கி படமாக்க முயன்று அந்த முயற்சியைக் கைவிட்டார்.


ஒரு இலக்கியப்படைப்பினை படமாக்கும் பொழுதுள அதன் மூலக்கதையை எழுதியவருக்கும் - திரைப்படமாக்க முனையும் இயக்குநருக்கும் இடையில் ரசனையில் சமச்சீர் இருந்தால்தான் இலக்கியப்படைப்பை உயிர்சிதையாமல் படத்தில் காண்பிக்க முடியும்.

தில்லானா மோகனாம்பாள் எழுதியவர் கொத்தமங்கலம் சுப்பு. அவர் பாலமன்னிப்பு உட்பட சில பழைய படங்களில் நடித்திருக்கும் ஒரு பாடலாசிரியர், கலைஞர். தில்லானா மோகனாம்பாள் கதை படமாக்கப்பட்டாலும், அதனைத் தனது வாழ்நாளில் பார்க்காமலேயே மனக்கசப்புடன் மறைந்தார் கொத்தமங்கலம் சுப்பு என்ற தகவலையும் படித்திருக்கின்றேன். அவரது ராவ்பகதூர் சிங்காரம் என்ற கதைதான் சிவாஜி பத்மினி நடித்த தீராதவிளையாட்டுப் பிள்ளையாகியது. அகிலனின் வாழ்வு எங்கே நாவல் சிவாஜி - சரோஜாதேவி நடித்த குலமகள் ராதையாகியது.

கமல்ஹாசன் தனது கல்லுக்குள் ஈரம் நாவலைத்தான் தழுவி ஹேராம் எடுத்தார் என்ற புகாரைச் சொன்னார் அதனை எழுதிய ரா.சு. நல்லபெருமாள்.

தனது குருதிப்புனல் நாவலை, இயக்குநர் ஸ்ரீதர் ராஜன் கண்சிவந்தால் மண் சிவக்கும் என்ற பெயரில் திரைப்படமாக்கி, தனது கதையின் போக்கையே மாற்றிவிட்டார் என்று மனக்குறைப்பட்டார் இந்திரா பார்த்தசாரதி.

குருதிப்புனல் தஞ்சை கீழ்வெண்மணியில் நடந்த விவசாயிகள் படுகொலையை சித்திரித்த கதை.



மணிச்சித்திரத்தாழ் என்று ஒரு படம் மலையாளத்தில் வெளியானது. அதனைத்தான் தமிழில் சந்திரமுகி என்ற பெயரில் எடுத்தார்கள். தமிழ்ப்படம் வெற்றிகரமாக ஓடி வசூல் தந்தது. ஆனால், மூலக்கதை எழுதிய அந்த கேரளப் படைப்பாளிக்குக் கிடைத்த சன்மானம் சொற்பமானது.

தங்கர்பச்சான் சிறுகதை எழுத்தாளர். அத்துடன் சிறந்த ஒளிப்பதிவாளர் -இயக்குநர். தி.ஜானகிராமனின் மோகமுள் படத்தை ஞானராஜசேகரன் எடுத்தபொழுது, அதற்கும் அதே ராஜ ஞானசேகரன் எடுத்த பாரதி -பெரியார் படங்களுக்கும் ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சான்.

தனது கதைகளான சொல்ல மறந்த கதை - ஒன்பது ரூபா நோட்டு - பள்ளிக்கூடம் ஆகியனவற்றை படமாக்கினார். அதனால் அவருக்கு சமரசங்கள் - சங்கடங்கள் இருக்கவில்லை எனக்கருதலாம்.

இலங்கையை எடுத்துக்கொண்டால் எழுத்தாளர் செங்கை ஆழியானின் வாடைக்காற்று காவலூர் ராஜதுரையின் பொன்மணி ஆகியன திரைப் படங்களாகின. இரண்டு கதைகளும் இலங்கையின் வடபகுதியை களமாகக் கொண்டவை. செங்கை ஆழியான் ஒரு உதவி அரசாங்க அதிபராக சிறிது காலம் நெடுந்தீவில் பணியாற்றியவர்.

அந்தத்தீவுக்கு ஒரு பருவகாலத்தில் பறந்து வரும் கூழைக்கடா பறவை இனம்போன்று அந்தப் பிரதேசத்திற்கு கடல் தொழில் நிமித்தம் வேறு பிரதேசத்திலிருந்து வருபவர்களுக்கும் இடையில் தொழில்போட்டியுடன் காதலும் வளர்ந்தது எனச்சித்திரித்த கதை. ஆனால், வாடைக்காற்று திரைப்படமாக்கப்பட்ட களம் மன்னார் பேசாலை.

காவலூர் ராஜதுரை தமது பொன்மணி கதைக்கு அவரே திரைவடிவம் கொடுத்தார். இக்கதையும் யாழ்ப்பாணத்தின் சமூக அமைப்பை சித்திரித்த படம்தான்.

இலக்கியத்தில் படைப்புமொழி - சினிமாவில் திரைமொழி இருக்கிறது. இரண்டும் இணைவதில்தான் கதையொன்று படமாவதில் வெற்றி தங்கியிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில், இலங்கையில் பிரபல்யமான சிங்கள நாவல்கள் கம்பெரலிய, மடோல் தூவ, யுகாந்தய (மார்ட்டின் விக்கிரமசிங்க), அக்கர பஹா (மடவள எஸ் ரத்நாயக்க), கொளு ஹதவத்த (கருணா சேன ஜயலத்) முதலானவற்றின் மூலம் சிதையாமலேயே அவற்றை அதே பெயரில் திரைப்படமாக இயக்கி வெற்றியும் கண்டு தேசிய - சர்வதேச விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர் (அமரர்) லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்.

■

| School: KN/KILINOCHCHI MADYA MAHA VIDYALAYA, | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt | | | | | | | | | | | | | | | | | |
| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) | |
| 12 | Saivanery | 94 | 94 | 29 | 30.9% | 14 | 14.9% | 24 | 25.5% | 18 | 19.1% | 9 | 9.6% | 0 | 85 | 90% | |
| 14 | Catholiciam | 15 | 15 | 7 | 46.7% | 5 | 33.3% | 3 | 20.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 15 | 100% | |
| 15 | Chritianity | 20 | 20 | 1 | 5.0% | 3 | 15.0% | 4 | 20.0% | 9 | 45.0% | 3 | 15.0% | 0 | 17 | 85% | |
| 22 | Tamil Language & Lit | 129 | 129 | 17 | 13.2% | 35 | 27.1% | 34 | 26.4% | 33 | 25.6% | 10 | 7.8% | 0 | 119 | 92% | |
| 31 | English | 129 | 129 | 7 | 5.4% | 7 | 5.4% | 24 | 18.6% | 28 | 21.7% | 63 | 48.8% | 0 | 66 | 51% | |
| 32 | Mathematics | 129 | 129 | 28 | 21.7% | 12 | 9.3% | 38 | 29.5% | 17 | 13.2% | 34 | 26.4% | 0 | 95 | 74% | |
| 33 | History | 129 | 129 | 21 | 16.3% | 14 | 10.9% | 28 | 21.7% | 40 | 31.0% | 26 | 20.2% | 0 | 103 | 80% | |
| 34 | Science | 129 | 129 | 8 | 6.2% | 14 | 10.9% | 19 | 14.7% | 32 | 24.8% | 56 | 43.4% | 0 | 73 | 57% | |
| 60 | Business & Acc | 36 | 36 | 5 | 13.9% | 3 | 8.3% | 11 | 30.6% | 12 | 33.3% | 5 | 13.9% | 0 | 31 | 86% | |
| 61 | Geography | 32 | 32 | 5 | 15.6% | 9 | 28.1% | 9 | 28.1% | 7 | 21.9% | 2 | 6.3% | 0 | 30 | 94% | |
| 62 | Citizenship Education & Governance | 19 | 19 | 1 | 5.3% | 4 | 21.1% | 4 | 21.1% | 4 | 21.1% | 6 | 31.6% | 0 | 13 | 68% | |
| 63 | Entrepreneurship Studies | 42 | 42 | 7 | 16.7% | 12 | 28.6% | 12 | 28.6% | 9 | 21.4% | 2 | 4.8% | 0 | 40 | 95% | |
| 42 | Music (Carnatic) | 57 | 57 | 18 | 31.6% | 10 | 17.5% | 18 | 31.6% | 8 | 14.0% | 3 | 5.3% | 0 | 54 | 95% | |
| 43 | Art | 32 | 32 | 3 | 9.4% | 1 | 3.1% | 12 | 37.5% | 13 | 40.6% | 3 | 9.4% | 0 | 29 | 91% | |
| 45 | Dancing (Bharatha) | 7 | 7 | 0 | 0.0% | 2 | 28.6% | 1 | 14.3% | 3 | 42.9% | 1 | 14.3% | 0 | 6 | 86% | |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 20 | 20 | 7 | 35.0% | 4 | 20.0% | 3 | 15.0% | 4 | 20.0% | 2 | 10.0% | 0 | 18 | 90% | |
| 51 | Drama & Theater (Tamil) | 13 | 13 | 0 | 0.0% | 7 | 53.8% | 3 | 23.1% | 2 | 15.4% | 1 | 7.7% | 0 | 12 | 92% | |
| 80 | Information & Communication Tecnology | 21 | 21 | 4 | 19.0% | 1 | 4.8% | 10 | 47.6% | 5 | 23.8% | 1 | 4.8% | 0 | 20 | 95% | |
| 81 | Agriculture & Food Technology | 47 | 47 | 4 | 8.5% | 8 | 17.0% | 13 | 27.7% | 8 | 17.0% | 14 | 29.8% | 0 | 33 | 70% | |
| 85 | Home Economics | 10 | 10 | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 3 | 30.0% | 7 | 70.0% | 0 | 3 | 30% | |
| 86 | Health & Physical Education | 47 | 47 | 21 | 44.7% | 6 | 12.8% | 15 | 31.9% | 3 | 6.4% | 2 | 4.3% | 0 | 45 | 96% | |
| 88 | | 4 | 4 | 0 | 0.0% | 0 | 0.0% | 1 | 25.0% | 2 | 50.0% | 1 | 25.0% | 0 | 3 | 75% | |

# சரிந்துகொண்டிருக்கும்...

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வடுக்களை கருவிகளாக்கி, சமூகப் பொருளாதாரக் காரணிகளால் திட்டமிட்ட வகையில் அதிகரித்துள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட சமூக ஆர்வலர்களின் ஆராட்சிக்கு விட்டு விடுகிறேன்.

பொதுவாக அனைத்து பாடசாலைகளிலும் தாய்மொழியான தமிழ், சமயம் சார்ந்த அடைவு மட்டங்கள் சற்று பின்தங்கி வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் என்பது நம் தாய்மொழி என்பதையும் தாண்டி மற்ற பாடங்களை கற்பதற்கான ஒரு கருவியும் கூட. ஆக தமிழ் மொழியின் சரிவு காலப்போக்கில் மற்ற பாடங்களின் சரிவுகளுக்கும் காரணமாவதோடு, சமூகத்தின் மொழிப்புலமையின் சரிவுக்கும் இட்டுச்செல்லக் கூடும்.

ஆக இணைப்பிலுள்ள அட்டவணைகள், மேற்குறித்த முடிவுகள் என்பவற்றிலிருந்து, சமூகப் பொருளாதாரக் காரணிகள் தாண்டி, பாடசாலைகளின் தனிப்பட்ட கல்வித்துறை தாக்கம் செலுத்த முடியும் என்பதை வாசகர்கள் உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன். மேற்குறித்த சில பாடசாலைகளை உதாரணங்களுக்காக மட்டுமே தெரிவு செய்தேன். ஆனால், இவ்வாறான கணிப்பீடுகள் ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெற வேண்டும்.

எதிர்காலத்தில் பாடசாலைகள் சார்ந்த இந்த வகை குறைபாடுகளைத் தவிர்த்து மாணவர்களின் மேம்பட்ட பெறுபேறுகளை எதிர்பார்க்க 3 முன்மொழிவுகளை முன் வைக்கிறேன்.

1) Top results எனப்படும் அதி உச்ச அடைவு மட்டங்கள் ஆராயப்பட்டு எத்தனை 9A, 8A என்பதோடு நின்றுவிடாது, ஒவ்வொரு பாடசாலையின், Bottom lines எனப்படும் பாடரீதியான தேர்ச்சி விகிதங்கள் வருடா வருடம் ஆராயப்பட்டு சமூக வெளியில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அது கல்லூரியின் கல்விச் சமூகத்திற்கு ஒரு சமூக அழுத்தம் வழங்க உதவி சம்பந்தப்பட்டவர்கள் கவனத்துடன் உழைத்து நல்ல பெறுபேறுகளை உறுதி செய்ய உதவும்

2)பாடசாலை ரீதியில் அதிபர், 3-4 பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்கள், சில முன்னணி மாணவர்களை உள்ளடக்கிய கல்வி மேம்பாட்டு கண்காணிப்பு குழு ஒன்று உருவாக்கப்பட்டு ஆண்டு 9 முதல் ஒவ்வொரு தவணைப் பரீட்சை முடிவிலும் முடிவுகள் அலசப்பட்டு சம்பந்தப்பட்ட குறைபாடுகள் (உள்ளக/ சமூகப் பொருளாதாரக் காரணிகள்) இனங்காணப்பட்டு முடிந்த அளவு அவை சீர்ப்படுத்தப்பட்டு வந்தால் ஆண்டு 11 இல் 9 தவணைகள் கடந்து பரீட்சை எழுதும் போது தீர்க்கமான, சிறப்பான முடிவுகளை எதிர்பார்க்க முடியும். இந்த கலாசாரத்தின் மூலம் மாணவர்களுக்கு இடையேயான சேர்ந்து கற்றல் முறைமையையும் மெருகூட்டலாம்.

3)அதி உச்ச பெறுபேறுகளைப் பெற்றுத்தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் மாணவர்களில் காட்டப்படும் அக்கறையை விட ஒரு படி மேலான அக்கறை அனைத்து மாணவர்களும் குறைந்த பட்ச சித்தியை பெறச் செய்து உயர்தரத்துக்கு பெரும்பாலானவர்கள் அனுப்பப்படுவதை உறுதி செய்யும் வகையில் அதிகரிக்க வேண்டும்.

முதலிடத்தில் உள்ள மாகாணங்களை விட எங்கள் மாகாணங்களின் அடைவு மட்டங்கள் கிட்டத்தட்ட 15% பின் தங்கி நிற்பதால் ஒவ்வொரு வருடமும் வடக்கு - கிழக்கின் 7000 மாணவர்கள் உயர்தர வாய்ப்பை இழக்கின்றனர். புள்ளி விபரங்களை ஆராய்ந்து பாருங்கள். இது மிகப் பெரிய இழப்பு தான்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தின் ஒவ்வொரு பாடசாலையும் தனித்தனியே வேலைத்திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். வெறுமனே சமூகப் பொருளாதாரக் காரணிகளை மட்டும் சுட்டிக்காட்டிக் கொண்டிராமல் கல்வித்துறை சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்கின்றனரா? என உங்கள் மனசாட்சிகளைக் கேட்டுக் கொள்ளுங்கள். நான் மேலே ஒப்பிட்ட பாடசாலை மாணவர்கள் பலர் அந்த அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த ஒரே கல்வி நிலையங்களுக்கு செல்பவர்கள்தான். ஆனால், முடிவுகள் மாறுபட்டுள்ளதே. அதற்கு முக்கிய காரணம் பாடசாலையும் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளும்தான்.

சில ஆசிரியர்கள் அறிவில் மேம்பட்டிருப்பர், ஆனால் கற்பித்தல் முறைமையில், மாணவர்களுக்குக் கல்வியை ஊடுகடுத்துவதில் பின்தங்கி இருப்பர். உங்கள் குறைபாடுகள் பொதுவானவைதான். அதை தவறாக எடுக்காது, கற்றுக்கொள்ளுங்கள், உங்களை தினம் தினம் மேம்பட்டவர்களாகத் தயார்படுத்துங்கள், பிள்ளைகளின் கற்றல் குறைபாடுகளை இனம் கண்டு அவரவருக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளை மாற்றி அமையுங்கள். மற்ற ஆசிரியர்களின் உதவிகளை வெட்கப்படாது நாடுங்கள். வெளியில் இருந்து வந்து உங்கள் பாடசாலை மாணவர்களுக்குக் கற்பிக்க யாரும் தயாராக இருந்தால் இருகரம் கூப்பி வரவேற்று வாய்ப்பு கொடுங்கள். நீங்கள் சில மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதாக நினைக்காதீர்கள். ஒரு கல்விச்சமூகத்தைக் கட்டி எழுப்பும் உயரிய பணியைச் செய்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள். உங்களில் பலர் உன்னதமானவர்

| School: KN/KILINOCHCHI HINDU COLLEGE | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt | | | | | | | | | | | | | | | | |
| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
| 12 | Saivanery | 103 | 97 | 13 | 13.4% | 13 | 13.4% | 27 | 27.8% | 22 | 22.7% | 22 | 22.7% | 6 | 75 | 77% |
| 14 | Catholiciam | 15 | 15 | 5 | 33.3% | 0 | 0.0% | 4 | 26.7% | 6 | 40.0% | 0 | 0.0% | 0 | 15 | 100% |
| 15 | Chritianity | 2 | 1 | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 1 | 100.0% | 0 | 0.0% | 1 | 1 | 100% |
| 22 | Tamil Language & Lit | 120 | 113 | 9 | 8.0% | 10 | 8.8% | 38 | 33.6% | 39 | 34.5% | 17 | 15.0% | 7 | 96 | 85% |
| 31 | English | 120 | 113 | 6 | 5.3% | 1 | 0.9% | 12 | 10.6% | 23 | 20.4% | 71 | 62.8% | 7 | 42 | 37% |
| 32 | Mathematics | 120 | 113 | 13 | 11.5% | 7 | 6.2% | 12 | 10.6% | 28 | 24.8% | 53 | 46.9% | 7 | 60 | 53% |
| 33 | History | 120 | 113 | 12 | 10.6% | 5 | 4.4% | 28 | 24.8% | 37 | 32.7% | 31 | 27.4% | 7 | 82 | 73% |
| 34 | Science | 120 | 113 | 4 | 3.5% | 3 | 2.7% | 10 | 8.8% | 24 | 21.2% | 72 | 63.7% | 7 | 41 | 36% |
| 60 | Business & Acc | 19 | 18 | 3 | 16.7% | 2 | 11.1% | 5 | 27.8% | 6 | 33.3% | 2 | 11.1% | 1 | 16 | 89% |
| 61 | Geography | 41 | 41 | 7 | 17.1% | 5 | 12.2% | 13 | 31.7% | 8 | 19.5% | 8 | 19.5% | 0 | 33 | 80% |
| 62 | Citizenship Education & Governance | 50 | 44 | 10 | 22.7% | 2 | 4.5% | 8 | 18.2% | 12 | 27.3% | 12 | 27.3% | 6 | 32 | 73% |
| 63 | Entrepreneurship Studies | 19 | 19 | 6 | 31.6% | 4 | 21.1% | 8 | 42.1% | 1 | 5.3% | 0 | 0.0% | 0 | 19 | 100% |
| 42 | Music (Carnatic) | 15 | 14 | 0 | 0.0% | 0 | 0.0% | 5 | 35.7% | 7 | 50.0% | 2 | 14.3% | 1 | 12 | 86% |
| 43 | Art | 16 | 15 | 0 | 0.0% | 2 | 13.3% | 5 | 33.3% | 6 | 40.0% | 2 | 13.3% | 1 | 13 | 87% |
| 45 | Dancing (Bharatha) | 13 | 13 | 0 | 0.0% | 2 | 15.4% | 5 | 38.5% | 5 | 38.5% | 1 | 7.7% | | 12 | 92% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 29 | 27 | 10 | 37.0% | 4 | 14.8% | 8 | 29.6% | 3 | 11.1% | 2 | 7.4% | 2 | 25 | 93% |
| 51 | Drama & Theater (Tamil) | 47 | 43 | 0 | 0.0% | 5 | 11.6% | 23 | 53.5% | 13 | 30.2% | 2 | 4.7% | 4 | 41 | 95% |
| 80 | Information & Communication Tecnology | 30 | 30 | 11 | 36.7% | 3 | 10.0% | 6 | 20.0% | 4 | 13.3% | 6 | 20.0% | 0 | 24 | 80% |
| 81 | Agriculture & Food Technology | 32 | 28 | 1 | 3.6% | 0 | 0.0% | 1 | 3.6% | 11 | 39.3% | 15 | 53.6% | 4 | 13 | 46% |
| 85 | Home Economics | 6 | 6 | 0 | 0.0% | 0 | 0.0% | 2 | 33.3% | 3 | 50.0% | 1 | 16.7% | 0 | 5 | 83% |
| 86 | Health & Physical Education | 48 | 45 | 5 | 11.1% | 3 | 6.7% | 15 | 33.3% | 12 | 26.7% | 10 | 22.2% | 3 | 35 | 78% |
| 87 | | 4 | 4 | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 1 | 25.0% | 3 | 75.0% | 0 | 1 | 25% |

கள்தான். ஆனால், இன்றைய சமூகச் சிக்கல்கள், அரசியல் குளறுபடிகள், நீண்ட தூரப் பயண அலைச்சல்கள் உங்களை சோர்வடைய செய்திருக்கலாம். ஆனால் அதற்காக வடுக்களைச் சுமந்த எங்கள் சமூகம் வீழ்ந்து விடக்கூடாது.

சரிந்து கொண்டிருக்கும் எங்கள் கல்விச் சரித்திரத்தை உங்கள் நெஞ்சில் சாய்த்து நிமிர்த்த ஒரு சமூகமாக வீறுகொண்டு எழுவோம்.

■




# முல்லைத்தீவின் தங்க மங்கை


பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் தங்கம் வென்று முல்லைத்தீவைப் பெருமைப்படுத்தியுள்ளார் கணேஸ் இந்துகாதேவி பாகிஸ்தானின் லாகூரில் நடைபெற்ற குத்துச்சண்டையில் 25 வயதுக்குட்பட்ட 50-55 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

குத்துச்சண்டையில் ஆர்வம் உள்ள இந்துகாதேவி உள்ளூர் போட்டிகளிலும், தேசியப் போட்டிகளிலும் பங்கு பற்றி பல பதக்கங்களைப் பெற்றுள்ளார். பீ.ஏ.எஸ்.எல் நடத்திய போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றார். 2019 ஆம் ஆண்டு நடந்த ஜூனியர் நசனல் சம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்றார். 2019 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இந்துகாதேவி பாகிஸ்தானுக்குச் செல்வதற்கு உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் உதவி செய்தனர்.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கரைப்பட்டமுறிப்பு புதிய நகர் கிராமத்தில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் கணேஷ் இந்துகாதேவி அனைவராலும் நோக்கப்படும் வீராங்கனையாக உள்ளார். ■

# வெற்றிப் பார்ட்டியில் ரகளை– பொலிஸ் நுழைந்ததால் பரபரப்பு



ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியதையடுத்து இரு அணி வீரர்களும் இரவு மது போதை விருந்தில் கலந்து கொண்ட போது விடுதியில் பயங்கரமாகக் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்ததாகப் புகார் எழுந்ததில் பொலிஸ் தலையிட்டு விஷயத்தை முடிக்க நேரிட்டது.

இந்தச் சம்பவத்தில் இங்கிலாந்து பயிற்சியாளர் கிரகாம் த்ரோப் சிக்கியுள்ளார். அவர் பதவிக்கு ஆபத்து நேர்ந்துள்ளது. இங்கிலாந்து ஆடவர் கிரிக்கெட் அணியின் உதவிப் பயிற்சியாளர் கிரஹாம் தோர்ப், ஹோபார்ட் ஹோட்டலில் ஆஷஸுக்குப் பிந்தைய மதுவிருந்தில் பங்கேற்றதைத் தொடர்ந்து, ஹோட்டலில் தங்கியிருந்தவர்களின் புகார்களுக்குப் பிறகு காவல்துறையின் தலையீட்டைக் கண்டதைத் தொடர்ந்து அவர் பதவி நீக்கத்தை எதிர்கொண்டதாகக் கூறப்படுகிறது. அவுஸ்திரேலிய , இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளைச் சேர்ந்த வீரர்கள் காலை 6 மணி வரை மது அருந்துவது போன்ற காட்சி வீடியோ வெளியாகியுள்ளது.

இது குறித்து வெளியான தகவல்களின் படி, மதுவிருந்தில் இங்கிலாந்தின் ஜோ ரூட் மற்றும் ஜேம்ஸ் ஆண்டர்சன் அவுஸ்திரேலிய நேதன் லயன், டிராவிஸ் ஹெட் மற்றும் அலெக்ஸ் கேரி ஆகியோர் விருந்தில் கலந்து கொண்டனர். விருந்தின் வீடியோவை பயிற்சியாளர் தோர்ப் தானே எடுத்தார், மேலும் அந்த வீடியோவில் அவர் கூறியது, "நாங்கள் நேதன் லயன், ரூட், கேரி மற்றும் ஆண்டர்சன் உள்ளனர். வக்கீல்களுக்காக இதை வீடியோவாக மட்டும் தருகிறேன். காலையில் எல்லோரையும் சந்திப்போம்." என்றார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் (VCB) ஒரு அறிக்கையை வெளியிட்டது, அதில் சிரமத்திற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டதாகவும், சம்பவம் குறித்து விசாரணையைத் தொடங்குவதாகவும் தெரிவித்துள்ளது.

"திங்கட்கிழமை அதிகாலையில், இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகளின் வீரர்கள் ஹோபார்ட்டில் உள்ள ஹோட்டலின் மதுபான விருந்தில் ஈடுபட்டனர்" என்று VCB ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஹோட்டல் நிர்வாகத்திடம் மற்றவர்கள் புகார் அளித்தனர், வீரர்களின் கூச்சல் அதிகரிக்க அதிகரிக்க பிரச்சினை மூண்டது. இதனையடுத்து உள்ளூர் காவல்துறை சம்பவ இடத்திற்குச் சென்றது. ஹோட்டல் நிர்வாகமும், டாஸ்மேனியன் பொலிஸாரும் வெளியேறச் சொன்னபோது, சம்பந்தப்பட்ட வீரர்கள் அங்கிருந்து வெளியேறி அந்தந்த ஹோட்டல் அறைகளுக்குத் திரும்பினர்.

"இங்கிலாந்து அணி நிர்வாகம் மன்னிப்பு கேட்டுள்ளது. இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் இதனை மேலும் விசாரிக்கும். அதுவரை, நாங்கள் கருத்து எதுவும் தெரிவிக்க மாட்டோம்," என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இருதரப்பு வாரியங்களுக்கும் பெரிய தர்ம சங்கடத்தை உருவாக்கியுள்ளது. ■

# ஓய்வு பெறத் தயாராகிறார் சானியா மிர்சா



இந்திய நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா சர்வேதச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, 6 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர். இரட்டையர் பிரிவில் உலகளவில் நம்பர் 1 வீராங்கனையாகத் திகழ்ந்து இருக்கிறார். கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை சானியா மிர்சாதான். கடந்த ஆண்டு செப்ரெம்பரில் இரட்டையர் பிரிவில் 43 ஆவது பட்டம் வென்றார். பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் தரவுகளின்படி, சானியா மிர்சா வெற்றிப் பெற்ற மொத்த பரிசுத் தொகை $7,030,997 (சுமார் - 53 கோடி iwthiya ruupaa ) ஆகும். ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில், மகளிர் இரட்டையர் பிரிவில் நாடியாவுடன் இணைந்து ஆடிய சானியா மிர்சா தோல்வி அடைந்தார். மகளிர் இரட்டையர் பிரிவில் தோல்வி அடைந்திருந்தாலும் அடுத்ததாக ராஜீவ் ராமுடன் இணைந்து கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாட உள்ளார்.

இந்நிலையில், மகளிர் இரட்டையர் பிரிவில் அடைந்த தோல்விக்குப் பிறகு, தனது ஓய்வு முடிவை அறிவித்தார் சானியா மிர்சா. இது குறித்து பேசிய சானியா மிர்சா, "இதுவே டென்னிஸில் எனது கடைசி பருவம். என்னால் இப்போது காயமடைந்தால் உடனடியாக மீண்டுவர முடியாது. காயத்திலிருந்து மீண்டு ஃபிட்னெஸ் பெற அதிக காலம் எடுக்கிறது. 3 வயது மகனுடன் பயணம் செய்வதால், அவனுக்கும் உடல் நலக் குறைவு ஏற்படுகிறது. இந்தப் போட்டியில் ஆடும்போது கூட எனது கால் வலித்தது. அது எனது தோல்விக்கான காரணம் இல்லை. ஆனால், அதே வேளையில் என்னால் இப்போதெல்லாம் காயத்திலிருந்து மீள அதிக நாட்கள் எடுக்கிறது. எனவே இந்த ஆண்டுடன் ஓய்வுபெற முடிவு செய்துள்ளேன்" என்றார் சானியா மிர்சா. டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவில் மகளிரும் சாதிக்க முடியும் என்பதற்கு சானியா மிர்சா ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார். மகளிர் இரட்டையர் பிரிவில் அசத்தல் வீராங்கனையாக வலம் வந்த சானியா மிர்சா 2016 ஆம் ஆண்டு மார்டினா ஹிங்கிசுடன் இணைந்து ஆஸ்திரேலிய ஓபன் மகளிர் இரட்டையர் பிரிவு தொடரை வென்றார். ஒஸ்ட்ரவா ஓபன் தொடரை கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் சூவாய்ஷாங்குடன் இணைந்து தனது 43 ஆவது டிராபியை வென்றிருந்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் தர வரிசையில் அதிகபட்சமாக 27 ஆவது இடம் வரை அடைந்து சாதனை படைத்துள்ளார். சானியா மிர்சாவின் இந்த அறிவிப்பு பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சானியா மிர்சா இதுவரை 3 மகளிர் கிராண்ட்ஸ்லாம் தொடரையும், 3 கலப்பு இரட்டையர் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வென்றுள்ளார். கடந்த 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சுஹைப் மாலிக்கை திருமணம் செய்து கொண்ட சானியா மிர்சாவுக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆண் குழந்தை பிறந்தது. தனது குழந்தையுடன் பயணம் செய்வதும் தனக்குப் கடினமாக இருப்பதாக சானியா மிர்சா கூறினார். ■






சிறுவர் பகுதி

# கோழியில்லாமலே கிடைக்கும் முட்டை..!

முட்டையின் வெள்ளைக் கருவிலுள்ள புரதம் நமக்கு ஊட்டம் தரக்கூடியது. இதனால்தான் பலரும் 'ஓவால் புமின்' என்ற புரதத்திற்காக முட்டையை உணவில் தினமும் சேர்த்துக்கொள்கின்றனர்.

ஆனால், ஓவால்புமினுக்காக, ஏராளமான கோழிகளை, பண்ணைகளில் வளர்க்கவேண்டிஉள்ளது. முட்டை, முக்கால்வாசி இறைச்சி போக, மீதி எல்லாம் சுற்றுச்சூழலுக்குக் கேடுதரும் கழிவுகளாக்கப் படுகின்றன.

இந்த அவலத்தைப் போக்க, தாவரங்கள் மூலமாகவே முட்டையில் உள்ள புரதத்தை வளர்த்து எடுக்க சில விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

அண்மையில் ஹெல்சிங்கி பல்கலை மற்றும் பின்லாந்தின் வி.டி.டி., தொழின்நுட்ப ஆராய்ச்சி மையம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள், பூஞ்சையிலிருந்து ஓவால்புமின் புரதத்தைத் தயாரித்துள்ளனர். கோழியில் ஓவால்புமினை உற்பத்தி செய்ய உதவும் மரபணுவை எடுத்து, 'டிரைகோடெர் மாரீசி' என்ற பூஞ்சையில் புகுத்தி, விஞ்ஞானிகள் இதை சாதித்துள்ளனர்.

இதையடுத்து அந்த பூஞ்சை சுரந்த ஓவால்புமின் புரதத்தைச் சேகரித்து, ஒரு பொடியாகத் தயாரித்தனர்.இந்தப் பொடியை சோதித்ததில், கோழி முட்டையின் வெள்ளைக் கரு பொடியைப் போலவே பல அம்சங்களைக் கொண்டிருந்தது.



பூஞ்சைப் பொடியை முட்டைப் பொடியைப் போலவே, தண்ணீர் கலந்து அடித்து கிரீம் போலத் தயாரிக்க முடிந்தது.பூஞ்சையில் விளையும் ஓவால் புமின் புரதத்தை இந்த உலகம் உணவாக ஏற்றுக்கொண்டால் என்னவாகும்?

கோழிப்பண்ணை மற்றும் தீவனத்திற்காகப் பயன்படுத்தப்படும் நிலத்தில் 90 சதவீதம் மிச்சமாகும். பண்ணைத் தொழில்களால் வெளியேற்றப்படும் பசுமைக்குடில் வாயுக்களில் 3,0-55 சதவீதம் தடுக்கப்படும். மொத்தத்தில் பூஞ்சைப் புரதம் பூமியை மாசு குறைந்ததாக ஆக்கும்.



# நட்பின் வலிமை

ஒரு காட்டிலே யானையும் ஒட்டகச் சிவிங்கியும் நட்போடு வாழ்ந்து வந்தன. புத்திக்கூர்மையும் நேர்மையும் பிறருக்கு உதவும் பண்பும் அவற்றிடம் காணப்பட்டன. அந்தக் காட்டிலே வாழ்ந்து வந்த குள்ளநரி வஞ்சகக் குணத்தோடு அநீதியான செயல்களைச் செய்து வந்தது. யானை குள்ளநரியைத் திருத்துவதற்கு பல்வேறு அறிவுரைகளைக் கூறியது. அவற்றினைக் காதிலே வாங்கிக் கொள்ளாத குள்ளநரி, யானைமீது கோபம் கொண்டது. யானையும் ஒட்டகச் சிவிங்கியையும் பிரிக்க விரும்பியது. ஒட்டகச் சிவிங்கியிடம் சென்று ,"யானை உன்னைக் கேலி செய்கிறது. உன் கழுத்தின் உயரத்தைப் பிற விலங்குகளிடம் கிண்டலடிக்கிறது" என்று கூறியது. பின்னர் யானையிடம் சென்றது, "ஒட்டகச் சிவிங்கி உன்னைக் கேலி செய்கிறது. உன் பருமனையும் நிறத்தையும் கிண்டலடிக்கிறது" எனக் கூறியது. இருவரையும் பிரித்துவிட்ட மகிழ்ச்சியில் ஊளையிட்டது. மறு நாள் யானையும் ஒட்டகச்சிவிங்கியும் ஒன்றாக இணைந்து குள்ளநரியிடம் வந்தன. "நண்பர்களுக்குள் கேலியும் கிண்டலும் இயல்பானது. எத்தகைய கருத்தினையும் வெளியிட எனது நண்பனுக்கு உரிமை உண்டு. உடற்கேலியினையோ தனிப்பட்ட விரோதத்தினையோ வெளிப்படுத்தும் அளவுக்கு என் நண்பன் இழிந்தவன் அல்ல" என்று யானை கூறியது. "உன் பண்பினை மாற்றிக் கொண்டால், உன்னையும் நட்பாகக் கொள்ளத் தயாராகவே உள்ளோம்" என்றது ஒட்டகச் சிவிங்கி. குள்ளநரி தலைகுனிந்தது.

**ச.கனிஷா**
தரம்-08
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## விடுகதை

01.அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
**நீர்**

02.அழகான பொண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதி நாள் குறைவாள் மீதி நாள் வளர்வாள் அது என்ன?
**நிலா**

03.வெட்டிக் கொள்வான் ஆனால் ஒட்டிக் கொள்வான் அவன் யார்?
**கத்தரிக்கோல்**

04.மூன்று எழுத்துப் பெயர் முற்றிலும் வெள்ளை நிறம் அது என்ன?
**பஞ்சு**

05. எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல் அது என்ன?
**விக்கல்**



## குடும்பம்

குடும்பம் எங்கள் குடும்பம்
அன்பு நிறைந்த குடும்பம்
ஒற்றுமை உள்ள குடும்பம்
பண்பு கொண்ட குடும்பம்
என்றும் கூடி வாழ்வோம்
பிரிந்திடாமல் வாழ்வோம்

**ஷபின்**

## ரோபோவுடன் பறக்கும் ஆளில்லாக் ஹெலிகொப்டர்

மோட்டார் பைக் தயாரிப்பிலிருந்த கவாசாகி, திடீரென குட்டி ஹெலி கொப்டர் தயாரிப்பில் இறங்கிவிட்டது. அதன் 1,000 சி.சி, நிஞ்சா ரக பைக்கின் இயந்திரத்தை வைத்தே 'கே.ரேசர் எக்ஸ் 1 பி' என்ற ஹெலிகாப்டரை அண்மையில், கவாசாகி வெள்ளோட்டம் பார்த்துள்ளது.

இந்த ஹெலிகொப்டர் ஆளில்லாமல் பறக்கும் தானோட்டி ரகம். அதுமட்டுமல்ல. ஒரு சிறிய ரோபோவும் இந்த குட்டி ஹெலிகொப்டரில் இருக்கும். அது ஹெலிகொப்டரில் சரக்கை ஏற்றும், அதனுடனேயே போய் தரையிறங்கி, முகவரிதாரருக்கு சேர்க்கவேண்டிய தூதஞ்சல்களை எடுத்துப் போய் கொடுத்துவிட்டு, மீண்டும் ஹெலிகொப்டரில் ஏறிக் கொள்ளும்.




எதற்கு இந்த திடீர் மினி ஹெலிகொப்டர் முயற்சி? உலகெங்கும் சரக்குப் போக்குவரத்தில் வேலையாட்களுக்குத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. மேலும் போக்குவரத்து நெரிசல், ஆறு, மழை வெள்ளம், கடல் போன்ற புவியியல், தட்பவெப்பத் தடைகளைத் தாண்டி, சரக்குகளைப் போடும் ஒரு வாகனமாக சிறிய ஹெலிகொப்டர்களை தேர்ந்தெடுத்திருப்பதாக கவாசாகியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வாகனம் ஒரு கலவைப் பிறவி. ஹெலிகொப்டரைப் போல தலைக்கு மேல் சுழலும் விசிறிகள் வாயிலாக செங்குத்தாக தரையிலிருந்து கிளம்பவும், இறங்கவும் ரேசரால் முடியும். ஆனால், முன்னோக்கிச் செல்வதற்கு, விமானம் போல வலமும் இடமும் இறக்கைகளும் இயந்திர விசிறிகளும் உள்ளன.

பேரிடர் காலங்களில், 100 கிலோ எடையைச்சுமந்து பறக்கும்திறன்கொண்ட கவாசாகியின் ரேசர் ஹெலிகொப்டர் மருந்துகள், உணவு, உடை போன்றவற்றை வேண்டியோர்க்குக் கொடுக்க உதவும். அதுமட்டுமல்ல, தீவுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் அத்தியாவசியங்களைக் கொண்டு தர இது உதவும்.





**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 22.01.2022 அன்று வெளியிடப்பட்டது.